www.tamilarangam.net

# சமர்

இதழ் 9





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உள்ளே.....


1. உங்களுடன் சமர் 3
2. மனிதத்தின் கடிதமும் சமரின் பதிலும் 4
3. வாசகர் கடிதம் 6
4. மூன்றாவது பாதைக்கான திட்டம் 9
5. மீண்டும் ஒரு புலியை உருவாக்க வேண்டுமா 10
6. தேசிய விடுதலைப் போராட்டமும் தேசிய சக்திகளும் 17
7. தமிழ் மக்களின் போராட்டம் வெறும் பாதுகாப்பு யுத்தம் மட்டுமா? அல்லது அரசியல் அதிகாரத்துக்கான போராட்டமா ? 26
8. உயிர்ப்பின் திசை மாற்றம். 55


வாசகர்களே உங்களிடமிருந்து ஆக்கங்களையும், ஆரோக்கியமான விமர்சனங்களையும் எதிர்பார்க்கிறோம்.

| | | | |
|---|---|---|---|
| பிரான்ஸ் | 6 | பிரதிகள் | 60 F |
| | 12 | பிரதிகள் | 120 F |
| அன்பளிப்பு ஐரோப்பிய நாடுகள் | 6 | பிரதிகள் | 100 F |
| | 12 | பிரதிகள் | 200 F |
| ஏனைய நாடுகள் | 12 | பிரதிகள் | 225 F |


தொடர்பு முகவரி:–

"SAMAR"
87 , RUE DE COLOMBES
92600 - ASNIERES SUR SEINE
FRANCE.


சந்தா அனுப்பவேண்டிய தபாற்கணக்கு :–

2.674.73 M
CENTRE DE CHEQUEES POSTAUX
75900 PARIS CHEQUES
FRANCE

www.tamilarangam.net

## உங்களுடன் சமர்---------

புரட்சி வரலாற்றில் பங்கெடுத்த தலைமைகள் செய்த சாதனைக்கு ஈடாக தவறுகளையும் செய்யத் தவறியதில்லை என்பது நாம் அறிந்த, படித்த, தரிசித்த வரலாறுகளாகும்.

இந்த வரிசையில் பாலஸ்தீன மக்களின் தேசமீட்புப்போரில் ஏற்பட்டுள்ள, "திருப்புமுனை" என வர்ணிக்கப்படும் தேக்கநிலையை, நாம் முற்றிலும் முரண்பட்ட நிலையிலிருந்து தரிசிக்கும் இவ்வேளையில் "சமர்" தனது 9 ஆவது இதழை வெளியிடுகின்றது.

இரண்டு தலைமுறைக்கும் மேலான போராட்ட வரலாற்றைக் கொண்ட பாலஸ்தீன மக்களின் தேச மீட்புப் போராட்டத்தில் குறிக்கோளையும், சர்வதேசப் புரட்சிகர சக்திகளின் மதிப்பீட்டையும், பாலஸ்தீன மக்களின் மதிப்பிடமுடியாத தியாகங்களையும் பெரிது படுத்தாது யசீர் அராபாத்தும் ராபின் அரசும் செய்து கொண்டுள்ள இவ்வொப்பந்தம் அடிப்படையில் பாலஸ்தீனர்களின் எவ்வித தனித்துவத்தையும் கொண்டதல்ல என்பது வெளிப்படையே.

இஸ்ரேல் என்னும் ஒரு ஆக்கிரமிப்பு நாடு உருவாகியதிலிருந்து இன்றுவரை அரபு மக்களோடும், மற்றும் மனித நாகரிகமற்ற சர்வதேச விவகாரங்களிலும், காட்டுமிராண்டி அரசாகவும், மத்தியகிழக்கிலுள்ள அமெரிக்காவின் பாசிச பேட்டை ரௌடியாகவுமே செடற்பட்டுவந்துள்ளது.

பாலஸ்தீனர்கள் தங்கள் தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கும் உரிமையற்ற, இஸ்ரேலிய ஆட்சி நிர்வாகத்தைப் பரவலாக்கும் தன்மை கொண்ட (ETHNIC POWERLESS LOCAL GOVERNMENT) அதிகாரப்பரவலாக்கல் ஒப்பந்தத்தைப் பெறுவதற்கு PLO தலைமை முந்தியடித்துக் கொண்டு இஸ்ரேல் நாட்டை அங்கீகரிக்கின்றது.

இது ராஜதந்திரரீதியிலும், மற்றும் அனைத்துப்புரட்சிகர, முற்போக்குசக்திகள் மத்தியிலும் PLO வின் சரணாகதிப் போக்கையிட்டு விசனமேற்பட்டுள்ளது. முஸ்லிம்,அரபு நாடுகள் பாசிச இஸ்ரேலோடு ராஜரீக உறவுகளை மேற்கொள்ளாமலும், அந்நாட்டின் தூதுவர் இஸ்தாபனத்தை நிராகரிப்பதும் பாலஸ்தீன மக்களுக்குக் காட்டிவந்த தார்மீக ஆதரவின் மூலம், இஸ்ரேல் என்னும் நாட்டை இந்நாடுகள் நிராகரித்தே வந்துள்ளன. இஸ்ரேலின் ஆழுமைக்குட்பட்ட இவ்வொப்பந்தத்தைச் செய்ததனூடாக மத்தியகிழக்கில் தொடர்ந்தும் அமெரிக்கா ஏகாதிபத்தியத்தினதும், அதன் கூட்டாளிகளதும் இருப்பைப்பேண உதவியதோடு, ஏனையநாடுகளிலுள்ள முதலாளித்துவ தரகுமுதலாளித்துவ அரசுகள், தங்கள் நாட்டு மக்களெதிர்ப்பின்றி இஸ்ரேலோடு உறவுகொள்ளவும் உதவப்பட்டுள்ளது.

இச் செயலினூடாக பலஸ்தீன மக்களின் விடுதலை தற்காலிகமாகக் காட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது. இஸ்ரேலிய பாசிச அரசின் அதிகாரத்துக்குட்பட்ட நிர்வாகத்தை ஏற்கத்துணிந்து விட்ட PLO சர்வதேச அரங்கில் ஒடுக்கப்பட்ட மக்களின் ஆதரவை இழப்பதோடு, தேசிய, சர்வதேச அரசியலில் எவ்வித முற்போக்குப் பாத்திரத்தையும் வகிக்கக் கூடிய தனித்துவத்தையும் இழக்கின்றது.

இந்நிலையைத் தவிர்த்து பலஸ்தீனமக்களின் நாட்டை மீட்கவும், சமூக, பொருளாதார அரசியல் விடுதலையை வெல்லவும், இன்றைய சமரசத்தலைமையை ஓரங்கட்டி உண்மையான விடுதலையை வெல்லவும் இன்றைய சமரசத்தலையை ஓரங்கட்டி உண்மையானை விடுதலையை வெல்ல தீவிரப் புரட்சியாளர்கள் முன்வரவேண்டும்.

தற்போது இவ்வொப்பந்தத்தின் மூலம் அதிருப்தியுற்ற புரட்சிகர சக்திகள் மத்தியில் ஈரான் சார்பு இஸ்லாமிய மத அடிப்படை வாதிகளின் கை ஓங்கியிருப்பது வருந்தத்தக்கதே. இம்மத அடிப்படை வாதிகளைக் களைந்தெறிய வேண்டிய அவசியமும் பலஸ்தீனர்கட்கு உண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேற் கூறிய ஒப்பந்தம் போன்ற பல ஒப்பந்தங்களும் பலவட்டமேசைகளும் சதுரமேசைகளும் இலங்கையின் தமிழ்த்தேசிய இனவிடுதலை தொடர்பாக வந்துபோயுள்ளது. இதன் மூலம் பலதரப்பட்ட அனுபவங்களையும் நமது மக்கள் பெற்றுள்ளனர்.

இவைகளைக் கவனத்தில் கொள்ளாமலோ என்னவோ "சுவடுகள்" சஞ்சிகையில் இடைக்காலத் தீர்வு ஒன்றை முன்வைக்கும் திட்டத்தினை நோர்வே அரசு+அரசியல்வாதிகளினூடாக முன்வைக்க முனையப்பட்டிருந்தது.

"இடைக்காலத்தீர்வு" என்பது ஒடுக்கப்படும் மக்களாலோ, போராடும் மக்களாலோ முன்வைக்கப்படுவதல்ல. போராட்டத்துக்கு ஈடுகொடுக்க முடியாத ஒடுக்கும் அரசுகள் வேறு பல நிர்பந்தங்களாலும் சில தீர்வுத்திட்டங்களை தயாரிக்கின்றன. அல்லது இவர்கள் சார்பாக ஒரு மூன்றாவது நபர் (நாடு) தயாரிக்கின்றார்.

இத்திட்டத்திலுள்ள சாதக, பாதகங்களைக் கருத்திற் கொள்வதன் மூலம், சம்மந்தப்பட்ட சமூகத்தின் அடிப்படைக் குறிக்கோளை நோக்கி தொடர்ந்து முன்னேற முடியும் என அச்சமூகம் (தாபனம்) கருதின் மேற்குறிப்பிட்ட திட்டத்தை புரட்சிகர தாபனம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வது இயல்பே. இதையே இடைக்காலத்தீர்வு எனக் குறிப்பிடுகின்றனர். மேற்படி தீர்வின் மூலம் சமூக முரண்பாட்டைத் தீர்க்கவோ, நமது நாட்டிலுள்ள இன முரண்பாட்டைத்தீர்வுக்கு கொண்டுவரவோ ஒரு போதும் முடியவே முடியாது. சுவடுகள் ஆசிரியர் குழுவும், எதிர்காலத்தில் இது போன்ற இடைக்காலத்தீர்வுகளை முன்வைக்கவிருக்கும் தேச பக்தர்களையும் தோழமையுடன் நாம் கோருவது யாதெனில் "இடைக்காலத்தீர்வுகள்" முன்வைக்கப்படுவதில், நமது நாட்டில் எப்போதும் பஞ்சம் இருந்தது இல்லை. 1948 இற்கு முந்திய அரசியலில் நாம் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம் எனின், தமிழீழமோ, அதிகாரப் பரவலாக்கலோ, இடைக்காலத்தீர்வோ அவசியமற்றது.

நாம் 1993 யைக் கடந்து கொண்டிருப்பதால் தமிழீழத்தை வெல்ல நிர்பந்திக்கப்பட்டுள்ளோம். இதுவே நாம் கோரும் நிரந்தரத் தீர்வு, இதுவே முழு இலங்கைக்கும் நல்ல தீர்வாகும்.

---

## மனிதத்தின் கடிதமும் சமரின் பதிலும்.

14.6.93

"சமர்" ஆசிரியர் குழுவினர்க்கு!

தோழமையுடன் எழுதிக்கொள்வது,

உங்கள் (திகதியிடப்படாத) கடிதமும், அத்துடன் இணைந்த "தேசிய விடுதலைப் போராட்டமும் தேசிய சக்திகளும்" எனும் (A4 அளவுப் பேப்பரில்) 18ப் பக்கக் கட்டுரை ஒன்றும் கிடைக்கப் பெற்றோம். மேற்படி உங்களது கட்டுரையில் விவாதத்துக்குரிய அல்லது கருத்தாடலுக்குரிய பண்புகள் மீறப்பட்டுள்ளமையினால் எமது பத்திரிகையில் பிரசுரிப்பதில்லை என்ற ஒருமித்த முடிவுக்கு நாம் வந்துள்ளோம். (அதேவேளை உங்களது கருத்தை ஒத்த மாறனின் (விவாதப்பண்புகள் பலப் பட்டுள்ளமையைக் காணலாம்) கட்டுரை ஒன்றை மனிதம் இதழில் பிரசுரிக்க முடிவு செய்துள்ளமையைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.)

மேலும் கருத்தாடல் என்பது சரியான கருத்துக்களைக் கண்டறிவதற்கும், கருத்துப்பரிமாற்றங்களைச் செய்து கொள்வதற்கும் உதவ வேண்டிய ஒன்று. இதன் விளைவாய் (தூய்மையான)சுயவிமர்சனத்தை மேற்கொள்வோர் மத்தியில், பிழையான கருத்துக்களில் இருந்து விடுபட்டு சரியான கருத்துக்களை உள்வாங்கிக் கொள்ளும் நிகழ்வுகள் இயல்பாக இடம் பெறவதும் சாத்தியம். மாறாத மேதாவித்தனங்களை வெளிப்படுத்துவதற்கோ, மாக்சிசத்தில் வல்லவர்

www.tamilarangam.net

யார் என்பதை நிரூபிப்பதற்கோ, விரும்பாத அல்லது எதிர்மறைக் கருத்துடையவர்களைத் திட்டித்தீர்ப்பதற்கோ கருத்தாடலைப் பயன்படுத்தக் கூடாது.

இன்னும், உங்களுடைய விவாதங்களிலோ, அல்லது கருத்தாடலிலோ இவற்றிற்குரிய பண்புகள் பேணப்படுவதாகத் தெரியவில்லை. அவ்வகையில் நாம் உங்களுடனான விவாதத் தொடரை இத்துடன் முடித்துக்கொள்ளுகின்றோம். விவாதப்பண்புகளை பேணுகின்ற முறைமையினை நீங்கள் வெளிப்படுத்தும் பட்சத்தில் உங்களுடனான விவாதத்தை தொடர்வது பற்றி மீள் பரிசீலனை செய்வோம்.

இவ்வண்ணம்
வி.லோகதாஸ்
(மனிதம் ஆசிரியர் குழு சார்பாக)

பி.கு. உங்கள் வேண்டுதலுக் கிணங்க உங்கள் கட்டுரையை இத்துடன் திருப்பி அனுப்பியுள்ளேன்.

வி.லோகதாஸ்.

14.6.93 திகதியிடப்பட்ட "மனிதத்தின்" மேற் குறிப்பிட்ட கடிதமும், அத்தோடு எமது கட்டுரையும் பிரசுரிக்க முடியாது எனக்கூறி பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்திருந்தமை மீளப் பெற்றோம்.
கடந்தகாலங்களிலிருந்து "மனிதத்தின்" திரிபுவாதக் கருத்துக்களை நாம் அம்பலப்படுத்திவருவதிலும், கருத்துக்களின் பிற்போக்கு,முற்போக்கு,திரிபு,திரிபற்றது என்னும் மையத்திற்கப்பாற்பட்டு, எம்மீதுள்ள ஆத்திரத்தின் வெளிப்பாடாகவே போலியான காரணம் காட்டி நிராகரித்துள்ளனர் என்னும் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட கடிதத்தை விமர்சிக்க முற்படுகின்றோம். நாம் எமது கடிதத்திற்கு திகதியிடாத ஒரு விடையம் தவறானது தான் என்பதை ஒத்துக் கொள்கின்றோம். இது எமது கவனக்குறையால் ஏற்பட்ட ஒன்றாகும்.
தொடர்ந்து நிராகரிப்புக்குரிய காரணத்தை கவனிப்போம். "விவாதத்துக்குரிய அல்லது கருத்தாடலுக்குரிய பண்புகள் மீறப்பட்டுள்ளமையால்" பிரசுரிக்கமுடியாது என்ற கூறியுள்ளனர்.
நாம் எச்சந்தர்ப்பத்திலும், அல்லது எந்தவொரு கட்டுரையிலும் மனிதர்களுக்குள்ளுள்ள பொதுவான பண்பைப்பேணும் தார்மீகப்பொறுப்பைக் கடைப் பிடிப்பவர்களே, ஆனால் புரட்சிகர வர்க்க அரசியல் (பாட்டாளிவர்க்க) பண்பு என்பது வர்க்கம் சார்ந்ததாகும். இங்கே நாம் விவாதித்த விடயம் (மனிதம்+சமர்)நேரெதிர் முரணுள்ள இரண்டு கருத்துக்களாகும். இவ்விரண்டு கருத்தும் வெவ்வேறு இரண்டு வர்க்கங்களின் நலன் சார்ந்ததே.
மனிதத்தின் பார்வையில் பண்பு என்பது என்ன? எந்த அடிப்படையில் பண்பை வரையறுத்துள்ளார்கள்.
"மனிதம்" பின்பற்றும் குட்டிபூர்சுவாப் பண்பை பாட்டாளிவர்க்கம் ஏற்பதல்ல. பூர்சுவாக்களின் பண்பான முகம் முறியாத, முதுகுக்குப் பின் கதைத்தல், தேனொழுகப் பேசி நடித்தல்....போன்றவைகளை பாட்டாளிவர்க்கம் நிராகரிக்கின்றது. அனைத்தையும் கறாராகக் கையாள விரும்புகின்றது.
எமது கருத்தையொத்த மாறனின் கட்டுரையைப் பிரசுரிப்பதாகவும், அதில் விவாதப்பண்பு பேணப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.
மனிதம் 22 இல் வெளியான மாறனின் கட்டுரை தொடர்பான சில விமர்சனம் எமக்குண்டு.
விமர்சனத்துக்குரியவை என நாம் கருதும் விடயங்களில், மனிதத்துக்கு உடன்பாடு இருந்தமையால் மாத்திரமே இதைப்பிரசுரித்தனர்.
ஆனால் மனிதத்தின் சந்தர்ப்பவாத அரசியலை படம் பிடித்துக்காட்டும் மாறனின் சுயவிமர்சனம், இதைத் தொடர்ந்து பிரசுரமாகின்றது.
மாறனின் கட்டுரைக்கும், எமது கட்டுரைக்குமிடையில் உள்ள, அடிப்படையில் மானிடத்தை இம்சிக்கும் எமது பண்பு பேணுமையை குறிப்பாகவும் சிறப்பாகவும் சுட்டிக்காட்டத் தவறியது ஏன்?

"மேதாவித்தனங்களை வெளிப்படுத்துவதற்கோ, மார்க்சிசத்தில் வல்லவர் யார் என்பதை நிரூபிப்பதற்கோ, அல்லது எதிர்மறைக்கருத்து உடையவர்களைத் திட்டித்தீர்ப்பதற்கோ, கருத்தாடல் பயன்படுத்தப்படக்கூடாது" எனக்குறிப்பிடும் மனிதம், எதிர்மறைக்கருத்துக்களை விவாதிப்பதைத் தவிர்த்து, உயர்ந்தநிலையில் இருந்து பிரச்சனையை அணுகுவதை தங்களை அறியாமலேயே வெகுசிறப்பாகச் செய்துள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எம்முடனான விவாதத்தை முடித்துக் கொள்வதாகக் கூறிய கூற்றை நடைமுறை யதார்த்தத்தோடு ஒப்பிடுவோமானால் அப்பட்டமான வர்க்கபேதங்கள் கொண்ட கருத்து வெளிப்பாட்டை நாம் காணலாம். எவ்வித அதிகாரமுமற்ற, ஐரோப்பிய நாடுகளில் தஞ்சமடைந்த பல தமிழ் அரசியல் நோக்கங் கொண்டோரால் பல சஞ்சிகைகள் வெளியிடப்படுவதும் பல அரசியல் கருத்துக்கள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதற்கும் ஒவ்வோர் குழுவினரிடமும் ஒவ்வொரு விதமான நோக்கங்கள் கூட இருந்திருக்கமுடியும். ஆனால் கருத்தை கருத்தால் வெல்ல சில சஞ்சிகைகளும் நபர்களும் காரசாரமான விவாதங்களில் ஈடுபட்டது, ஒவ்வோர் குழுவின் வர்க்க நலன் சார்ந்ததாகக் கூட இருந்திருக்கமுடியும். (சமர் உட்பட) ஏனெனில் அந்த அளவுக்கு விவாதத்துக்குரிய உரிமையின் அவசியத்தை ஈழ அரசியல் எமக்கு தெளிவு படுத்தியிருந்ததே காரணம்.

ஆனால் விவாதத்திலிருந்து எம்மை ஒதுக்கி விட்டதாகிய அறிவிப்பை நோக்குமிடத்து இவர்களிடம் அரசியல் அதிகாரம் இருப்பின், கடந்தகால PLOT, நிகழ்கால LTTE, IPKF காலத்து இந்திய அடிவருடிகள் ஆகியோரின் ஞாபகம் ஒரு கணம் மனத்திரைக்கு வந்துமறைகின்றது. எம்மை மேதாவிகள் எனக் கண்டுபிடித்த மேதாவிகளுக்கு நாம் இதன் ஊடாக கூறுவது யாதெனில் நாம் கருத்துக்கள் மீதோரு கருத்தை வைத்திருக்கின்றோம். நாம் யாரையும் ஒதுக்குவதையோ, ஓரங்கட்டுவதையோ நோக்கமாகக் கொள்ளவில்லை விவாத அரங்கிலிருந்து சமரை யாரும் ஒதுக்கிவிடமுடியாது. சமர் அனைத்துப் பிரச்சனை மீதும் அனைத்துக்கருத்தின் மீதும் தொடர்ந்து கருத்துக்கூறும். திரிபுவாதத்தை எதிர்க்கும். வேடதாரிகளை அம்பலப்படுத்தும். பாட்டாளிவர்க்கப் போராட்டத்தை உயர்த்தித் தொடர்ந்து போராடும். இந்நிலையிலிருந்து ஒதுங்கமுடியாது நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

- சமர் ஆசிரியர் குழு -

## வாசகர் கடிதம்.

14.3.93

மனிதம் இதழில் வெளிவந்த எனது கட்டுரை தொடர்பாக சில கேள்விகள் எழுப்பியிருந்தீர்கள் நான் உங்களுக்கு எழுதிய முதல் கடிதத்தில் இது பற்றி சிறு விளக்கம் அளித்திருந்தேன். அது போதுமானதாக அமையவில்லையென இம்மடல் மூலம் உணர்கின்றேன்.

(1) "மனிதம் இதழ் மீது திரிபுவாதிகள் என முத்திரை குத்தியது பற்றி விளக்கமளிக்கின்றேன்.

(2) "சமர் சஞ்சிகைக்குழு மனிதம் குழுவினரை திரிபுவாதிகள் என முத்திரை குத்தியமை

என்ற வகையில் எனது கட்டுரையில் கருத்துக்கள் வெளிப்பட்டு இருந்தன.

புலம்பெயர்ந்த நாடுகளில் வருகின்ற சஞ்சிகைகளில் அநேகமானவை ஒரு கட்சியினது வெளியீடு போல தெளிவான ஒரு தத்துவார்த்த அடிப்படையை மையம் கொண்டு வெளிவருவதில்லை. வேறுபட்ட கண்ணோட்டம் கொண்ட கட்டுரைகள் ஒரே சஞ்சிகையில் வெளிவருகின்றன. விவாதத்தை தூண்டுவதற்காக சில சஞ்சிகைகள் கட்டுரைகளை பிரசுரிக்கின்றன. உதாரணமாக பனிமலர்,82 இல் "படிகள்" சஞ்சிகை வெளியிட்ட 6 கட்டுரைகளை பிரசுரித்து வருகின்றது. தேடல் இதழில் பாதுகாப்புப் பேரவையின் ஐக்கிய இலங்கையை வலியுறுத்துகின்ற கட்டுரையொன்று விவாதத்துக்காக வெளியாகியது. பனிமலர் ஆசிரியர் குழு எவ்வாறு எதிரும் புதிருமான ஒன்றுக்கொன்று பதிலளிக்கின்ற அக்கட்டுரைகளுக்கு பொறுப்பாக கருத இயலாதோ, (அதேபோல தேடலில் அடுத்த தமிழீழத்தை வலியுறுத்துகின்ற பதில் வந்தது) தேடல் ஆசிரியர் குழுவினையும் இக் கட்டுரைகளுக்கு பொறுப்பாகவோ அக்கருத்தை இவ் ஆசிரியர் குழுக்கள் பிரதிபலிப்பவையாக கூறமுடியாதோ (ஏனெனின் எதிரும் புதிருமான கருத்துக்களை பிரசுரித்து வருகின்றார்கள்.) அவ்வகையிலேயே விவாதத்துக்காக என வெளியிடப்படும் கட்டுரைகளுக்கு அக் கட்டுரையாளர்களே பொறுப்பாளர்கள் என்பதே எனது கணிப்பாகும். அக் கணிப்பீட்டின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடிப்படையிலேயே "மனிதம் 21" எனது பார்வைக்கு கிடைப்பதற்கு முன்பாக (பெப்ரவரி வரையில்) நான் அக்கட்டுரையை எழுதியிருந்தேன். எனது கட்டுரையானது மனிதம் மீதான "சமர்" இனது விமர்சனத்தை மையம் கொண்டதல்ல. நான் கொண்டிருந்த கணிப்பீட்டின் அடிப்படையில் அம்பு இடம் மாறியிருப்பதாக அதாவது கட்டுரையாளர்கள் கரிகாலனோ, மு.சிவகுமாரனோ தான் திரிபுவாதிகளாக விமர்சிக்கப்பட வேண்டுமெனவே நான் கருதியிருந்தேன்.ஏன் எனில் "மனிதம் 21" இல் வெளியாகிய சம(ர்)ருக்கு மறுப்பு என்னும் கட்டுரையில் மனிதம் ஆசிரியர் குழு வெளிப்படுத்திய கருத்துக்கள் கரிகாலன், மு.சிவகுமாரன் போன்றோரது மார்க்சிய-லெனினிய விரோதக் கருத்துக்களுடன் திரிபுவாதக் கண்ணோட்டத்துடன் அவர்களுக்கிருக்கின்ற உடன்பாட்டை காட்டுகின்றது. முதலில் மனிதம் இதழ் கரிகாலனினது கட்டுரையில் விவாதப்பகுதி எனப் போடாததே தமது தவறு என்பதை ஏற்றே எனது கணிப்பீடு இருந்தது. மனிதம்-21 இல் அக்கட்டுரைக்கு அதன் உள்ளடக்கங்களுக்கு பொறுப்பேற்று விமர்சனம் அளித்தபின் "மனிதம் குழு இனரை சமர் திரிபுவாதிகள் என முத்திரை குத்தியதில்" என நான் முன்னர் குறிப்பிட்டது தவறானதாகிவிட்டது என ஏற்றுக்கொண்டு சுயவிமர்சனம் ஏற்கின்றேன். எனினும் மனிதம் 21 இல், திரிபுவாதம்,முதலாளித்துவ மீட்சி, மாவோவினது வரையறுப்புகள் பற்றிய அவர்களது தரப்புக்கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்ட பின்பே அவர்களது அடிப்படையை கணிப்பிடுவது சாத்தியமாகின்றது என்பதுவும், ஒரு சஞ்சிகை விவாதப்பகுதிக்காக என்று வெளியிடுவதை வைத்து தீர்மானிக்க இயலாதென்பதுவுமே எனது அபிப்பிராயமாகும். நான் உங்களுக்கு எழுதிய முதல் கடிதத்தில் எனது கட்டுரை வெளியாகும் பட்சத்தில் மனிதத்துக்கு சமரினது அணுகுமுறை பற்றி நான் குறிப்பிட்டதில் இருந்த தவறுபற்றி எழுதுவதாக குறிப்பிட்டிருந்தேன். அவ்வகையில் மனிதம் இதழுக்கு தங்களது விமர்சனம் பற்றி நான் கட்டுரையில் குறிப்பிட்டவற்றிற்கான எனது நிலைப்பாட்டை விரைவில் அனுப்பிவைப்பேன். எனவே மனிதம் இதழைப் பொறுத்தவரை திரிபுவாதிகள் என சொன்னதில் முத்திரை குத்தியது என நான் கணிப்பிட்டது தவறானதாகுமென சுயவிமர்சனம் ஏற்கின்றேன். நான் உங்களுக்கு எழுதியதில் நான் திரிபுவாதத்திற்கு எதிரான உங்கள் உறுதியான போக்குடன் உடன்பட்டிருந்தேன். அதற்கும், முன்பு மனிதம் கட்டுரையில் குறிப்பிட்டதற்கும் மாறுபாடு எதுவுமில்லை. மனிதம் மீதானது இடம் மாறிய தவறான தாக்குதல் என்பதே எனது அப்போதைய கருத்தாக இருந்தது. அதனாலே "மனிதம் குழுவை திரிபுவாதிகள் என முத்திரை குத்தியதில் இருந்த தவறு" என குறிப்பிட்டேன். திரிபுவாதப் போக்குகளுக்கு எதிரான உங்கள் விமர்சன அணுகுமுறையில் நான் முழு உடன்பாடு கொண்டுள்ளேன்.

(2) "மாற்றுக் கருத்துகளுக்கு கருத்துகளால் முகம் கொடுக்கும் பண்பை வலியுறுத்துகின்ற சந்தடி சாக்கில்" என்ற வரியை நான் பாவித்ததில் நான் சமர் இனது விமர்சனம் பற்றி அதில் நான் கணக்கில் கொள்ளவில்லை. மு.சிவகுமாரன் அக்கருத்தைக் கூறிக்கொண்டே திரிபுவாதத்தை புனிதமாக்குவதையே குறிப்பிட்டு நின்றேனேயொழிய "சமர்" இனது விமர்சனம் பற்றி அதில் நான் குறிப்பிடவில்லை. அக்கட்டுரை ஆனது எழுதியதின் பின்பாகவே சமர் இதழ்கள் எனக்கு கிடைக்கப் பெற்றது. எனினும் அக்கட்டுரையில் அவ்வரிகள் சமர் இனது விமர்சனம் மீதானதாக தோற்றம் கொள்வதாக இருப்பின் அதற்காக சுயவிமர்சனத்தை கோருகின்றேன்.

எனது அப்போதைய அபிப்பிராயப்படியும், மனிதம் குழுவை திரிபுவாதிகள் என குறிப்பிட்டதில் இருந்த தவறென்றே எழுதியிருக்க வேண்டும். முத்திரை குத்தியது என்ற பதம் முழுமையாக தவறானதாகும். மு.சிவகுமாரனினது கட்டுரைக்கு மறுப்பு எழுதுவதை முதன்மைப்படுத்தி மனிதம் மீதான சமரினது விமர்சனத்தை ஆழ்ந்த கவனத்திற் கொள்ளாது வரிகளைக் கையாண்டமைக்கு சமர் குழுவிடம் சுயவிமர்சனத்தை கோருகின்றேன்.

விமர்சனங்கள் தேவையை ஒட்டி கடுமையானதாக அமையலாம் என்பதையும் தேவைக்கேற்ப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அம்பலப்படுத்தல் செய்வதற்கு எல்லரையறைகளின் மூலமும் இனங்காட்டுவது தவறல்ல என்பதே எனது கருத்து. அவ்வகையில் முத்திரை குத்தல் என்ற பதம் என்னால் ஆழ்ந்த கவனமின்றி பயன்படுத்தப்பட்டதையிட்டு சுயவிமர்சனம் செய்கின்றேன்.

-மாறன்-

சமர் வாசகர்கட்கு

NLFT கட்டுரை வெளியிடுவதை நிறுத்தியுள்ளோம். முன்னைய NLFT அங்கத்தவர்கள் வைத்த சில விமர்சனத்தின் அடிப்படையில் கட்டுரையின் வடிவத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்பதால் நிறுத்தியுள்ளோம். ஆனால் இக்கட்டுரையை நாம் தனியான ஒரு வெளியீடாக விரைவில் வெளியிட உத்தேசித்துள்ளோம்.

- சமர் ஆசிரியர் குழு -

மாசேதுங் தொடர்பாக ஜெயபாலன் கூற்றுக்கு பதில் அளிக்கும் போது மா ஓ மீது பெண்கள் தொடர்பானது நடந்ததாக அறிவதாகவும் கூறியிருந்தீர்கள். எங்கே? எப்போது? என கேள்வி எழுப்புவதை இங்கு நான் முறையாகக் கருதவில்லை.

மாசேதுங் ஆசிரியர் பயிற்சிக் கால கட்டத்தில் ஒரு பெண்ணைக் காதலித்தார் எனவும், பின்பு அவர்கள் இருவருக்கும் கருத்து முரண்பாடுகளால் சேர்ந்து வாழ முடியாமல் போனது எனவும் பின்னர் சாங்கே செக்கின் படையினால் அவரது மனைவியும் தங்கையும் கொல்லப் பட்டதாகவும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றில் படித்திருந்தேன்.

இறுதிக் காலத்தில் "நால்வர் குழுவில்" ஒருவரான சியாங்சிங் என்பவர் மா ஓ வின் மனைவியாக இருந்தார் எனவும் அறிகின்றோம். இதிலிருந்து ஒருவர் உயிருடன் இருக்கும் போது இன்னொரு பெண்ணுடன் உறவு வைத்திருந்ததாக பொருள்படாது என்று கருதுகின்றேன். எனவே அவரது வாழ்க்கையில் சீரழிந்த கலாச்சாரப் பாதிப்புக்களை பின்பற்றி இருப்பின் சீன சமுகக் குறைபாடுகளை தனது அனுபவமாக தொகுத்திருக்க முடியாது. அவர் கட்சியில் ஆரம்பத்தில் இருந்து நீண்ட படை நடைப்பயை முன்னெடுக்கும் வரையும் கட்சிக்குள் சிறுபான்மையாக இருந்தார். இத்தகைய குறைபாடுகள் இருப்பின் அவரை தலைமைக்கு கொண்டு வந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் இவற்றை டெங் கும்பல் "நால்வர் குழுவில்" ஒருவரான சியாங்சிங் என்பவரின் மீது சுமத்தும் குற்றச்சாட்டுகள் மாசேதுங்குடன் சம்மந்தப்படுவதால் அவர் மீது விமர்சனம் நடந்ததாக பொருளாகாது. இத்தகைய இன்னும் ஒரு உதாரணத்தை லெனினின் வாழ்க்கை வரலாற்றை திரைப்படமாக எடுத்தபோது அவருக்கு ஒரு காதலி இருந்தார் , என்ற மாதிரி சித்தரிக்கப்பட்டிருந்ததும் கவனிக்கத்தக்கது. மா ஓ விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவர் இல்லை.

டெங் கும்பல் மா ஓ மரணத்தின் பின்பு சியாங்சிங் என்பவரின் மீது சுமத்தும் குற்றச்சாட்டுக்களை மாசேதுங் உயிருடன் இருந்தபோது முன்வைக்காதது டெங் கும்பலின் அரசியல் நேர்மையின்மையைக் காட்டுகிறது.

இங்கு (ஐரோப்பிய) பிரமுகர்களை அம்பலப்படுத்துவதும், பாதிவழிக் கூட்டாளிகள் என்பதை இனங்காட்டுவதையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். இவர்கள் புதிய சக்திகளை பிழையான வழிக்கு தள்ளி விடுவர் என்பதிலும் எனக்கு சந்தேகம் இல்லை.

சாந்தன்
டென்மார்க்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மூன்றாவது பாதைக்கான திட்டம்.

சமர் 7வது இதழில் முன்வைத்த மூன்றாவது பாதைக்கான வேலைத்திட்டம் ஆடிமாதம் 17,18ம் திகதிகளில், ஐரோப்பிய நாடுகளிலுள்ள வர்க்க சிந்தனைகொண்டோர், ஜனநாயக, தேசபக்தசக்திகளால் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, திட்டத்தில் திருத்தங்கள் செய்ததனூடாக மூன்றாவது பாதைக்கான ஐக்கியமுன்னணியை ஒரு இஸ்தாபனமாக உருவாகியுள்ளனர். "சமர்" ஓர் அரசியல் பத்திரிகை என்ற அடிப்படையில் கருத்துக் கூறுவதற்கு அப்பாற்பட்டு, பங்கேற்கும் பணியுடனேயே மூன்றாவதுபாதைக்கான வேலைத்திட்டத்தை வெளியிட்டது. இவ் வேலைத்திட்டத்தை விவாதத்துக்காகத் தேர்ந்தெடுத்த சக்திகள், விவாதத்தின் வெளிப்பாடாக முன்னணிக்கான இஸ்தாபன வடிவத்தை உருவாக்கியதை இட்டு சமர் மகிழ்வுறுவது மாத்திரமல்லாமல் அனைத்து வழிகளிலும் முன்னணியின் வளர்ச்சிக்காகச் சமர் செயற்படும் என்பதையும் தெளிவு படுத்துகின்றோம்.

எமது பார்வையில் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் உதிரியாகவும் மற்றும் குழுக்களாகவும் தேசத்தை மறந்துவிடாது முடிந்தவரை செயலாற்றும் தேசப்பற்றுள்ள, வர்க்க சிந்தனை கொண்ட ,ஜனநாயக சக்திகள் பலவகையாக செயல்படுகின்றனர். இவர்களோடு விவாதங்களை நடத்துவதனூடாகவும், கருத்துக்களைக் கேட்டறிவதனூடாகவும் இந் நேசசக்திகளை ஒருங்கிணைக்க வேண்டிய முக்கிய கடமை இவ் ஐக்கிய முன்னணியின் முன்னுள்ள மிகப் பெரும் பொறுப்புக்களில் ஒன்று என்பதை அழுத்தமாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

புலிகள் அரசுக்கு எதிராகப் போராடுகின்றனர் என்னும் ஒரேயொரு அடையாளத்தை வைத்து இவர்களின் வர்க்கத்தன்மையை பலர் ஆராய்ச்சி செய்கின்றனர். புலிகளின் சமரசத்துக்கான சமிக்ஞையை(தனித்துவமான பேச்சுவார்த்தைக்கல்ல) இவர்கள் கவனத்தில் கொள்வதில்லை.

இவைகட்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் புலிகளின் உத்தியோக பூர்வ V.O.O வெளியீடான "தரிசனம்" 9ஆவது இதழில் "தனியுடமைச்சமுதாயம் அமைத்திடுவோம்" என்றும் அறிவித்தும் உள்ளனர்.

-புலிகளால் பேச்சு, எழுத்து, கருத்துச்சுதந்திரங்கள் மறுக்கப்பட்டிருக்கின்றன.

-கொழும்பில் தஞ்சமடைந்துள்ள அடிவருடிகளால் தமிழ் மக்களின் விடுதலை காட்டிக் கொடுக்கப்படுகின்றது..

-சிங்களப் பேரினவாதசக்திகள் எமது இனத்தைப் பூண்டோடு அழிப்பதில் மும்மரமாக ஈடுபட்டுள்ளனர்.

-சிங்கள இடதுசாரிகள் தமிழ்மக்களின் தனித்துவத்தை அங்கீகரிக்கத் தயங்குவதோடு, பேரினவாதத்தை முழுமையாக எதிர்க்கத் திராணியற்ற இனவாதத்தில் மறைந்து நிற்கின்றனர்.

-எமது சகோதர இனமான முஸ்லிம்கள் எம்மைச் சந்தேகத்தோடு நோக்குகின்றனர்.

இது போன்ற தீவிர முரண்பாட்டுச்சூழ்நிலையில் ஐக்கிய முன்னணிக்கான முனைப்பு வரலாற்றின் நியதியேயாகும். ஆனால் ஐக்கியமுன்னணியின் செயற்பாடு தேசத்தில் பாதிப்பை உண்டுபண்ணும் அளவிற்கு தீவிர முன்னேற்றத்தைப் பெறவேண்டும் என்பதே எமது அவாவாகும்.

- சமர் ஆசிரியர்குழு -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மீண்டும் இன்று ஒரு புலியை உருவாக்க வேண்டுமா?

மனிதம் இதழ் 22 இல் சி.வசந்தன் "தேசிய சக்தியும்" என்ற ஒரு தலைப்பில் ஒரு அவசரக் குறிப்பு எழுதியுள்ளார். இவர் இக் கட்டுரையில் தேசிய சக்தி பற்றி விவாதிக்காமல், ஐக்கியத்தைப் பற்றி ஒரு பார்வையை பார்த்ததுடன், நடமுறை பற்றியும் சொல்ல முற்பட்டு உள்ளார். விமர்சிப்பவர்களை மக்கள் விரோதிகள் என்று, ஐக்கியம், நடமுறைபற்றி கதைப்பதன் ஊடாக கூறியுள்ளார். இவர் தேசியசக்தி தொடர்பான விவாதம் தேவையற்றது எனகூறியதுடன் மட்டுமன்றி, புலிகளை எந்த வர்க்கமற்ற குழு எனவும் கூறியுள்ளர்.

"...... மிகவும் அதிகமாக கதைக்கப் பட்டுமுடிவேயில்லாது தொடர்ந்தும் சலிப்பூட்டும் வகையில் விவாதிக்கப்படுவது" என கட்டுரையின் ஆரம்பத்தில் இருந்தே எழுதுகின்றார். இது மாற்றுக்கருத்தை மறுக்கும் போக்கு மட்டுமின்றி விவாதிக்காது திணிக்கும் போக்குகூட. இதைப்போல் முன்பு கரிகாலன், சிவகுமாரன் மனிதம் என எல்லோரும் மாற்றுக் கருத்தைக்கண்டு கிலியடைந்ததுடன், அதனை விமர்சிக்க முன்வராமல் விமர்சனத்தை சலிப்பூட்டுவதாகவும், முடிவேயில்லாதும், விவாதப் பண்புஅற்றது ..... என கூறி நீம் ஆராய்கின்றோம் என்பதை கேள்விக்கு உட்படுத்தியபடி கருத்தை திணித்து விட முனைகின்றனர். இதில் முடிவே இன்றி தொடர்ந்து என்ற கூற்றின் ஊடாக மாற்றுக்கருத்தை விவாதிக்க தயங்கி திணித்துவிட முயன்றும் உள்ளனர். இவர் தொடர்ந்து கட்டுரையில் மற்றவர்கள் நினைத்த, தெரிந்த விடயங்களை சொல்வதை பிழை எனக் கூறியபடி தான் மட்டும் நினைத்ததை திணித்து விடமுனைந்துள்ளார். இது போன்ற நடைமுறை கடந்த கால போராட்டங்களில் பொதுவான இயல்பாக இருந்தது. தாம் நினைத்தவைகளை அமுல் செய்யக் கோரி அமைப்பிலும், மக்கள்மீதும் அடக்கு முறையைக் கையாண்டனர். இவைக்கும்வசந்தனின் கூற்றுக்கும் எந்த வேறுபாடும்மில்லை நாம் உடன்படும் திட்டத்தில் இன்று பலர் உடன்படுகின்றனர். ஆனால், உடன்படாத ஒரு கதம்பக் கூட்டமே. இதைப் பார்த்து ஏன் வசந்தனால் கேட்கமுடியவில்லை. "முடிவே இல்லாது தொடர்ந்து" என்று. கதம்பக் கூட்டத்தின் இருப்பில் தாக்கம் (எமது விமர்சனத்தினால்) எற்படும் போது அதை சலிப்பூட்டுவதாகவும், விமர்சனப் பண்பு அற்றது எனக் கூறி எப்படியாவது கதம்பக் கூட்டத்தை பேண முயல்கின்றீர்கள்.

..... ஒரு அணியின் தேவை குறித்த வாதப்பிரதிவாதங்கள் துரதிஸ்டவசமாகவும் எம்மவரிடையே ஒரு மார்க்சோ, லெனினோ, மாவோவை யோ ஒத்த தத்துவத்துறையில் மிகவும் சிறந்த நடமுறையில் சரியான வேலை முறைகளை ஏற்படுத்தக்கூடிய மேதைகள் இல்லாதது தான் எம்மவர்களிடம் சிதறல்களுக்கு காரணமோ.." என எழுதும்இவர் வரலாற்றை புரட்டி விடுகின்றர். வரலாறுகளை கவனித்துப் படிக்க வேண்டிய இவர்இவைகளை கவனியாது விட்டபடி மார்க்ஸ், லெனின், மாவோ எனக் கூறி விட்டால் எல்லாம் உண்மையாகி விடும் என்ற ரீதியில் (முற்போக்கு என ஒருவன் தன்னைச் சொன்னால் அவன் முற்போக்காக இருக்க வேண்டும் என்று இல்லை) இவர்களை கூட அழைத்துள்ளார். மார்க்ஸ், லெனின், மாவோவின் விமர்சனங்களில் பெரும் பாலானவை அரசுக்கு எதிராக இருந்ததை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விட இடதுசாரிகள் என சொன்னீர்க்கு இடையிலேயே எப்போதும் நிகழ்ந்துள்ளது. அதாவது நாம் விமர்சிப்பது போல். இதை அவர்களின் அனைத்துப் புத்தகங் பார்க்கலாம். நாம் எப்படி புலியின் வர்க்கம் தொடர்பாக விவாதிக்கின்றோமோ அதேபோல் அவர்கள் அன்று விவாதித்தது மட்டுமின்றி திரிபுக்கு எதிராக போராடினார். அதனால் மட்டுமே அவர்கள் புரட்சியை வென்றெடுக்க முடிந்தது. எமது விமர்சனப் பண்பு (மனிதம் கருதும் பண்பற்ற) மேற்குறித்த மேதைகளின் விமர்சனப் பண்பில் மிகச்சிறிய பகுதியே இவ் மேதைகளின் காலத்தில் எம் மத்தியில் இன்று இருப்பதை விட பல சிறிய பல்வேறுபட்ட குழுக்கள் இருந்தன. அவை ஒன்றை ஒன்று கடுமையாக விமர்சித்தன. இவ் மேதைகளின் கருத்து சரியாக இருப்பதால் இன்று அவர்களை சொன்னபடி அவர்களுக்கு எதிராககுரல் கொடுக்கின்றீர்கள். கரிகாலனோ, சிவகுமாரனோ, மனிதனோ இவர்கள் கருத்துக்களை தவறு எனச் சொல்வதில் (இதை இவர்களின் கட்டுரையில் பார்க்கவும்) எப்படி லெனின் போன்றோர் தலைமையின் கீழ் அணிதிரள்வர். இதுவே இன்று பிரச்சனை இதை முதலில் புரிந்து கொள்ள முயலவும்.

"........ தத்துவார்த்த சமரில் ஈடுபட்டுள்ள பல்வேறு பிரிவினரும் நாம் அறிந்தவைகள், எழுதுபவைகள் மட்டும் சரியானவை, மற்றவர்களை பிழையாகவே பார்க்கின்றனர் என்பதும் வேறு சிலர் பிரச்சனைகளில் மையங்களைப் புரிந்து கொண்டாலும் சரியான கருத்துக்காக போராடுகின்ற முன் முயற்சி இல்லாதும் அவரவர் தங்கள் கருத்துக்காக இடையிடையே எழுந்து குரல் கொடுத்துவிட்டு அடங்கும்....." எனக் கூறி இவர் தான் அறிந்தவைகளை திணித்துவிட முயல்கின்றார். அத்துடன் இவர் இதில் சிலர் பிரச்சனையின் மையங்களைத் தொட்ட போதும் மௌனமாகி விட்டனர் என்றதற்கு ஊடாக புலிகளை வர்க்கமற்ற குழு என திணிக்க முயன்றுள்ளார். ஒரு மனிதன் தனக்குத் தெரிந்தவை மட்டுமே சொல்லமுடியும். அதுவே அவனுக்கு சரியாகவும் உள்ளது. இதற்கு அப்பால் கற்பனை யில் பெறமுடியாது. அதனால் தான் விவாதம் என்ற விடையம் நிகழ்கின்றது. விவாதத்தில் தாம் சரி என வைக்கும் விடயங்களை விமர்சனத்துக்கு உட்படுத்தப்படுகின்றது. அங்கு ஆய்வு நிகழ்கின்றது. (இவைகளை இவர் இக் கட்டுரையில் நிராகரிக்கின்றார்) இதற்கு ஊடாக சரியான ஒன்றை கண்டு பிடிக்க முயல்கின்றார். இது உங்களுக்கு புரிய நியாயம் இல்லை தான் ஏன் எனில் உங்களுக்கு விவாதம் என்பது சலிப்பூட்டுவதே. சிலர் சரியானதை [illegible] விட்டு மௌனம் சாதித்தது என்பது உங்களுக்கு சரியானதும் அவர்களுக்கு மட்டும் தெரிந்தவைகளே. இது எப்படி விமர்சிக்காமல் சரியாக எற்க முடியும். எமது விமர்சனம் உங்கள் கருத்தை தகர்த்து விடுவதால் "இது எமக்குத் தெரிந்தவை மட்டும்" என சொல்லி மீண்டும் திணிப்பை நிகழ்த்த முயன்றுள்ளார்.

"கடந்த காலங்களில் நடைபெற்ற புரட்சிகள், போராட்டங்கள், தோல்விகளில் இருந்து படிப்பினைகளை பெற்றுக் கொள்வதற்கு மாறாக இத்தகைய சம்பவங்களுக்கு அவரவர் கற்றுக் கொண்டவைகளில் இருந்து விளங்கி வியாக்கியானங்கள் செய்வது, எதிரணியினருக்கு மடக்கி பதில் அளிப்பது மட்டுமே பிரச்சனையை சரியாகப்புரிந்து கொண்டவர்கள் என்று நினைத்து கொலரை உயர்த்திக் கொள்வதுமே நடைமுறையாக உள்ளது ...... இவைகளே எதிர்காலத்தில் தொடரும் எனில் எத்தகைய காட்டுக் கூச்சலிட்டாலும் அடக்கி விடமுடியாது." என உச்சக் குரலில் காட்டுக் கூச்சலிட்டுள்ளார். இங்கு மடக்கிப் பதிலளிப்பதும் அதுவே சரியென நினைத்து கொலரை உயர்த்துவது என்ற இவரின் வாதத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மடக்கி என்பது ஒரு காழ்ப்புணர்ச்சியுடன் தமது கருத்தை நியாயப்படுத்த பயன் படுத்திய சொல். இவர் அவர்களின் கருத்துக்களுக்கு சமரில் பதில் அளிக்கப்பட்டுள்ளதை ஏற்றுள்ளார். (ஆனால் இதை மனிதம் ஆசிரியர் குழு மறுக்கின்றனர்) வசந்தன் இதை அவரவர் கற்றுக் கொண்டது என ஒப்பாரி வைத்துள்ளார். இவர் போன்ற அனைவரின் கருத்துக்கும் சமர் பதிலளித்துள்ளது. அது சரியாக உள்ளது (சமர் மட்டும் சரியானது என வசந்தன் குறிப்பிடுகிறார்) என கூறியவர், தாம் ஏற்கவில்லை ஏன் எனில் அது அவர் கருத்து என்பதால். எவ்வளவு வேடிக்கை. இங்கு இவர்கள் ஆய்வு செய்கிறார்களாம், தேடுகிறார்களாம் இவை கூட நகைப்புக் குரியவையே. கடந்த கால போராட்டங்களில் வெற்றி தோல்விகளின் (இங்கு இவர்கள் ஆராயத் தயாராக இல்லை ஏன் எனில் சமரின் சரியான பக்கம் கொலரை உயர்த்துவதாம்) வெளிப்பாடுகளாக ஒவ்வொரு மனிதனும் கற்றுக் கொள்கிறான். இது சரியாகவோ, பிழையாகவோ நிகழ்கிறது இதை வசந்தன் தீர்மானித்து விட முடியாது. ஒவ்வொரு மனிதனும் தாம் கற்றுக் கொண்டதை மற்றவர்களுக்கு கூறுகின்றனர். இது ஒரு விவாதத்தை உருவாக்குகின்றது. இங்கு ஒருவரின் கருத்தின் மீது கருத்துக் கூறுவது மடக்கியது ஆகிவிடாது. இதுவே இயங்கியல் விமர்சனமுறை இங்கு வசந்தன் வர்க்கமற்ற புலிகள் எனக் குறிப்பிடும் தான் கற்றதை மட்டும் நியாயப் படுத்திய படி மற்றவைகளை மடக்கியதாகக் கூறி தனது கருத்தின் மீது விமர்சனத்தை தடுத்து, அதை திணிப்பாக நிகழ்த்த முயன்றுள்ளார். எமது விமர்சனத்துக்கு பதில் அளிக்க முடியாது வெகுண்டு எழுந்த ஒருவித பீதியுடன் இது அவரவர் கருத்து இது உண்மையல்ல, (இங்கு கவனிக்கவும் எந்தவிளக்கமும் வசந்தன் வைக்கவில்லை) இது மடக்கல் எனச் சொன்ன படி கொலரை உயர்த்துவதாகவும், காட்டுக் கூச்சல் இடுவதாகவும் பிதற்றியுள்ளார்.

“உதிரிகளாக அல்லது குழுக்களாக இருக்கின்ற எம்மவர்கள் மத்தியில் புலிகள் தேசியசக்திகளா இல்லையா, ஐக்கியப் புரட்சியா, தமிழீழமா, முஸ்லீம் மக்கள், மலையக மக்கள் ....பற்றி எல்லோரும் தாம் அறிந்து கொண்டவைகள், கேள்விப்பட்டவைகளில் இருந்து எழுதிக் கொண்டிருக்கிறார்கள். இதற்குள் எமது ஐக்கியத்திற்கு தடையாக இருப்பது என்ன என்ற கேள்வியை எழுப்பினால் எப்படிப் பார்த்தாலும் எமது கற்றுக் குட்டித்தனமும், வறட்டுத்தனமுமே அன்றி வேறு என்னவாக இருக்க முடியும்......” என வசந்தன் தொடர்கிறார். இவரின் ஐக்கியம் என்ற கோரிக்கை எதன்மீது. வெறும் புலிகள், அரசு, அரசுக்கைக்கூலிகளுக்கு எதிராக மட்டுமே. மீண்டும் தாம் அறிந்தவை எனச் சொல்வதனூடாக யாரோ சொல்ல வருவார்கள் (எல்லாம் தெரிந்தது போல் நடிக்கும் பிரமுகர்கள்) என்ற ரீதியில் அமைந்துள்ளது. எல்லாக் கருத்தையும் நிராகரித்த ஒரு அமைப்பு (வசந்தன் கோருவது போல்) கோட்பாட்டை கடந்த கால விமர்சனங்களை வைப்பதை நிராகரித்தபடி மீண்டும் ஒரு புலியை கோருகின்றார். அன்று இலங்கை அரசுக்கு எதிராக போராடக் கோரி ஐக்கியத்தை வலியுறுத்தியது (இதையே இன்று புலிகள் கூறுகின்றனர்) போல் இன்று புலியை உள்ளடக்கி ஐக்கியத்தைக் கோருகின்றார் வசந்தன். சமூகத்தில் உள்ள முரண்பாடுகளை நிராகரிக்கின்றார். இன்று இதே கோட்பாட்டின் அடிப்படையில் புலிகளை விளைவாக அறுவடை செய்துள்ளோம். தாம் அறிந்து கொண்டவை, கேள்விப்பட்டவையை வெறும் வறட்டுவாதம், கற்றுக் குட்டித்தனம் என எந்த ஆதாரத்தையும் முன் வைக்காமல் முத்திரை குத்தி இது எல்லோருக்கும் பொருந்தும் என அறிவித்து போராட்டத்தை சிதைக்கமுனைந்துள்ளார். நாம் கேள்விப்பட்டவை, அறிந்தவைகளில் இருந்தே முடிவுக்கு வந்தடைய முடியுமே ஒழிய யாரோ ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரமுகர் (பாலசிங்கம் போல்) எமக்கு வழிகாட்ட தீர்வு சொல்ல வருவார் என்ற அடிப்படையில் வசந்தனின் வாதம் அமைந்துள்ளது.

அரசுக்கும், புலிகளுக்கும் எதிராக ஒரு ஐக்கிய முன்னனி இன்று சாத்தியமா? நிச்சயமாக இல்லை. இவை ஒரு கோட்பாட்டுக்கு உட்பட்டவையே. தேசிய விடுதலைப் போராட்டத்தின் பிரதான எதிரி அரசாகவும், தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு துரோகம் செய்யும் புலிகள் இரண்டாவது எதிரியாகவுமே இருக்க முடியும். இவர்களுக்கு எதிராக போராடும் போது முற்போக்கு தேசியத்தை உயர்த்தக் கூடிய ஒரு திட்டத்தில் மட்டுமே ஐக்கியப்படுவதன் ஊடாக சரியாக போராட்டத்தை வழிநடத்த முடியும். இதன் அடிப்படையில் மட்டும் சமர் ஐக்கியப்படும். அதுபோல் அனைவரையும் கோரும். இவை மீண்டும் புலியைஉருவாக்காது. ஐக்கியம் என்பது ஒரு வடிவம் மட்டுமானது அல்ல. அது பலவகைப் பட்டவையாக நிலமைகளுடன் மாறக் கூடியதுமே. இவை ஒரு தனிக்கட்டுரையாக அமைந்த போதும் சுருக்கமாகப் பார்ப்போம். சமர் 7 இல் முன்வைத்த திட்டம் கீழ் இருந்து கட்டப்படக் கூடிய ஒரு முன்னணிக்கானது மட்டுமே. இது கீழ் இருந்து ஒரு திட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு நபராக வென்று எடுத்து உருவாக்கப்படும் அமைப்புக்கானது. இவ் ஐக்கிய முன்னனிக்கு முரணற்ற பல்வேறுபட்ட குழுக்கள், மற்றும் வெகுஜன அமைப்புக்களாக பெண்கள் அமைப்பு, மாணவர் அமைப்பு, ........ என அனைத்தும் இவ் ஐக்கிய முன்னனியுடன் கீழ் இருந்து இணைந்து செயற்பட முடியும். இத்திட்டத்தை எற்காத வேறுபட்ட வர்க்க நோக்கில் உருவாகும் அமைப்புக்கள், தனிநபர்கள் குறித்த ஒரு முரண்பாட்டின் அடிப்படையில் மேல் இருந்து ஐக்கியப்பட முடியும். குறித்த முரண்பாட்டின் இறப்புடன் இவ் ஐக்கிய முன்னனி செயல் இழந்துவிடும்.

கீழ் இருந்து கட்டப்படும் ஐக்கிய முன்னனி, மற்றும் கட்சி என்பன தனக்கான ஸ்தாபனப்பலம், இராணுவப் பலத்துடன் மட்டும் மேல் இருந்து கட்டும் ஐக்கிய முன்னனியை உருவாக்க முடியும். இன்று உடனடியாக மேலிலிருந்து கட்டும் ஐக்கிய முன்னனி சாத்தியம் இல்லை. இன்று ஒரு திட்டத்தின் அடிப்படையில் மட்டும் கீழ் இருந்து ஐக்கிய முன்னனியை கட்டமுடியும். எதிர்காலத்தில் கீழ் இருந்து கட்டும் ஐக்கிய முன்னனி தனக்கான இராணுவ பலம், ஸ்தாபனத்தைக் கொண்ட ஒரு தளப் பிரதேசத்தை ஏற்படுத்தின் புலிகளுடன் கூட மேல் இருந்து ஐக்கியத்தை அரசுத்து எதிராக கட்ட முடியும். இது எதிர்கால நிலைமைகளுடன். எமது பலத்துடன் மட்டுமே ஆராயப்பட வேண்டும். மனிதம் இன்று இருக்கும் நிலையிலான அமைப்பு வடிவில் ஒரு கருத்தைக் கூட சரியாக கூறிவிட முடியாத ஒரு கதம்பக்கூட்டமே. இதற்கு அப்பால் மனிதத்தை ஐக்கிய முன்னனி எனப் பார்ப்பவர்கள் ஐக்கிய முன்னனி என்ன என்பதை தெரியாதவரே. மனிதத்தின் குறைந்த பட்சத்திட்டம் என்ன? இது மனிதத்துக்கே தெரியாது.

நீங்கள் குறிப்பிட்ட வரட்டுவாதம், கற்றுக்குட்டித் தனத்துக்கு அப்பால் உள்ளவர்கள் உடன் ஏன் நீங்கள் ஐக்கியப்படவில்லை. உங்களின் குறைந்த பட்சத் திட்டம் என்ன? முதல் அதை முன்வையுங்கள். உங்கள் மொத்த வாதமும் கருத்தியல் மறுப்பை நிலைநாட்ட கையாளும் ஒரு நரித்தனத்துடன் கூடியவையே. சமர் எப்போதும் உங்கள் ஐக்கியத்துக்கு தடையாக இருக்கப் போவதுமில்லை. சிலர் ஒரு திட்டத்தை விவாதித்து அதில் இன்று ஐக்கியப்பட்டுள்ளனர். அதை என்ன என்று சொல்லப் போகிறீர்கள். எங்கே வரட்டு வாதம், கற்றுக் குட்டித்தனம் உள்ளது என்பதை மீண்டும் ஆராயவும். அத்துடன் ஐக்கியத்துக்கு தடையாக உள்ளவை திரிபு வாதமே பிரதானமானது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பதை மாறந்துவிடாதீர்கள்.

"........ ஒவ்வொரு பிரச்சனைகளிலும் திருப்தியுறுத எவ்வளவோ மக்கள் திரளை அடையாளம் காணக் கூடியதாகத்தான் இருந்தது. அப்படி இருந்தும் இலங்கையில் இடதுசாரிகள் தங்கள் பின்னே ஒரு பலமான அணியைத்திரட்டி ஒரு புரட்சியை முன்னெடுக்க முடியாது போனது ஏன்? எப்பவுமே ஒரு 10,15 பேர் கொண்ட குழுவாக இயங்குவது பின்னால் அதில் இருந்து தனிப்பட்ட காரணங்களால் உடைவுகள் ஏற்படுவதும் அதற்குக் கூட இயங்கியல் அதுஇது என்று தத்துவ முலாம் பூசுவது (வரலாற்றில் தேவைப்பட்ட முறிவுகளை தவறு என்று கருதவில்லை) பின்னர் பிரிந்த குழுக்கள்........" என தனது கண்டு பிடிப்பைத் தொடர்கிறார். இங்கு இவர் மறைமுகமக மார்க்சியத்தின் மீது தாக்குதல் நடத்தியுள்ளார். எந்த உடைவு சரி எந்த உடைவு தவறு, எந்த உடைவு தனிப்பட்ட நலன் சார்ந்தது என்று, எந்த ஆதாரமோ, விளக்கமோ இன்றி பொதுப்படையாக இடது சாரிகளை தாக்கியதுடன் இன்று சரியான இடது சாரிகள் மீதும் தனது தாக்குதலை நடத்தி உள்ளார். இங்கு இவர் எதைச் சரி என்கிறார்? தான் நினைப்பதை மட்டும். இதற்கு ஊடாக சிலரை அங்கீகரிக்க கோருகின்றார். இவர் கரிகாலன், சிவகுமாரன், மனிதம் என இவர்கள் இந்தியாவில் உள்ள சில திரிபுவாத இன்டலெக்சுவல் பிரமுகராக உள்ள சில உதிரிகளை மட்டும் அங்கீகரிக்க, எற்க கோருகின்றார். அவர்களின் கருத்துக்களை எந்த ஆதாரமுமின்றி, விளக்கமுமின்றி திணித்துவிட முயல்கின்றார்.

கடந்த கால போராட்டத்தில் இடதுசாரிகள் தவறு இழைத்தனர் என்பது உண்மையே. அது நீங்கள் குறிப்பிட்டது போல் அல்ல. இது ஒரு தனியான விளக்கக் கட்டுரை ஆகவே அமைய முடியும். ஈழப் போராட்டத்தில் இடது சாரிகள் என NLFT,பேரவை மட்டும் தான் இனம் காட்டின. இதில் NLFT ஒரு கட்சியல்ல. அது கீழ் இருந்து கட்டப்பட்ட ஒரு தேசிய விடுதலை முன்னனி. இவர்கள் பலதவறுகள் (முரண்பாட்டுடன்) இழைத்த போதும் மீண்டும் மீண்டும் தேடியவர்கள். அவர்களின் இருப்புக்கான குறுகிய காலத்தில் மற்றைய இயக்கங்களின் வீக்கம், அலைகளின் பலத்தின் முன் இவர்கள் ஒரு அடியை எடுத்து வைக்கப்படமுன் அழிக்கப்பட்டுவிட்டனர். இவர்களின் தவறுகள் NLFT கட்டுரையின் ஊடாக ஆராயப்படுகிறது. இந்த இடது சாரிகளுக்கு அப்பால் உருவான இயக்கங்கள் இன்றைய மொத்த சிரழிவையும் உருவாக்கியவர்கள். அவர்களின் விளைவுகளை இடதுசாரிகள் மீது (இன்று பல சஞ்சிகைகளில் எழுதுபவர்கள் இதையே செய்கின்றனர்) குற்றம் சாட்டி தவறான ஆய்வுகளை செய்கின்றனர்.

இடது சாரிகளின் உடைவுகள் எப்போதும் ஏதோ ஒரு வர்க்கம் சார்ந்ததே. தனிப்பட்ட நலன் சார்ந்த உடைவும் எப்போதும் வர்க்கம் சார்ந்ததே. எதோ ஒரு வர்க்கக் கோட்பாட்டின் அடிப்படையில் மட்டுமே உடைவுகள் நிகழ்கின்றன. இதை முதல் புரிந்து கொள்ளுங்கள். பல முரன்பாடுகள் கருத்துக்கள் இருக்கும் போது உடைவுகளை ஏற்க வேண்டும். ஏற்க மறுப்பின் புலியின் தத்துவத்தை கோருவது ஆகும். ஒரு அமைப்பு ஜனநாயகமத்தியத்துவத்தை பேண வேண்டும். அப்போது அங்கு முரண்பட்ட கருத்துக்கள் போராட முடியும். ஒரு அமைப்பு தவறான வழியில் செல்லும் போது அதில் இருந்து விலகுவது தவிர்க்க முடியாது. எந்த உடைவுக்கும் தத்துவம், வர்க்க சார்பும் உண்டு. தத்துவமற்ற, வர்க்கமற்ற உடைவு என்று ஒன்று இல்லை. கடந்தகால இடது சாரிகள் மார்க்சியத்தை ஏற்று சரியாக இருந்தார்களா? இவர்களின் தத்துவங்கள், செயற்பாடுகளை ஆராய்ந்து முதலில் யார் இடது சாரிகள் என



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆராய்ந்து அதைத்தீர்த்துக் கொள்ள வேண்டும். சரியான இடது சாரிகளே இல்லை எனில் எப்படி உடைவுகளை ஆராய முடியும். சிறு பிள்ளைத்தனமான எழுந்தமான ஆய்வுகள் அற்ற முடிவுகளை திணிப்பதை கைவிடக் கோருகின்றோம்.

"இக்கட்டுரையில் மார்க்சினதோ, லெனினினதோ,...... வேறெந்த மார்சிய அறிஞர்களது மேற்கோள்களையோ உதாரணங்களையோ தவிர்த்துள்ளேன்.... ரசியப் புரட்சியில் பங்கு கொண்ட சக்திமிக்க ந பர்களாக லெனின், ஸ்டாலின், ரொஸ்கி, புகாரின்,.... ஆகியோர் விளங்கினார்கள். இவர்கள் ஒருமித்த எண்ணங்களையோ, முடிவுகளையோ உடையவர்கள் அல்ல. ...... ரொஸ்கி செம்படைக்கு பொறுப்பாக இருந்தார். இத்தகைய நடைமுறை இல்லாது இருந்தால் ரஸ்சியப் புரட்சி வெற்றி பெற்றிருக்க முடியுமா? கட்சிக்குள் மாற்றுக்கருத்துக்களை லெனின் வரவேற்றார். தொடர்ச்சியான தத்துவார்த்தப் போராட்டங்கள் கட்சிக்குள் நிகழ்ந்தன. லெனின் மறைவுவரை இது தொடர்ந்துள்ளது. இத்தகைய அணுகுமுறை எம்மிடம் இல்லாது போனது ஏன்? ......" என ஐக்கியத்தை நியாயப் படுத்த ரஸ்சியப் புரட்சி வரலாற்றை தலைகீழாக மாற்றி தனக்கு சாதகமாக திரித்துள்ளார். ஐக்கிய முன்னணி தொடர்பான எமது சுருக்கமான கருத்தை மேல் வைத்துள்ளோம். எமது நிலைப்பாட்டையே லெனினும் கொண்டிருந்தார். அதனால் மட்டுமே போல்சவிக் கட்சியை மட்டும் அவர் கொண்டிருந்தார். இதற்கு அப்பால் பல கட்சிகள் இருந்தும் அவர்களை தனது நிஜயில் நின்று ஈவிரக்கமற்ற வகையில் விமர்சித்தார். லெனின் காலத்தில் பெயர் குறிப்பிட்டு சொன்ன நபர்களுடன் ஒட்டி சில விடயங்களை நாம் பார்ப்போம். அதற்கு முன் நீங்கள் குறிப்பிட்ட "மார்க்சினதோ, லெனினினதோ, .....வேறெந்த மார்க்சிய அறிஞர்களது மேற் கோள்களையோ, உதாரணங்களையோ தவிர்த்துள்ளேன்." இவ்விடயத்தை ஆராய்வோம். இது ஒரு சவடால் அடிப்பே. உங்கள் மெளனித்த (லெனி) வாரியான மார்க்சிய விரோதக் கருத்துக்கு லெனின், மார்க்சை ஆதாரமாகக் கருத்துக்கள் வைத்துள்ளதாகக் கூறி அதை சொல்லவில்லை எனக் கூறி ஒரு திணிப்பை லெனின் மார்க்ஸ் பெயரால் நிகழ்த்தினார். இது வாசகர்களை பேயர்கள் ஆக்கி எமாற்றும் ஒரு சதியே. லெனினோ, மார்க்சோ உங்கள் மார்ஸிய விரோதக் கருத்துக்கு உதவப் போவதுமில்லை. உங்களால் முடிந்தால் மார்க்ஸ், லெனின் கருத்துக்களை உங்கள் கருத்துக்கள் மீது வையுங்கள். வையாது ஏமாற்றி திணிக்க நினைப்பது ஒரு நரித்தனத்துடன் கூடிய சதியே.

சக்தி மிக்க நபர்கள் லெனின், ஸ்டாலின், புகாரின், ரொஸ்கி...... எனக் குறிப்பிட்டது என்பது தவறு. மக்களே தலைவர்களை உருவாக்குகின்றனர். அதில் இருந்தே புரட்சித் தலைமை தாங்குகின்றனர். லெனின் 1917 களில் ஒரு ஐக்கிய முன்னணியை உருவாக்கினார். அதற்கு முன் ஒரு திட்டத்தின் அடிப்படையில் ஒரு கட்சியாக மட்டும் இருந்தபடி மற்றைய கட்சிகள், தனிநபர் கருத்துக்கள் மீது கடுமையான விமர்சனத்தை செய்தார். சோவியத்தில் லெனின், ஸ்டாலின் போன்றோர் உள்ளடக்கிய போல்சவிக் கட்சி தனக்கான ஒரு திட்டத்தை கொண்டு இருந்தது. மற்றவர்களை அதில் இணையக் கோரியது. நாம் அதையே இன்று கோருகின்றோம். 1917 களில் மக்களின் புரட்சி அலையுடன் அன்னிய படையெடுப்புடன் லெனின் தலைமையிலான கட்சி சரியாக இருந்தால் சில கட்சிகள், தனிநபர்கள் ஒரு ஐக்கிய முன்னணிக்குள்ளும், சிலர் கட்சிக்குள்ளும் இணைந்தனர். இதுவே வரலாறு. அங்கு அரசுக்கு எதிராக ஒரு அமைப்பாக இருந்ததில்லை. 1907



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களில் றொஸ்கி எந்த போல்சுவிக் கட்சியை கலைக்க கோரினாரோ அதே கட்சியில் 1917 களில் இணைந்து கொள்கிறார். 1917 களில் இணையும் போது போல்சுவிக் திட்டத்தை ஏற்றதும், கடந்தகால தனது கருத்துக்களை சுயவிமர்சனம் செய்கின்றார். அதனால் தான் லெனின் தனது கட்சியிடம் றொஸ்கிக்கு எதிராக கடந்த கால தவறுகளை பயன் படுத்துவதை தவிர்க்க கோருகின்றார். றொஸ்கி பற்றி 1917 க்கு முன் லெனின் கூறிய ஒரு விடயத்தைப் பார்ப்போம்.

" உதவிப்பணியாற்றும் திரோஸ்கி விரோதியை விடவும் ஆபத்தானவர்" பக்கம் 91
- தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை-
றொஸ்கி கடந்தகால சுயவிமர்சனத்தை பாவமன்னிப்பாக மட்டும் செய்தபடி தனது கடந்தகால கருத்துக்களையே நிலை நாட்ட முனைந்தார். இதை செய்ய கட்சிக்குள் கட்சியைக் கட்டினார். இதை 1921களில் லெனின் தலைமையில் கட்சி எச்சரித்ததுடன் கட்சியைவிட்டு நீக்கப்படுவீர்கள் எனவும் எச்சரிக்கப்பட்டார். இதை றொஸ்கி மாற்றி விடவில்லை. லெனின் மறைந்த பின்பும் தொடர்ந்தது மட்டுமன்றி கட்சிக்குள் கட்சியும், சட்ட விரோதமாக வெளியிலும் கட்சி கட்டினார். இதற்கு ஊடாக ஆட்சியைக் கைப்பற்ற முனைந்தார். சட்டவிரோத கட்சி தொடர்பாக றொஸ்கியின் வரலாறு என்ற புத்தகத்தில் எழுதியதுடன் தனது சுயசரிதைப் புத்தகத்தில் தனது மகன் பற்றி குறிப்பிடும் போது தனது மகன் 1922க்குப் பின் சட்ட பூர்வ, சட்ட விரோத நடவடிக்கையில் புடம் போடப்பட்டார் என கூறியுள்ளார். சட்டவிரோத வழிமுறைகளை கைக்கொள்ள முற்பட்டபின் இரு வேறு பட்ட வர்க்க நலன் சார்ந்த போராட்டத்தின் வளர்ச்சியை இனம் காட்டிவிடுகிறது. இது றொஸ்கி, புகாரி போன்றோரின் வாழ்வு தொடர்ந்தது. வரை

கட்சிக்கு வெளியில் சட்ட விரோதமாக கட்சியைக் கட்டின் எப்படி ஒரு கட்சியாக இருக்க முடியும். இரண்டு வர்கத்துக்கிடையில் போராட்டம் நிகழ்கின்றது. இதில் ஒன்று அழிவது தவிர்க்க முடியாது. நிகழ்ந்த வர்க்கப் போராட்டத்தில் ஸ்டாலின் தலைமையிலான கட்சி எதிர் வர்க்கத்தை அழித்த போது சில தவறுகளை இழைத்துள்ளது. வர்க்கப் போராட்டம் சட்ட விரோத வழிகளை கைக்கொள்ளும் போது ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தை அழிக்கும். இதுவே இயங்கியல்.

வசந்தன் இன்னுமொரு இடத்தில் லெனின் மறைவின் பின் கருத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்டது என அப்பட்டமான ஒரு பொய்யை திணிக்க முயன்றுள்ளார். றொஸ்கி புகாரி போன்றோர் சட்ட விரோதமாக இயங்கியபடி கட்சிக்குள் தமது வாழ்வு இருக்கும் வரை ஒரு குழுவாக இருந்து தமது கருத்தை வைத்துப் போராடினர். இவை சோவியத்தின் அனைத்து ஆவணங்களிலும் உள்ளது. யுத்தகால இடைக்கால பொருளாதாரம், கூட்டுப்பண்ணை, சோசலிசத்தை அமுல் படுத்துவது, ..... என லெனின் மறைந்தபின் ஸ்டாலின் அமுல் செய்த போது அதை தீவிரமாக எதிர்த்து கட்சிக்குள் போராடினார். இவை எல்லாம் இருக்க லெனினின் பின் கருத்துச் சுதந்திரம் இல்லை எனச் சொல்லவருவது என்பது வரலாற்றைப் புதைத்துவிட முயல்வதே. ஸ்டாலின் சோசலிசக் கட்டுமானத்தில் தவறுகள் இழைத்த போதும் மார்க்சியத்தை உயர்த்திப் பிடித்த படி மரணம் வரை வர்க்கப் போராட்டத்துக்கு தலைமை தாங்கியவர். றொஸ்கி செம்படைக்கு தலைமை தாங்கினார். உண்மையே. அன்று றொஸ்கி இல்லை எனில் வேறு ஒருவர் தலைமை தாங்கியிருப்பார். இரண்டாம் உலக யுத்தத்தில் ஸ்டாலின் செம்படைக்கு தலைமை தாங்கினார். தலைவர்கள் மக்களால் உருவாக்கப் படுகிறார்கள் என்பது தான் உண்மை.


நடைமுறைப் போராட்டத்தில் தான் அனைத்தும் தீர்மானிக்கப் படுகிறது என்பது உண்மையே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதற்காக திட்டம் இன்றி நடைமுறையை நிகழ்த்த முடியாது. அரசு எதிரியாக தெரிந்த காலத்தில் நடைமுறைப் போராட்டத்தை முன்னெடுத்த அனைவரின் வாழ்வை நாம் பார்த்தும், ஏன் பார்க்காது போல் நடிக்க வேண்டும். இன்று புலிகள், துரோகிகள், அரசுக்கு எதிராகப் போராட (எத்திட்டமும் இன்றி) கோருவது மீண்டும் ஒரு புலியை உருவாக்க கோருவதே. புலிகள் எப்படி உருவானார்கள் என்பதை ஆராய்ந்து திட்டத்தை உருவாக்குவதன் ஊடாகவே நாம் முன்றுவது பாதை உருவாக்க முடியும்.



## தேசிய விடுதலைப் போராட்டமும் தேசிய சக்திகளும்.

மனிதம் 20 இல் சிவகுமாரன் எழுதிய கட்டுரையை, நாம் விமர்சனத்துக்கு முன்னெடுக்க முன்பு, நாம் மனிதம் ஆசிரியர் குழுவுடனும், வாசகர்களுடனும் சில கருத்துகளை பகிர்ந்து கொள்ள விரும்புகின்றோம். முன்பு மனிதம் தொடர்பான எமது கருத்தை முன் வைத்தபோது திரிபுவாதம் என குறிப்பிட்டோம். இது தொடர்பாக மீண்டும் சமர் 7 இல் விவாதித்தோம். மனிதம் மீதும் கட்டுரை தொடர்பாக திரிபுவாதம் என சொன்னதென்பது, மனிதம் 13 ஆசிரியர் தலையங்கத்தை அடிப்படையாக வைத்தே. அதில் மனிதம் தமது பத்திரிகை தாங்கி வரும் கருத்துக்கு கட்டுரையாளரை மட்டும் பொறுப்பு எனச் சொல்லி நழுவி விடும் தன்மை தமக்கில்லை எனக் குறிப்பிட்டனர். அந்த வகையில் மனிதம் பொறுப்பேற்கும் நிலை இருந்தது. அதிலிருந்தே விமர்சனம் உங்கள் மீதும், இனிமேல் கருத்துக்கள் மீது பொறுப்பில்லை என மனிதம் சொல்லின் மனிதம் மீதும் விமர்சனம் வைப்பதை விட்டுவிடுகிறோம். இல்லாதவரை எமது விமர்சனம் (மனிதம் கருத்துகள் மீது கருத்துக் கூறவிடின்) உங்கள் மீதுமானதே. இதே கருத்துப்பட இறுதியாக வந்த சக்தி இதழில் ஒரு வாசகர் கருத்தை சுட்டிக் காட்டுகிறோம். -இன்னுமோர் குறை மற்றைய பல சஞ்சிகைகளைப்போல் ஆக்கங்களின் பொறுப்பை ஆக்கியோர் மேலேயே சுமத்துவது நான் அறிந்த வரையில் மனிதம் மட்டும் தான் அவ்வாறில்லை- இக் கூற்றை மனிதம் 18 இல் -விமர்சனமா தாக்குதலா- என்ற ஆ.குழுவின் விளக்கத்துடன் மறுத்துள்ளீர்கள். இது ஏன் ?. அக் கட்டுரை கரிகாலனின் ஆக்கங்களே எனச் சொன்னது என்பது மனிதம் 13 மற்றும் சக்தி வாசகர் கூற்றை நிராகரிப்பதே. மனிதம் 13 ஆசிரியர் தலையங்கம், தூண்டில் போன்ற சஞ்சிகைகளை சுட்டிக்காட்ட முனைந்தபோது அவ்விடயம் தீக்கும் பொருந்தும் என்பதை ஏன் கவனிக்கத்தவறியது.

திரிபுவாதம் என்பதை முத்திரை குத்தலாக காட்ட முனைவது திரிபுவாதத்தை பாதுகாப்பதில் இட்டுச் செல்லும். திரிபுவாதம் என்பது மார்க்சியத்தை திரித்து முன் வைக்கும் ஒரு கோட்பாடு. இது தொடர்பாக ஒரு நீண்ட விவாதம் நடைபெற முடியும். நாம் எப்படி திரிபாக உள்ளதென விளங்கப்படுத்தி முன்வைத்த கருத்துக்களைப் பற்றி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விமர்சிக்காமல் ஒற்றை வரிகளில் இது முத்திரை குத்தலை சொல்லியுள்ளீர்கள். மற்றும் இங்கு கருத்தாடல் நடைபெறவில்லை. ஒரு குறித்த பிரச்சனையை ஒட்டிய விவாதம் என்பது முந்தைய விவாதத்தை எடுத்து அது எப்படி சரி, பிழையாக இருக்கிறதென்பதை சுட்டிக் காட்ட வேண்டும். அதுவே கருத்தாடல். சிவகுமார் தூண்டில், சமர், உயிர்ப்பு முன் வைத்த எக்கருத்தையும், நாம் வைத்த ஆதாரங்களையும் விமர்சிக்கத் தவறி, தமது கருத்தை திணிக்க முயன்றுள்ளார். அத்துடன் கருத்தாடல் தேவையற்றது எனக் கூறி உங்கள் கருத்தாடல் என்ற விடயத்தையும் தவறாக கையாண்டு திணிக்க முயன்றுள்ளார். அவர் கருத்தாடல் நிராகரிப்பை இப்படிச் சொல்கின்றார். "இங்கு இனி நாம் நிகழ்த்த வேண்டிய விவாதம் புலிகள் தேசிய சக்தியா? இல்லையா? என்பதல்ல. மாறாக புலிகளின் போரினால் கிடைக்கப் போகும் நன்மை என்ன என்பதே ". இதற்குப் பெயர் கருத்தாடல். கருத்துக்களை திணிப்பதை கைவிடக்கோரும் அதேநேரம் மாற்றுக் கருத்துக்களை எடுத்து விமர்சித்து கருத்தை நிலை நாட்ட கோருகின்றோம். இல்லாமல் ஒற்றை வரியில் சொல்வது என்பது புலிகள் முதல் அனைத்து இயக்கமும் கருத்தை எதிர்கொள்ளத் தகுதியிழந்து ஒற்றைவரியில் துரோகி, கள்ளன் எனச் சொல்லி கொன்றொழிப்பதும் ஒன்றே. இதற்கு மாறாக கருத்தை எடுத்து விளக்கி கூற வேண்டும்.

மனிதம் தொடர்பாக எமக்கு ஒரு பார்வை உண்டு. உங்கள் பற்றிய தகவல்களை மனிதம் சஞ்சிகை தாங்கி வரும் கருத்துக்களைக் கொண்டு நாம் மதிப்பிடுகின்றோம். மனிதம் புலிகளுக்கு எதிரான அனைத்து சக்திகளின் கூட்டே. இது PLOT கடந்த 85 க்கு முன்னிருந்த நிலையை எமக்கு தெளிவுபடுத்தியது. PLOT 85 வரை செய்த நடவடிக்கையினை அதற்குள்ளிருந்த முற்போக்கு பிரிவினர் கூட ஏற்க முன்வராமல் நியாயப்படுத்தினர். அது போன்றே இன்று மனிதம் நாம் சொல்ல வரும் கருத்துக்களை கவனிக்கத் தவறி நியாயப்படுத்த(பாதுகாக்க) முனைகின்றனர். கொஞ்சம் நிதானமாக எமது கருத்துக்களைப் பார்க்கவும். பிழையெனில் அவற்றை ஒவ்வொன்றாக எடுத்து வைத்து எப்படியென புரியவைத்து எம்மை ஏற்கச் செய்யவும். இதுவே விமர்சன ஒழுங்கு.

திரிபுவாதம் இன்று உருவானதல்ல. மார்க்சியம் உருவான நாள் முதலே திரிபுவாதம் மார்க்சியத்துக்கு எதிராக இன்று வரை குழிபறிக்க முயற்சிக்கின்றது. இதற்கு எதிராக மார்க்சியர்கள் காலம் காலமாக போராடி வருகின்றனர். ஏன் சோவியத் முதல் சீனா வரை பின்னிருந்தே திரிபுவாதம் ஆட்சியைக் கைப்பற்றியது. ஏன் நாம் திரிபுவாதத்துக்கு எதிராகப் போராடக் கூடாதா? ஆரோக்கியமாக இவ் விவாதம் நடத்தப்படவில்லை என்ற வாதத்தில் ஆரோக்கியம் என்றால் என்ன?. நாம் திரிபுவாதத்துக்கு எதிராகக் குரல் கொடுப்பதையா?. இது மாற்றுக் கருத்தை மறுக்கும் வாதமே.

கட்டுரையாளர் "கரிகாலன் லெனினிசக் கட்சிக் கோட்பாடுகளை விமர்சனத்திற்கு உட்படுத்த வேண்டும்"என்கிறர். யாருமே இதை மறுக்கவில்லையே. கரிகாலன் எழுதிய கட்டுரையில் லெனினிச கோட்பாட்டை எங்கே விமர்சித்துள்ளார்? மார்க்சியத்தை வரிக்குவரி எடுத்து விமர்சித்தே தமது கருத்தை வைக்க வேண்டும். இதை விடுத்து, மாக்சியத்தை உச்சரித்தபடி அதைத் திரித்து திணிப்பது இயங்கியல் அணுகுமுறை அல்ல. அதாவது கரிகாலன் தனது விமர்சனத்தில் இயங்கியலுடன் ஏதாவது விமர்சித்துள்ளாரா? அப்படியாயின் எது? இது தொடர்பாக கரிகாலன் கட்டுரை மீதும் கேள்வி எழுப்பினோம். இவைகளை எல்லாம் சிவகுமாரன் கவனிக்காதது போல் நடித்து கரிகாலனின் கருத்தை வேறொரு வடிவில் திணிக்க முயல்கின்றார். லெனினிச கோட்பாடுகளை விமர்சனத்திற்குள்ளாக்க வேண்டும் என சொன்னபடி நவமாக்சியத்தை பின்பக்கக்

www.tamilarangam.net

கதவுகள் மூலம் திணிக்க நினைப்பது கருத்தின் பலவீனத்தினாலேயே .மாக்சியத்துக்கப்பால் உள்ள தத்துவங்கள் சரணடும் வர்க்க கோட்பாடுகளே. அவை மார்க்சியத்தை சொல்லிப் பிழைப்பதில்லை. மாக்சியத்தை இயங்கியலுடன் நிராகரிக்க தகுதியிழந்து மாக்சியத்தை சொல்லி புதிய கருத்தை திணிப்பதென்பது திரிபுவாதமே. இவர்கள் மார்க்சிய அடிப்படைக் கோட்பாடுகளை நிராகரிக்கின் றனர் . ஏன் இயங்கியலையே நிராகரிக்கின்றனர்.

"புலிகள் யாருடைய பிரதிநிதிகளும் இல்லை என்கிறர்" இதை சமரால் பொறுக்க முடியவில்லை. மாற்றுக் கருத்துக்களுக்கு கருத்துக்களால் முகம் கொடுக்கும் பண்பை மறந்து ஒரு வகை தாக்குதலுக்குள் இறங்கி விடுகின்றனர். இங்கு உள்ளார்த்தமான பிரச்சனை என்னவெனில் மாக்சியத்தை இயங்கியல் விதிக்கமைய விமர்சிப்பதையோ கேள்விக்குட்படுத்துவதையோ சமர் விரும்பவில்லை என்பதுதான். மாக்சியத்தை விமர்சித்தாலும் பரவாயில்லை என்ற தொனி இதைத்தானா வெளிப்படுத்துகிறது." மார்க்சியத்தை விமர்சித்தாலும் பரவாயில்லை என்ற தொனி எனக் குறிப்பிடுவதன் ஊடாக சிவகுமாரன் ஏற்றுக்கொள்கின்றர் கரிகாலன் மார்க்சியத்தை விமர்சிக்கவில்லை என்பதை. மார்க்சியத்தை விமர்சிக்காமல் மார்க்சியம் பழைமைவாதம் எனச் சொல்லும் கரிகாலன், ஏன் சிவகுமாரனின் வாதமும் திரிபை திணிப்பதே. இப்படி கூறியவர்கள் " மார்க்சியத்தை இயங்கியல் விதிக்கமைய விமர்சிப்பதையோ கேள்விக்குட்படுத்துவதையோ சமர் விரும்பவில்லை எனக் கூறி தனது முரண்பாட்டையே புரிந்து கொள்ளவில்லை. அதாவது மார்க்சியத்தை விமர்சிக்கவில்லை என்பதை மார்க்சியத்தை விமர்சித்தாலும் பரவாயில்லை என்னும் கூற்றுக் கூடாக ஏற்றவர்கள் பின் மார்க்சியத்தை இயங்கியலுடன் விமர்சித்ததாக கூறி தமது திணிப்பை நிலை நாட்ட முயல்கின்றனர். மார்க்சியத்தை இயங்கியலுடன் கேள்விக்குட்படுத்தியவர்கள் எனின் எங்கே? " மாற்றுக் கருத்துக்களுக்கு கருத்துக்களால் முகம் கொடுக்க முடியவில்லை என்ற வாதம் சுத்த அயோக்கியத்தனமானது. நாம் நீங்கள் வைத்த அனைத்து கருத்தையும் வரிக்கு வரி(ஒரு வரியும் விடாமல்)எடுத்து விமர்சித்து எமது கருத்தை அதன் மீது வைத்தோம். இப்படி விமர்சிக்கவில்லை என்றும் கருத்துக்கு முகம் கொடுக்கமுடியாதவர்கள் என்றும் முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் அமுத்திவிட நினைக்கும் உங்கள் வாதம் அப்பட்டமான பொய். எம் கருத்தை ஒவ்வொரு வரியாக எடுத்து விமர்சித்து உங்கள் கருத்தை நிலைநாட்ட தகுதியிழந்து திரிபை திணித்து நிலைநாட்ட முனையும் உங்கள் நிலையை எமக்கு சொல்லி தப்பித்துச் செல்ல முனைய வேண்டாம். இப்படியான நிலையில் நின்று கொண்டு எம்மை ஒருவித தாக்குதல் நடாத்துவதாகச் சொன்னது பிரச்சனையை திசை திருப்பவே. எப்படி என்ன மாதிரியான தாக்குதல் என அரசியலுடன் புரியவைக்கமுடியாத இவரின் ஒற்றைவரி ஒரு அரசியலாகவோ, தாக்குதலை எப்படியெனவும் புரிய வைத்துவிடவோ முடியாதது.

"கரிகாலன் சமர் மீது நடத்திய விமர்சனப் பண்பை தவறு எனச் சொன்னவர் எம்மைப் பற்றிச் சுட்டிக் காட்டும் போது விவாதம் நடத்தும் சக்தி யார் ? என்பதை மறந்து மாற்றுக் கருத்துக்களை திரிபுகளாக்கி தனது இறுகிய போக்கை இனம் காட்டுகிறது." நாம் விவாதங்கள் நடத்தும் சக்திகள் யார் என்பதை வெளிவரும் கருத்துக்கள் மூலம் அறிகின்றேம். அவைகளிலிருந்தே நாம் எமது கருத்தை முன் வைக்கிறேம். புலிகள் மட்டுமே எமது எதிரி(நீங்கள் பார்ப்பது போல் நாம் பார்க்கவில்லை). புலிகள் நேருக்கு நேரான எதிரி. அதிலிருந்தே விவாதம் நடத்தும் சக்தி யார் என உங்கள் வாதமும். போராட்டத்தை பின்னிருந்து அழிக்க முனையும் (திரிபுவாதிகள்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிழைப்புவாதிகள்-------)சக்திகளும் எமது எதிரிகளே. அந்தவகையில் இவர்களின் கருத்துக்களை நாம் அம்பலப்படுத்த முனைகின்றோம். புலிகளுக்கு எதிரான அனைவரையும் உள்ளடக்கிய ஐக்கிய முன்னணி (விமர்சனமின்றி) கோரின் புதிய ஒரு புலியையே உருவாக்கும். இதை எமது கடந்தகால போராட்டத்தின் இயங்கியலுடன் மிகத்தெளிவாகக் கூறுகின்றோம். சமர் இல் இது தொடர்பாக நாம் தெளிவுபடுத்தியுள்ளோம். மாற்றுக்கருத்துக்களை திரிபுகளாக்கி என்பது நாம் மாற்றுக்கருத்துக்கள் அனைத்தையும் திரிபு என சொல்வதாக உண்மைக்குப் புறம்பாக கருத்தை திணிக்க முயன்றுள்ளார்.நாம் கரிகாலன் கட்டுரையை மாற்றுக்கருத்தாக பார்த்து அது திரிபாகவும், திணிப்பாகவும் இருந்ததை தெளிவாக விவாதித்து முன்வைத்தோம். அதேநேரம் தூண்டில், உயிர்ப்பில் வெளிவந்த கருத்துக்களை மாற்றுக்கருத்தாகப் பார்த்து விமர்சித்தோம். அவைகளைத் திரிபெனச் சொல்லவில்லை. இன்று நாம் பல பக்கங்களிலும் எதிர்நோக்கும் அனைத்துக் கருத்தையும் மாற்றுக்கருத்தாகப் பார்க்கின்றோம், விமர்சிக்கின்றோம். நாம் சமர் 7 இல் வைத்த திட்டம் ,மற்றும் கருத்துக்கள் மீதான எமது விமர்சனங்கள் இவரின் வாதமான " மாற்றுக் கருத்துக்களை திரிபுகளாக்கி " என்ற வாதத்தை தகர்த்து விடுகின்றது. சமர் நிலையான ஒன்றல்ல. அது இயங்கிக்(இங்கு கருத்தைக் குறிப்பிடுகின்றோம்)கொண்டிருப்பதால் சரி பிழைகளை சந்திக்கின்றது.

முற்போக்குச் சக்திகள் தமக்கிடையில் ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றங்களினூடாக ஒரு பொதுவான நிலைப்பாட்டுக்கு வந்தடைய வேண்டும் என்று பக்கம் பக்கமாக எழுதிக்கொண்டே இப்படிக் குறுகிக்கொண்டே போவதை நாம் எப்படிப் பார்ப்பது? என்ற வாதம் சமர் தனது கருத்தைக் கைவிட்டு திரிபுவாதிகளுடனும், பிழைப்புவாதிகளுடனும் கைகோர்க்கக் கோருவதே. தவறான கருத்துக்கள் கொண்டுள்ளவர்களுடன் விமர்சனமின்றி ஐக்கியப்படும்படி(எமது கருத்தைக் கைவிட்டு)கோருவதே. இது PLOT இல் உமாமகேஸ்வரன், சந்ததியார் ஐக்கியப்பட்டது போல. இது இறுதியில் எதைச் சாதித்தது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். நாம் கருத்தில் தவறிழைக்கும் போது அதை சுயவிமர்சனத்துடன் திருத்திக்கொள்ளத் தயாராகவேயுள்ளோம். எமது கருத்துப் பிழையென இயங்கியலுடன் சுட்டிக்காட்டாமல் யாரும் எம் கருத்தைக் கைவிடும்படி கோர முடியாது.

"மார்க்சியத்தை இயங்கியல் விதிக்கமைய விமர்சிப்பதோ,கேள்விக்குட்படுத்துவதோ சரியா என்னும் சர்ச்சை மார்க்சியம் என்ற சமூக விஞ்ஞானம் படைக்கப்பட்ட காலத்திலிருந்து காலம் காலமாக நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது. மார்க்சியத்தை இயங்கியல் விதிக்கமைய விமர்சிப்பதையோ கேள்விக்குட்படுத்துவதையோ திரிபுவாதம் என்கிறார்கள். " என சிவகுமாரன் மார்க்சியத்தை திரித்துப்புரட்டியபடி தானும் கரிகாலனும் இயங்கியலுடன் விமர்சித்ததாகச் சொல்லி அப்பட்டமான பொய்யை சொல்லியுள்ளார். மார்க்சியத்துக்கும் இயங்கியலுக்கும் தொடர்பில்லை என தனது திரிபை மார்க்சியம் மீது சொல்லி தனது கருத்தை திணிக்க முனைகின்றார். இயங்கியலின்றி மார்க்சியமில்லை. மார்க்சிசம் நிலையானதெனச் சொல்லி கருத்துமுதல்வாதக் கோட்பாட்டை உயர்த்திப்பிடித்துள்ளார். மார்க்சிசம் தோற்றதென சொல்லவரும் இவர் கூட கருத்து முதல்வாதநோக்கில் நின்று இயங்கியலை நிராகரித்து முதலாளித்துவக் கோட்பாட்டை உயர்த்திப்பிடிக்கிறார். மார்க்சியத்தை இயங்கியல் விதிக்கமைய விமர்சிப்பதை சரியா என்னும் சர்ச்சை மார்க்சிசம் உருவான நாள் முதல் உள்ளது எனின் யார் சொன்னது? நீங்கள் இக் கட்டுரையில் குறிப்பிடுகின்றீர்களா? மார்க்சியத்தை நிராகரித்து கருத்துமுதல்வாதிகள் (மத பீடம்,முதலாளித்துவ தத்துவவாதிகள்)இயங்கியலை

www.tamilarangam.net

நிராகரிக்கின்றனர். இதில் நீங்கள் இணைந்தது ஒன்றும், ஈழப்போராட்டத்தில் முற்போக்குக்குள் இருப்பது ஒன்றும் ஆச்சரியமானதில்லை. கடந்த 15 வருட போராட்டத்தில் இப்படிப் பல எம்மால் பார்க்க முடிந்தது. மார்க்சியத்தை இயங்கியலுடன் விமர்சித்தால் திரிபுவாதம் என சொன்னதாக சொல்லி அப்பட்டமான பொய்யை சொல்லியுள்ளீர்கள். கரிகாலனோ சிவகுமாரனோ இயங்கியலுடன் மார்க்சியத்தை விமர்சிக்கவில்லை. அப்படி விமர்சித்ததாகச் சொன்னபடி தமது திரிபை திணிக்க முயன்றுள்ளனர். மீண்டும் கேட்கின்றோம் மார்க்சியத்தை இயங்கியலுடன் பொருள் முதல்வாத நோக்கில் விமர்சிக்கக் கோருகின்றோம். மார்க்சியத்தை இயங்கியலுடன் விமர்சித்தால் யாரும் திரிபெனச் சொல்லப்போவதில்லை. ஆனால் இயங்கியலை(நீங்கள் கூறுவது போல்)கைவிட்டு மார்க்சியத்தை திரிப்பதை யாரும் திரிபென்றே கூறுவர்.

"மார்க்சியம் புரட்சிகரமானதாக இருப்பதால் அதுவே எல்லாக்காலத்துக்கும் தோன்றும் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் சர்வரோக நிவாரணியாகிவிடும் என்று கருதுவோமாயின் மார்க்சியத்தை தவறாகப் புரிந்திருக்கின்றோம் என்பதுதான் பொருள். வரலாற்றுப் போக்கில் ஸ்தூலமான நிலைமைகளில் மார்க்சிசம் இன்னும் பல கேள்விகளை தன்னுள்ளே எழுப்பிக்கொண்டே தான் இருக்கின்றது." என்கிறார் சிவகுமாரன். மார்க்சிசம் புரட்சிகரமானது என தனது புரட்டலை முதல் சொன்ன பந்தியுடன் நிகழ்த்துகின்றார். இயங்கியலையும் மார்க்சிசத்தையும் கேள்விக்குள்ளாக்கியவர் அடுத்த வரியில் புரட்சிகரமானதெனச் சொல்லி திரித்துப் புரட்டுகின்றார். அனைத்துப் பிரச்சனையையும் மார்க்சியம் தீர்க்காது எனச் சொன்னவர் அப்படியாயின் நீர் கருதும் முதலாளித்துவக் கோட்பாடு தீர்க்குமா? மார்க்சிசம் அனைத்துப் பிரச்சனையையும் தீர்க்காது என நீங்கள் வாதாடுவது இயங்கியலை நிராகரித்துக்கொண்டே. மார்க்சிசம் இயங்கியலுடன் வளர்வது மட்டுமன்றி எதிர்காலத்தில் எழும் அனைத்துப் பிரச்சனைகளையும் இயங்கியலுடன் மார்க்சியம் தீர்வைப் பெறும். பொருள்முதல்வாத நோக்கில் உருவான மார்க்சிசம் தீர்க்க முடியாத எப்பிரச்சனையையும் கருத்துமுதல்வாதம் தீர்த்துவிடப் போவதில்லை. மார்க்சியத்தை இயங்கியலுடன் புரியாத நீங்கள் மார்க்சியத்தை தவறாகப் புரிந்துள்ளதாக குற்றம் சாட்டி திரிபை திணிப்பதைக் கைவிடக்கோரும் அதேநேரம் உங்கள் இயங்கியலை நிராகரித்த கருத்துமுதல்வாதக் கோட்பாட்டை மார்க்சியத்துக்கு வெளியில் நின்று வைக்கக் கோருகின்றோம்.

அலட்சியம், இறுகிய போக்கு என்பனவற்றைக் கைவிட்டு ஆரோக்கியமான விவாதத்தை நடத்தக் கோரியவர் மேலும் மூலவர்களோடு இறுகிப்போயிருக்கவில்லை. அவர்களின் பின்னால் மறைந்தும், மறைக்கப்பட்ட பல தத்துவ மேதைகளால் வளர்த்தெடுக்கப்பட்டது, வருகிறது" எனக் கூறியுள்ளார். அலட்சியப்போக்கு என எம் போன்றவர்கள் மீது வைத்த குற்றச்சாட்டு அப்பட்டமான பொய். உங்களை விட நாம் மிக அவதானமாக உங்கள் கருத்துக்களை கற்று அது திரிபாக இருப்பதை அம்பலப்படுத்துவதில் முழுக்கவனம் செலுத்துகிறோம். நீங்களே அலட்சியமாக எமது கருத்துக்களை விமர்சிக்க முன்வராமையுடன் மார்க்சியத்தை இயங்கியலுடன் விமர்சிக்கத்தவறி அலட்சியமாக ஒற்றைவரிகளில் கருத்துக்களை திணிக்க முயல்கின்றீர்கள். இறுகிய போக்கு என்பது நாம் அடிப்படை மார்க்சியத்தை உயர்த்திப் பிடிப்பதைத்தான். அதை கைவிட்டு வருவதை ஆரோக்கியம் எனச்சொல்லி கருத்துச் சுதந்திரத்துக்கு முழுக்கு போட முயல்கின்றார். எமது கருத்துக்களை விமர்சித்து தமது கருத்தை நிலைநாட்ட முடியாத நிலையில் நின்று கொண்டு இறுகிய போக்கை கைவிடுங்கள் என கூறிக்கொண்டு இவ்விவாதத்தை கைவிடக் கோரியதுடன், நடக்கும் போராட்டத்தில் புலிகளால் கிடைக்கும் நன்மையை ஆராய வரும்படி கருத்துப்பலம் இன்றி திணிப்பை நிகழ்த்தியபடி கோருகின்றார். மார்க்சியம்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூலவர்களோடு இறுகிப் போய்விடவில்லை எனச் சொல்லும் இவர் இயங்கியலை கேள்விக்குள்ளாக்கியவர் எப்படிக் கூறமுடியும். மூலவர்கள் மார்க்சியத்தை உருவாக்கியவர்களல்ல. இயங்கியலை ஏற்காத இவருக்கு தெரிய நியாயமில்லை. மார்க்சியம் இச் சமூக விஞ்ஞானத்தின் தோற்றத்துடன் உருவானது. அதைக் கற்றுக் கொண்ட மூலவர்கள் அதை ஒழுங்குபடுத்தி சரியான வகையில் முன்வைத்ததுடன் திரிபுகள், வரட்டுவாதிகள்---இடமிருந்து மார்க்சிசத்தைக் காப்பாற்றி உயர்த்தி வைத்தனர். மார்க்சிசம் இயங்கியலுடன் இயங்கும் பண்பே மார்க்சிசம் தொடர்ந்து வளர்ந்து செல்கின்றது. இங்கு இவர் இயங்கியல் இல்லாமல் மார்க்சியத்தை திரித்த நபர் பற்றி குறிப்பிடுகிறார் என நாம் கருதுகின்றோம். அதுவும் தான் மறைந்தும், மறைக்கப்பட்ட தத்துவவாதிகள் பற்றிக் குறிப்பிடுகின்றார். ஒரு தத்துவத்தை யாரும் மறைத்துவிட முடியாது. தத்துவம் சரியாக இல்லாதபோது அங்கு அது மறைந்து விடுகிறது. மார்க்சியம் உருவான நாள் முதல் எத்தனை பேர் அதைத் தாக்கினர். இன்று அவர்களின் தத்துவம் அழிந்துபோனதுடன் மட்டுமன்றி, சிலர் அதில் ஒரு பகுதியை எடுத்து புதிய திரிபை புகுத்த முயல்கின்றனர். சமூக இயக்கத்தின் தோற்றத்தோடும் அதில் ஏற்பட்ட முரண்பாடுகளுடன் உருவான மார்க்சியத்தை மூலவர்கள் எனச் சொல்லி தனி நபர்கள் மட்டத்தில் மார்க்சியத்தை குறுக்கி திணிக்க முயல்வதுடன், மக்கள் போராட்டத்தை கேலி செய்வதுமாகும்.

"ஒரு பயனுடைய விவாதத்தை நிகழ்த்தும் நாம் எழுந்தமானமாக முற்போக்கு, பிற்போக்கு,திரிபு, முத்திரை குத்தாமல் கருத்தின் பலத்தை காண்பதே ஆரோக்கியமான அணுகுமுறை" எனக் கூறியுள்ளார். பயனுடைய விவாதத்தை நிகழ்த்தவென ஒரு ஆலோசனையை சொன்னவர் கட்டுரையின் தொடர்ச்சியில் புலிகள் தேசிய சக்தியா? இல்லையா? என்ற விவாதத்தைக் கைவிடக் கோரியுமுள்ளார். இங்கு பயனற்றது எனச் சொல்லி புலிகளின் போராட்டத்தில் நன்மை தொடர்பாகக் கதைத்து, புலிகளை தேசிய சக்தி எனக் குரல் கொடுத்துள்ளார். எம்மை கருத்தின் பலத்தில் நின்று விவாதிக்கக் கோரியவர் நாம் கருத்துப்பலம் அற்றவர்கள் என வாதிட்டுள்ளார். எமது விவாதம் உங்கள் அனைத்து வரிகள் மீதும் தெளிவாகவும், உறுதியாகவும் கருத்தை முன்வைத்தே எமது கருத்தை சொல்கிறோம். அதேநேரம் நீங்கள் கருத்துப்பலம் இன்றி எம் கருத்துக்களை விமர்சிக்க முன்வராமல் கருத்துக்களை ஒற்றை வரியில் சொல்லித் திணிக்க முயன்றுள்ளீர்கள். முற்போக்கு, பிற்போக்கு,திரிபு---- என்பன வெளிவரும் கருத்துக்கள் மீதானதே. புலிகளை தேசபக்தர்கள் என கடைசி வரியில் குறிப்பிட்டு எழுந்தமானமாக விவாதத்தை நிராகரித்து திரித்து திணிப்பை முத்திரை குத்தலாக நிகழ்த்தியுள்ளீர்கள். ஒரு கருத்து தொடர்பாக முற்போக்கு, பிற்போக்கு--- என சொல்ல முடியும். நீங்களே கருத்துக்களை(விவாதத்தில் உள்ளதை) எடுத்து விவாதிக்கத்தயாரின்றி முத்திரை குத்தல் போல் கருத்துக்களை திரித்து திணித்துள்ளீர்கள்.

"தேசிய விடுதலைப் போராட்டமா? ஐக்கியப்பட்ட புரட்சியா? என்ற விவாதம் அவசியம் எனக் குறிப்பிட்டார்." இது தொடர்பாக மனிதத்தின் கருத்தை ஒட்டி தூண்டில் ஒரு விமர்சனத்தை முன் வைத்தது. அதுவே எமது கருத்தும். இன்று வரை அதை விமர்சிக்க முன்வராமை ஏன்? தேசிய விடுதலைப் போராட்டத்தில் புலிகளை மதிப்பிடுவது தொடர்பாக விவாதிக்கவேண்டாம் எனக் கோரியவர் கட்டுரையின் இறுதியில் தேசிய சக்தி தொடர்பாக விவாதத்தை விவாதிக்கத் தேவையில்லை எனச் சொல்லி தனது திரிபை திணிக்க முயன்றுள்ளார். தொடர்ந்து சிவகுமாரன் இதுவரை நிகழ்ந்த விவாதங்களை தொகுப்பாக்கிய உயிர்ப்பு புலிகள் தேசிய சக்திகள் தான் ஆயினும் பிற்போக்குத் தேசிய சக்திகள் என்ற பதத்தை வந்தடைகிறது. சி.சிவசேகரம் இந்தக் கருத்தையே முன்வைக்கிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இது கூட ஒரு விவாதத்தின் இயங்கியலில் நின்று சொல்லவில்லை. உயிர்ப்பு எந்த நிலையிலும் புலிகள் தொடர்பாக பல கேள்விகளை எழுப்பியவர்கள் ஒரு முடிவை சொன்னதில்லை. சிவசேகரம் தேசிய சக்தி தொடர்பாக எந்த கருத்தையும் சொல்லவில்லை. மாறாக சொற்பிரயோகம் தொடர்பாகவே விவாதித்தார். அது அல்லது இது என இரட்டை தன்மையில் கருத்தை வெளிப்படுத்தினார். உயிர்ப்போ, சிவசேகரமோ நாம் வைத்த கருத்துக்களை எடுத்து விவாதித்து ஒரு கருத்தை முன்வைக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டுகிறோம்.

"தேசியம், தேசிய அரசு போன்ற கருத்தாக்கங்கள் எல்லாம் விடுதலை போன்ற கருத்தாக்கங்கள் போலவே கடந்த 200 ஆண்டுகளாக பிரான்ஸ், ஆங்கிலேய சமுகங்களிலிருந்தே உலகுக்கு பரப்பப்பட்ட கருத்துக்களே." . இவ் விவாதம் தவறானது. விடுதலை, சுதந்திரம் போன்ற கருத்தாக்கங்களை பிரான்சு, ஆங்கிலேய சமுகத்திலிருந்து பெறவில்லை. சமுதாயம் உருவான நாள் முதல் போராட்டங்கள் இருந்தன. அங்கு விடுதலை , சுதந்திரம் என்ற கோசுங்கள் எழுந்தன. இதுவே இயங்கியல். மனித சமுதாயத்தில் பல தியாகங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறது. இதை நிராகரித்து பிரான்சு, ஆங்கிலேய சமுகத்திலிருந்து உருவானதெனச்சொல்லி திரிபுக்கு வளம் சேர்க்க முயன்றுள்ளார். தேசியம் தேசங்களின் உருவாக்கத்துடன் அரங்குக்கு வந்தது. அதாவது முதலாளித்துவ வளர்ச்சியுடன் தேசங்கள் மையப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு நாட்டிலும் சந்தைப் பொருளாதாரம் கோரி நின்றது. இதன் வெளிப்பாடாக தேசம் உருவானது. இதிலிருந்து தேசிய எழுச்சிகள் வெளிப்பட்டன.

"உறக்க நிலையில் இருக்கும் பழைய ஆற்றல் விழித்துக்கொள்வதில்லை. ஆனால் அது அப்படித்தான் நிகழ்கின்றன.''. என்ற வாதத்தில் உறக்க நிலையில் இருப்பதில்லை எனச்சொல்லி ஆனால் போட்டு அப்படித்தான் என திரித்துள்ளார். தமிழ்த்தேசியம் உறக்க நிலையில் இருப்பதில்லை. இது போன்றே அனைத்துப் பிரச்சனையும். எழுகின்ற முரண்பாடுகளின் வெளிப்பாடாகவே தேசிய இன முரண்பாடு முன்னிலைக்கு வருகின்றது. பிரதான முரண்பாட்டுக்கு அப்பால் பல முரண்பாடுகள் இருக்கலாம். அவை முன்னிலைக்கு வர முடியும். சில பிரதான முரண்பாட்டின் அழிவுடன் அழிந்துவிடும். உறக்க நிலை என்பது கற்பனையானது.

சமுகம் இயங்கிக்கொண்டிருக்கும் போது ஏற்படும் முரண்பாடுகள் சமுகத்தின் முன் புதிய முரண்பாடுகளை முன்தள்ளும். இதைப் போன்றே தமிழ்த்தேசியமும்.

"தமிழ்த்தேசியத்தின் விடுதலைக்கான போரில் ஈடுபடும் சக்திகள் அனைத்துமே தேசிய சக்திகள் தான். ஈழமோ தமிழீழமோ தமிழ் தேசியத்தின் விடுதலையை வென்றெடுப்பதற்கான அரசியல் வரையறையாகும் " என சிவகுமாரன் வாதிட்டுள்ளார். இப்படிப் பார்த்தால் ஜேர்மனிய தேசத்தை உயர்த்திப் பிடித்த ஹிட்லரும் தேசியவாதியே. ஈராக்கின் தேசியத்தை உயர்த்திப்பிடிக்கும் சதாம் குசேனும் தேசியவாதியே. இந்திய தேசியத்தை உயர்த்திப்பிடிக்கும் காங்கிரசும் தேசியவாதிகளே. சிங்களதேசியத்தை உயர்த்திப்பிடிக்கும் பிரேமதாசாவும் தேசியவாதியே. ஒரு தேசவிடுதலைப் போராட்டத்தை ஏகாதிபத்தியமும் முன்னெடுக்க முடியும். ஆப்கானிஸ்தான் போராட்டத்தை அமெரிக்காவே பின்னிருந்து நடாத்தியது. இது தொடர்பான நீண்ட கருத்துக்களை நாம் முன்பே வைத்துள்ளோம். தேசியத்தை ஒருவன் சொன்னால் அவன் தேசியவாதியல்ல. அவனின் போக்கு தான் தேசியத்தை பிரதிபலிக்கிறதா இல்லையா என வைத்து ஆராய முடியும்.

"காலனி ஏகாதிபத்திய எதிர்ப்பு போரில் மட்டும்

www.tamilarangam.net

முற்போக்கு பாத்திரத்தை ஆற்ற முடியும் என்றும் கருதியது. காலனி ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டமற்ற இன்றைய இலங்கை போன்ற தேசங்களில் நிகழும் போராட்டங்கள் பிற்போக்கானதாகவே கருதப்படுகிறது. இது தான் மரபார்ந்த மார்க்சியர்களின் பார்வையாகவும் இருக்கிறது. இதையே தேசிய நிகழ்வுப்போக்கை புரிந்து கொள்வதில் மார்க்சியம் மாபெரும் தோல்வியை தழுவி விட்டதாக இன்றைய மார்க்சிய ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். யார் குறிப்பிட்டனர் ? நீங்கள் உட்படத்தான். இவ் விவாதத்தில் தனது திரிபை மீண்டும் திணிக்க முயல்கின்றார். இலங்கையில் தமிழ் மக்களின் போராட்டம் ஏகாதிபத்திய காலனி எதிர்ப்புப் போராட்டம் இல்லை எனச் சொல்லி பிற்போக்கானது என மார்க்சியர்கள் சொல்வதாக வாதிட்டு மார்க்சியம் பெரும் தோல்வியை அடைந்ததாக திரித்து விடுகின்றனர். இன்றைய போராட்டம் ஏகாதிபத்தியத்துக்கும் தரகு முதலாளியத்துக்கும் எதிரானது. அந்த வகையில் சுதந்திரத்தின் பின் காலனியாக இருந்த இலங்கை நவகாலனி வடிவத்தை அடைந்துள்ளது. இன்றைய போராட்டம் ஏகாதிபத்தியத்துக்கு எதிரானது. இதை இல்லையென திரித்து மார்க்சியம் தோற்று விட்டதென உண்மைக்குப் புறம்பாக திணிக்க முயல்கின்றார். நடக்கும் யுத்தம் யாருக்கெதிராக? வெறும் சிங்கள மக்களுக்கு எதிராகவா? சிங்கள அதிகாரபீடத்துக்கு எதிராகவா ? அப்படியான அதிகாரபீடம் ஏகாதிபத்திய சார்பில்லையா ? இன்று இலங்கை ஏகாதிபத்திய சார்பாக நவகாலனி பிடிக்குள் இல்லையெனில் 1948 இல் பெற்ற சுதந்திரம் உண்மையான விடுதலையா ? மரபார்ந்த மார்க்சியர்களின் பார்வையானது இப் போராட்டம் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக இல்லை என பார்ப்பதாக யார் பற்றியோ இவர் கற்பனையில் சொல்லி அவர்களை மார்க்சியவாதிகளென குறிப்பிட்டும் மார்க்சியம் தோற்றுவிட்டதாக மார்க்சிய ஆய்வாளர்கள் (திரிபுவாதிகள்) கூறியதாக சொல்லி திரிபை திணிப்பாக நிகழ்த்தியுள்ளார். மார்க்சியம் தேசியப் போக்கை விளக்குவதிலும் சரியாகவுள்ளது. இன்று இத் தேசியப் போக்கை புரிந்து கொண்ட பிலிப்பைன்ஸ், சோவியத்---- கம்யூனிஸ்ட் கட்சிகள் போராட்டத்தை முன்னெடுத்து வீறுநடை போடுகின்றனர். சோவியத் யூகோஸ்லேவியா தேசிய இனப்போராட்டங்கள் தீவிரமடைய 1953 இன் பின் ஆட்சியேறிய திரிபுவாதிகளின் வேலைத்திட்டமே தேசிய இன முரண்பாட்டை முன்தள்ளியது. இவை காரணமாக இருக்க மார்க்சியம் இறந்துவிட்டதென வெற்றுக்கூச்சல் எழுப்பி திரிபை திணிக்க முயல்கின்றனர்.

இனி நாம் நிகழ்த்த வேண்டிய விவாதம் புலிகள் தேசிய சக்தியா இல்லையா என்பதல்ல மாறாக புலிகளின் போரினால் கிடைக்கப்போகும் நன்மை என்ன என்பதே. இக்கட்டுரைக்குப் பெயர் கருத்தாடல். தலைப்பு தேசிய சக்தியும் பாசிச சக்தியும். இருந்தும் இதை இத்துடன் விமர்சிக்க வேண்டாம் எனக் கேட்டு தனது திரிபை திணிக்க முயன்றும் உள்ளார். கருத்தியல் ரீதியில் எம் கருத்துக்கள் மீது (ஒன்று கூட) எதையும் வைக்க முடியாத இவரின் விவாதம் ஒற்றை வரியில் சரி பிழைகளை சொல்லி மார்க்சியம் இறந்து விட்டது எனச் சொல்லி தனது திரிபை பின்பக்க கதவுகள் மூலம் திணிக்க முயன்றுள்ளார். நாம் வைத்த கருத்துக்கு யாரும் இயங்கியலுடன் மறுக்காத , இன்றைய நிலையிலும் எமது கருத்தை முடிந்த முடிபாக வைத்து இவ் விவாதத்தை நிறுத்தக்கோரவில்லை. மாறாக கருத்தை முன்வைக்க கோரும் நாம் அதை விவாதிக்கின்றோம். இவர் இவ் விவாதத்தை நிறுத்தக் கோரியவர் புலிகளினால் கிடைக்கும் நன்மை தொடர்பாக விவாதிக்க கோருகின்றனர். ஏன் புலிகளின் ஆதரவாளர்கள் கூட இதைத்தான் கோருகின்றனர். இவருக்கும் அவர்களுக்கும் என்ன தான் வேறுபாடுண்டு. புலிகளின் போராட்டத்தினால் எந்த நன்மையும் நாம் பெற்றுவிடப்போவதில்லை. இது கடந்த போராட்டம் எமக்கு தெளிவாக உணர்த்துகிறது. " தமிழ் மக்கள் சுதந்திரமான வாழ்வை விரும்புவதால் புலிகளின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராட்டத்தால் அது கிடைக்கும்". எவ்வளவு வேடிக்கை. தமிழ் மக்களுக்கு இராமன் ஆண்டால் என்ன இராவணன் ஆண்டால் என்ன தமிழ் மக்கள் சுதந்திரத்தை வென்று விடப்போவதில்லை. இவரின் விவாதப்படி இன்று புலிகள் விடுதலை செய்த பிரதேசத்தில் தமிழ்மக்கள் சுதந்திரமாக(முன்பிருந்ததை விட) வாழ்வதாக உண்மைக்கு புறம்பாகக் கூறி தனது திரிபுக்கு ஆதாரம் தேடப்புறப்பட்டுள்ளார்.

"இதற்கப்பால் நம்பிக்கை கொள்ளும் வகையில் எந்த வழிமுறையும் தெரியவில்லை" ஆம் உண்மை தான். அதற்காக புலிகளை ஆதரிக்க கோருகின்றார். இதற்கு எதிராக புதிய அமைப்பை உருவாக்குவதே ஒரே வழி. இதற்கு திரிபுகளை கைவிட்டு, புலிகளை விமர்சித்து மூன்றாவது அணியை உருவாக்கக் கோருகின்றோம். இதுவே தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய ஒரு தீர்வுமாகும்.

"முற்போக்கு சக்திகள் ஐக்கிய இலங்கை வர்க்கப்பார்வை போன்றவற்றில் மூழ்கிக் கொண்டு இருந்தபோது புலிகள் தமிழ் மக்களின் ஜனரஞ்சக ஜனநாயகக் கருத்துப்பரப்பை கைப்பற்றி விட்டார்கள்." முற்போக்கு சக்திகளின் ஒருபகுதியே ஐக்கிய இலங்கை என்பதை இன்று போராட்ட விரக்தியில் முன்வைக்கின்றனர். இவை கூட சரியான விளக்கங்களுடன் அல்ல. ஈழப் போராட்டம் தீவிரமான காலகட்டத்தில் ஐக்கிய இலங்கை என மற்றோர் சொல்லியதால் புலிகள் தமிழ்மக்களை வென்றுவிடவில்லை. வர்க்கப்பார்வை இன்று போராட்ட தோல்வியுடன் சரியாக ஆய்வு செய்து உயர்த்திப் பிடித்துள்ளனர். போராட்டம் தீவிரமான காலகட்டத்தில் வர்க்கப்பார்வையை யாரும் தீவிரமாக உயர்த்திப் பிடிக்கவில்லை. அப்படி சரியாக உயர்த்திப் பிடித்திருப்பின் இன்று புலிகள் அரங்கில் வந்து இருக்க முடியாது. போராட்டத்தின் தோல்வி வர்க்கப்பார்வையை உயர்த்தியதால் அல்ல. அனைத்து இயக்கங்களின் வரலாற்றில் எங்கே வர்க்கப் போராட்டத்தை, ஐக்கிய இலங்கையை உயர்த்தி புலிகளை வளரவிட்டனர். புலிகள் ஜனரஞ்சக ஜனநாயக கருத்துப்பரப்பை கைப்பற்றியதாகக் கூறி புலிகளை நியாயப்படுத்தியுள்ளனர். புலிகள் ஜனநாயகம் வழங்கி மக்கள் விருப்பும் புலிகள் விருப்பும் ஒன்றாகவுள்ளதாக புலம்பி புலிகளுக்கு வக்காலத்து வாங்கியுள்ளனர். புலிகள் இன்று மக்களுக்கு ஜனநாயகம் வழங்கி மக்கள் கருத்துப் பரப்பை புலிகள் வென்றனர் என்பதை புலிகளே ஏற்க மாட்டார்கள். துப்பாக்கி மூலம் அதிகாரத்தை மக்கள் மீது செலுத்தும் புலிகள் மக்களின் ஜனரஞ்சக ஜனநாயகத்தை வென்று விடவில்லை. புலிகள் மக்களை சுரண்டி ஏகாதிபத்திய விசுவாசிகளான தரகு முதலாளித்துவ பிரிவினரே. புலிகளின் போராட்டம் தமிழ்மக்களின் நலன்களை தனது நோக்கில் உயர்த்திப்பிடித்தபடி மக்களை அடக்கி ஒடுக்குகின்றனர். தலைமை வேறு ஊழியர்கள் வேறான பார்க்கமுடியாது. புலிகளை பார்க்கும் போது புலிகளின் வர்க்க நலன்களையே பார்க்கவேண்டும். கீழ்பட்ட ஊழியர்கள் உண்மையான விடுதலையை நேசிப்பவர்களாக இருக்கலாம். ஆனால் அவர்களின் செயற்பாடு தேசவிடுதலைக்கு எதிரானது. தேசவிடுதலைக்கு எதிரான இவர்களின் செயற்பாடு இவர்களின் விருப்பத்தை பூர்த்தி செய்துவிடப்போவதில்லை. கருத்துக்களை விவாத ஒழுங்குகளை கடைப்பிடித்து எமது கருத்தின் மீது கருத்துக்களை வைத்து உங்கள் கருத்தை வைக்குமாறும் மீண்டும் மீண்டும் கோருகின்றோம்.

சமர்.

www.tamilarangam.net

# தமிழ் மக்களின் போராட்டம் வெறும் பதுகாப்பு யுத்தம் மட்டுமா? அல்லது அரசியல் அதிகாரத்துக்கான போராட்டமா?

இன்று தமிழீழப் போராட்டம் தவறானது எனவும் அது குட்டிபூர்சுவா, குறுந்தேசியவாத ..... என வரையறுத்து பலர் இன்று கருத்துக்கூறுகின்றனர். அவர்கள் அதில் இருந்து ஐக்கிய இலங்கைப் புரட்சியைக் கோரி நிற்கின்றனர். ஐக்கிய இலங்கை புரட்சிக்கான ஒன்றுபட்ட கட்சியைக் கோரும் அனைவருக்கும் இக்கட்டுரை பதில் அளிக்கிறது.

இக்கட்டுரையுடன் மாறனின் கட்டுரைக்கும் சமர் 8 இல் மாறனின் கடிதத்துக்கும், மனிதம், உயிர்ப்பு, பனிமலரில் வெளிவந்த மாறனின் கருத்துக்களை உள்ளடக்கியதே இவ் விமர்சனம். அத்துடன் தேடலில் இந்திரனின் கருத்துக்களையும் இக் கட்டுரையில் விமர்சிக்கிறோம். முதலில் மாறனின் கட்டுரையும் அதைத் தொடர்ந்து எமது கட்டுரையும் வெளிவருகின்றது.

xxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxx

சமர்-8 இல் நான் தங்களுடன் பரிமாறிய கருத்துக்கள் தொடர்பாக பதில் அளித்திருந்தீர்கள். ஐக்கிய இலங்கை புரட்சி என்பதுடன் தொடர்பு பட்டு நீங்கள் அளித்த பதில் தொடர்பாக எனது கருத்தை தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

ஐக்கிய இலங்கை புரட்சி பற்றி பேசுகின்றவர்கள் மாயையான தன்மையில் விரக்தி மனோபாவத்தில் தான் அப்படி ஒரு முடிவுக்கு வந்திருப்பார்கள் குழம்புகின்றார்கள் என்கின்ற தங்கள் கருத்து மூலம் ஐக்கிய இலங்கைப்புரட்சி என்பது ஓர் ஆரோக்கியமான கருத்தின் தளத்தினது அல்ல (இக்காலகட்டத்தில்) என்று கூறுகின்றீர்கள் என கருதுகின்றேன். எனினும் நீங்களும் சாத்தியப்பாடு ஏற்படும் போது தென்னிலங்கையில் புரட்சிகர சக்திகளின் வளர்ச்சி காணப்பட்டால் பிரிவினையைக் கைவிட்டு ஐக்கியப்பட்ட புரட்சியை நோக்கி போராடவேண்டும். என சமர் இல் தொடர்ந்து கூறி வருகின்றீர்கள். எனவே வர்க்கநலன் மீது அக்கறை கொண்ட சக்திகளின் முன்பாக உள்ளது அத்தகைய புரட்சி ஒன்றுக்கான சாத்தியம் ஏற்படுகின்ற புறநிலை பற்றிய நம்பிக்கையோடு தொடர்புபட்டவையேயொழிய ஐக்கிய இலங்கையை நிராகரித்து அல்ல என்பதே எனது நம்பிக்கை. இனி நீங்களுட்பட பிரிவினையை வலியுறுத்துகின்ற வர்க்கசக்திகள், தேசியசக்திகள் ஐக்கிய இலங்கை என்கின்ற கருத்தை கண்டவுடன் முன்வைப்பது (1) ஐக்கிய இலங்கைக்கு போராடும் போது முதன்மைப்பிரச்சனையாக உள்ள தமிழ்மக்களது தேசிய விடுதலைப்போரை கைவிடுவதா?

(2) சிங்கள மக்கள் இனவாதத்திலுள்ளார்கள். தென்னிலங்கையில் பலம்பெற்ற புரட்சிகர கட்சி இல்லை.

என்கின்ற வாதங்கள் ஆகும்.

இதில் (1) வது வாதத்தை எடுத்துக்கொண்டால் இவ்வாதம் கடந்தகால போலிக் கம்யூனிஸ்டுக்களின் அணுகுமுறையிலிருந்து வருகின்ற அச்சம், மதிப்பீடு ஆகும். அதாவது வர்க்கம், தேசிய நலன்களை தேசிய அபிலாசைகளை கணக்கிலெடுக்காது. வறட்டுத்தனமானது என்கின்ற கருத்தை அடிப் படையாக கொண்டு வருவது. இதில் நிலமை தெளிவாக்கப்பட வேண்டியதும் புரட்சிகர மார்க்சிய-லெனினிய வர்க்க நிலைப்பாடு மாற்றாக முன்வைக்கப்படவேண்டுமேயொழிய "இது

www.tamilarangam.net

காலவரையும் மிகுந்த துன்பத்துக்குட்பட்ட தமிழ்பேசும் மக்களின் சமூக பொருளாதார அரசியல் விடுதலைக்கு வழிகோலுவதே இச் சூழ்நிலைக்கு சாத்தியமானது" என நீங்கள் முன்வைப்பது மூலம் வர்க்க அடிப்படை நலன்களிலிருந்து எழுகின்ற கோஷமானது, தேசிய அபிலாஷைகளை கருத்தில் கொள்ளாத புத்திஜீவிகளின் நடமுறையுடன் தமது சிந்தனையை இணைத்தவர்களின் கருத்தமைவு என நிறுவ முற்படுகின்றீர்கள். இது தேசிய சக்திகளை அரவணை செய்வதற்காக அல்லது அகநிலை விருப்பிலிருந்து வருகின்ற விமர்சனமாகும். இது விடையத்தில் ஐக்கியம்,தேசியம் என்பதில் எனது கருத்தமைவை தெளிவாக்க முயல்கிறேன். வர்க்க நலன் முதன்மையாகும் புரட்சிகர
சக்திகள் ஐக்கியம்பற்றிப் பேசும்போது இது எவ்வகையிலும் தேசிய அபிலாஷைகளை, தேசிய நலன்களை கவனத்தில் எடுக்காது அல்ல. தேசிய விடுதலைப்போரை எப்படி வர்க்க நலன்களுக்கமைவாக எதிர்காலத்துக்கு சரியான திசைவழியில் இட்டுச் செல்வது என்கின்ற அவாவினது அடிப்படையிலேயே தான். எவ்வளவு தான் வர்க்கம் பேசிக்கொண்டும் தேசியநலன்களினூடும், வர்க்கங்களின் ஐக்கியத்துக்கு எதிரான கருத்துகளுடன் திருப்தியுறுபவர்கள் தேசிய கருத்தமைவின் எல்லைகளுக்குள் சிக்கியிருப்போரே. இவ்வகையில் 83 இலேயே வர்க்க நலனும், ஐக்கியமும் பேசிய (NLFT)இதன் தாய்வடிவம் பாதுகாப்பு பேரவை போன்றன அன்றைய கொதிநிலையை, தமிழ்மக்கள் மீதான பேரினவாத யுத்தத்தை எதிர்கொள்ளாது அடுத்த அடிவைக்க இயலாது என்ற (சரியான முடிவுதான்) தமிழீழப் போரை முன்னெடுத்ததுடன் திருப்தியுற்றதும் தமக்கென வர்க்க நலன்களடிப்படையிலான தளத்தை நிறுவுவதை புறக்கணித்தும் தேசியப்போரிலும் பலமடையாமல் வர்க்க சக்திகளையும் ஒருங்கிணைக்காமல் போனது வரலாறு. பாதுகாப்புப் பேரவை மக்கள் மத்தியில் தமிழீழம், தலைமை மட்டத்தில் ஐக்கிய இலங்கை எனக் கூறியது. நான் கூற விரும்புவது

எதுவெனின் வர்க்கநலன், தேசியநலன் இரண்டையும் எதிரெதிர் காண்கின்ற, காட்டுகின்ற அணுகுமுறையில் இருந்து விடுபட்டு தேசிய நலன்களை பூரணமாக பூர்த்தி செய்கின்ற வர்க்க அணுகுமுறை, வர்க்க சக்திகளது திட்டத்தை நாம் தெளிவாக அடையாளம் காட்டவேண்டும். அப்படியில்லையெனில் கனடா வருகைதந்த போது ஒரு கேள்விக்கு பதிலளித்த ப.நெடுமாறன் இந்திய கம்யூனிஸ்டுக்கள் எல்லாம் தேசிய இன விடுதலையை எதிர்த்து தொழிற்படுவதாகவும், அரச பயங்கரவாதத்திற்கு ஆதரவளிப்பதாகவும் நமது மக்களறிந்த மார்க்சிஸ்ட் கட்சி, போலிக் கம்யூனிஸ்டுக்களுடன் தனது பணியை முடித்தார். அதற்கும் இவ்வாதத்திற்கும் வேறுபாடு அதிகமில்லை அவ்வகையிலேயே தமிழ்தேசிய நலன்களைப் பூர்த்தி செய்கின்ற போர்ப்பரப்பை உருவாக்கும் திட்டத்தை முன்வைப்பது அது வர்க்கநலன்களின் அடிப்படையின் கீழ்படுவது என்கின்ற அணுகுமுறை அதாவது தேசிய நலன்களுக்காக போராடும் போதே அதை சர்வதேசிய நலன்களுக்கிசைவாக கையாள்கின்ற விதமாக திட்டத்தை வரையறுப்பது என்பதே வர்க்க நலன் கொண்டோரினது அணுகுமுறை என்பது எனது அபிப்பிராயம்.

அவ்வகையிலேயே

(1) பாரம்பரியத் தமிழ்மக்களது சுயநிர்ணய உரிமை, பாதுகாப்பு யுத்தம்.

(2) மலையக மக்களது சுயநிர்ணய உரிமைப்போராட்டம்.

(3) முஸ்லிம் மக்களது சுயநிர்ணய உரிமைப்போராட்டம்.

(4) சிங்கள மக்களது, ஏகாதிபத்திய சார்பு தரகு முதலாளிய அரசுக்கெதிரான சுயாதிபத்தியம், வர்க்க சுரண்டலுக்கெதிரானவிடுதலை ஆகியவற்றுக்கான போர்ப்பரப்பு ஆகியவற்றை ஒருங்கிணைப்பதற்கான திட்டம். இவற்றை ஒருங்கிணைத்து ஒரு திட்டத்தை இலங்கை புதிய ஜனநாயகப்புரட்சியை மையமாகக் கொண்ட சக்திகள் முன்வைக்கவேண்டும். கட்சியை எப்படி நிறுவுவதென்பது நடமுறையின் பருண்மையான

www.tamilarangam.net

நிலைமையை ஒட்டிய விடயமாகும். அதாவது ஐக்கியமென்றவுடன் வடக்கு,கிழக்கு பிரதேச வர்க்கசக்திகள் தென்னிலங்கைக்கு ஓடிவந்து சிங்கள மக்கள் மத்தியில் வேலை செய்யவேண்டுமென்பது போல நீங்கள் "தமிழ் புரட்சி சக்திகள் சிங்கள மக்கள் மத்தியில் ஈடுபாட்டோடு வேலை செய்யஇயலுமென" மிகவும் இலகுபடுத்திய பார்வையில் கருத்தை தெரிவிக்கின்றீர்கள். பிரிவினையை முன்னெடுத்துக் கொண்டே சிங்கள மக்கள் மத்தியிலுள்ள புரட்சிகர சக்திகளை அணிதிரட்ட வேண்டும். அவர்களுடன் ஐக்கியத்துக்கு முயலவேண்டுமென எப்படி வர்க்க நலன் நாடும் தமிழீழ புரட்சி இலக்குள்ளவர்களால் கூறமுடிகின்றதோ அதை விட சிறப்பாக பாதுகாப்பு போரை, சுயநிர்ணய உரிமைக்கான போரை, நிலைமை கோரும்பட்சத்தில் பிரிவினையை உள்ளடக்கிய போரை நிகழ்த்துகின்ற பிரிவில் இன்னும் சிறப்பாக மற்றைய பிரிவு மக்களுடன் ஐக்கியப்படவும் புரட்சிகர சக்திகளுடன் இணைந்து அவர்களுக்கு பலமளிக்கவும் முடியும்.

(2) சிங்கள மக்கள் பேரினவாதத்திலுள்ளார்கள். சிங்கள மக்கள் மத்தியில் புரட்சிகர கட்சி இல்லை என்கின்ற வாதம்.

சிங்கள மக்கள் மத்தியில் பேரின வாதம் இல்லையென்றோ, சிங்கள மக்கள் மத்தியில் புரட்சிகர கட்சி வளர்ச்சி பெற்றுள்ளதென்றும் கூற முடியாத நிலைமையே இன்றைய யதார்த்தம். எனினும் அதன் அர்த்தம் சிங்கள மக்கள் திரள் இனவாதத்தில் மூழ்கி அடிமையாகிப்போயுள்ளது என்பது அல்ல தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வுக்கு கொண்டுவர அரசை நிர்பந்திக்க மக்கள் போராடவில்லை என்பதோ இடதுசாரிக்குழுக்களால் அணிதிரட்டப்படவில்லையென்பதும் சரியான புரட்சிகர தலமை அங்கு செயற்படாத நிலமையை வெளிக்காட்டு கின்றதேயொழிய சிங்கள மக்களது இனவாத வீச்சென கொள்ள முடியாது. இனி புரட்சிகர தலைமையின் உருவாக்கமென்பது வடக்கு,கிழக்கில், தென்னிலங்கையிலே இலங்கை தழுவிய அளவில் விருத்தி பெற்ற உச்சநிலை பெற்றுள்ள பாசிசத்துடனும் பெருமளவு தொடர்பான விடயமாகும். இங்கு (வடக்கு,கிழக்கு) முஸ்லீம் மக்கள் அடித்து விரட்டப்பட்டு, கொன்று குவிக்கப்பட்டதும், சிங்கள மக்கள் கொல்லப்பட்டதும் தமிழ்மக்களிடமிருந்து எவ்வகை எதிர்ப்பும் வெளிப்பட முடிந்ததா? என்பதையும் அதைவைத்து மக்களை எடைபோடுவது சரியான அணுகுமுறையா? என்பதையும் சிந்தித்துப் பாருங்கள்.

சிங்கள மக்களிடம் இனவாதமும் பாரம்பரிய தமிழ்மக்களிடம் பிற்போக்கு தேசியவாதமும் முஸ்லீம்களது அணுகுமுறையில் தமிழ்பேரினவாதமும் இருப்பது இன்றைய யதார்த்தம். எதுகூட,எது குறைய என ஒப்பிடுவது அவசியமற்றது. எதுவெனினும் மக்களிடம் இருந்து அகற்றப்படவேண்டும். புலிகளின் பின்னால் அணிதிரண்டு உள்ள தமிழ்மக்கள் பிற்போக்கான இனவாதத்தை ஏற்றுள்ள மக்களே.
மக்களுடைய சிந்தனைகளுக்கு பின்னால் வாளாக சீரழிவதன் மூலம் மாற்றமெதும் செய்துவிட முடியாது. இன்றுள்ள நிலைமைகளை எப்படி மாற்றியமைக்க முயற்சிப்பது என்பதே புரட்சிகர சக்திகளின் பணியாகும். இறக்கும் இராணுவத்தினரை வீரபுருசர்களாக கருதுகின்றனர் என்றும் சிங்கள இளைஞர்கள் பெரும் தொகையில் இராணுவத்தில் சேர்வதாகவும் தாங்கள் வைத்த கருத்துக்கள் பெரிதும் மிகையானவையும் உண்மை நிலையை திரிப்பதும் ஆகும். அண்மையில் "ராவய" சஞ்சிகை எடுத்த ஆய்வுக்கணிப்பு பெருமளவு மக்கள் யுத்தத்தை வெறுப்பதை எடுத்துக்காட்டியது. 1000 இராணுவத்தை திரட்ட கோரிய இராணுவ ஆட்சேர்ப்பு நிலையங்களுக்கு (மாத்தறையில் என ஞாபகம்) 4 பேரே சமுக மளித்திருந்தது உண்மை நிலமை. எந்தக் கருத்துக்குப்பின்னும் மக்கள் அணிதிரள வேண்டுமெனின் மக்களுக்கு தலைமையளிக்க ஸ்தாபன வடிவம் அவசியம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவ்வகையிலேயே ஸ்தாபனம் ஒன்றினது உருவாக்கத்துடனேயே சிங்களமக்களை வென்றெடுப்பதை பார்க்கமுடியுமே தவிர வெறுமனே மதிப்பிடும் பார்வை நிலைமையை சரியாக மதிப்பிடுவது ஆகாது. அவ்வகையிலான கண்ணோட்டத்தில் தமிழ்பேசும் மக்களை, இந்திய மக்கள் திரளை அணுகினால் கூட அவநம்பிக்கையே ஏற்படும்.

அடுத்ததாக "சிங்கள மக்கள் மத்தியில் எந்தவொரு வர்க்க சிந்தனை கொண்டோரோ ஜனநாயக சக்திகளோ இல்லை" என குறிப்பிடும் நீங்களே அதற்கு முன்பாக "சமகாலத்தில் முற்போக்கு சிங்கள அரசியல் பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கியுள்ளது நல்ல சகுனமே", எனக்குறிப்பிடுவதன் மூலம் முரண்படுகின்றீர்கள். நடைமுறையில் அவர்கள் வேலைத்திட்டத்தை தெளிவாக்கவில்லை என்பது எமது சமகாலநிலைமைகளை அவர்கள் எதிர்கொள்கின்றார்கள் என்பதேயொழிய அவர்களும் இனவாதிகள் என்பது தங்களது கருத்தை நிறுவ உதவலாமே ஒழிய புறநிலை உண்மையல்ல. சிங்கள மக்கள் மத்தியில் புரட்சிகர, ஜனநாயக சக்திகள் ஒருவருமேயில்லை என்ற கூற்று முழு அபத்தமானது. அண்மையில் கனடாவில் இலங்கை இல் சமாதான முனைப்புடன் சிங்கள ஜனநாயக சக்திகள் பங்காற்றும் மாநாடு நடைபெற்றது. PLOT இனது போலிப்புரட்சியை நம்பியே ஆயுதப்பயிற்சி பெற்ற சிங்கள இளைஞர்கள் இருந்ததாக செய்திகள் உண்டு. புரட்சித் தத்துவம் புரட்சிகர கட்சி மேலாண்மை பெறாது இலங்கை தழுவி தற்போது உள்ள நிலமை மேலும் தமிழ்மக்களிடையே புரட்சிகர சக்திகள் பலம் பெறலாமெனவும் புலிகள் பாசிசத்தை வீழ்த்தி தலைமையளிக்குமெனவும் உறுதியுடன் செயற்படும் நீங்கள் சிங்கள மக்களை இனவாதத்திலிருந்து மீட்கின்ற சரியான மார்க்சிய லெனினிய புரட்சிகர கட்சி உருவாகாது என முன்வைப்பது பெரிய விந்தையாகும். தமிழ்-சிங்கள மக்களை பிற்போக்கு கருத்தமைவில் இருந்து விடுவிப்பதில் நம்பிக்கை கொள்வது பற்றி வேறுவேறான அளவீடுகள் பயன்படுத்துவதற்கு வர்க்க கண்ணோட்டத்தில் உள்ள நியாயங்கள் எவை என்பதை தெளிவாக முன்வைக்கும்படி கோருகின்றேன்.

இது அப்பட்டமாக "சிங்களவன் மோடன்" என்கின்ற வாதத்தின் நாகரீகமான வர்க்கம் பூசிய வடிவமேயொழிய வேறல்ல என்பதே எனது கருத்தாகும். இவ் அடிப்படையிலேயே இயங்கியலை நிராகரித்து சுயநிர்ணய உரிமை அங்கீகரியுங்கள் என்ற வாசகத்தை ஆராய்ந்துள்ளீர்கள். சுயநிர்ணய உரிமையை அங்கிகரிப்பதற்கான போராட்டமோ, பிரிவினைப் போராட்டமோ எதுவெனினும் விஜயதுங்கா அரசோ ,சிறிமா அரசோ,எதிர்காலத்தில் எக்ஸ் (X) அரசோ விரும்பி அங்கிகரிக்காதென்பது மிக வெளிப்படையாக தெரிந்தவிடயம்.

புரட்சிகர வன்முறைப் போராட்டம் மூலமே அதை வென்றெடுக்க இயலுமென்பதால் யாரும் கருத்து மாறுபட்டு கொள்ளமாட்டார்கள். எனினும் சமரினது பதிலில் நான் சுட்டிக்காட்ட விரும்புவது எதுவெனின் பாரம்பரியத் தமிழ் மக்கள் மத்தியிலான புரட்சிகரவர்க்க சக்திகள் புலிகளின் பாசிச அபாயத்தை முறியடிப்பது மக்களை பிற்போக்கு கருத்தமைவுகளிலிருந்து விடுவித்து அணிதிரட்டி சுயநிர்ணய உரிமைப்போரில் வெல்கின்ற வளர்ச்சி காலகட்டம் வரை சிங்கள மக்கள் UNP இனை அல்லது SLFP இனை அல்லது அதையொத்த நபர்களை தெரிவு செய்கின்றவர்களாகவே இருப்பார்கள் என்ற வாதமாகும். இயங்கியலை ஏற்கின்ற அதற்காக உழைக்க உறுதி பூண்டுள்ள சமர் தமிழ் தேசியம் என்றவுடன் அல்லது சிங்கள மோடர்களின் மீது இயங்கியலை பிரயோகிப்பது எவ்விதம் எனக் காட்டி இயங்கியல் என்கின்றதை இவ்வகையில் கொச்சைப்படுத்த வேண்டாம் என

www.tamilarangam.net

கேட்டுக் கொள்கின்றேன். சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கும் வளர்ச்சி நிலையில் பிரத்தியேக நிலைமைகள், விசேட காரணங்கள் நிலவும் பட்சத்தில் பிரிந்து போவதை மக்கள் தீர்மானிக்கும் உரிமை கொண்டவர்கள்.

ஐக்கியத்துக்கான திட்டங்கள், அதற்கான முயற்சிகள் எதுவுமே செய்வதில் கவனம் செலுத்தாது அகநிலையின் அடிப்படையில் சிங்கள மக்கள் மத்தியிலான புரட்சிகரசக்திகளின் வளர்ச்சியைப்பற்றி ஆருடம் கூறுவது(எதிர்வு) அகநிலைக் கண்ணோட்டமேயாகும். U.N.P போன்ற அரசிடம் சுயநிர்ணய உரிமை சாத்தியமாகாதென்பது உண்மையே. பாரம்பரிய தமிழ்மக்களது போராட்டம் விடிவை வெல்கின்ற வளர்ச்சி நிலையிலும் தென்னிலங்கையில் புரட்சியின் வளர்ச்சி மந்தமாகத்தான் இருக்கும் என்பது நடைமுறையினூடும் அப்பிரதேசங்களின் புரட்சியின் அக புற நிலைமைகளுடனும் சம்பந்தப்படுத்தப்பட்டது. இதை வெகு எளிதாக யாரும் சொல்லவோ, கணிக்கவோ இயலாது. வடக்கு ,கிழக்கில் கூட வர்க்கத் தலைமையிலான தேசிய விடுதலையென்பதற்கான வெற்றிக்கு உடனடி வாய்ப்பிருப்பதாக யாரும் நிறுவமுடியாதெனவே கருதுகின்றேன். எனவே வர்க்க நலன்களினடிப்படையில் தேசிய விடுதலையை பூரணமாக வென்றெடுக்கும் திட்டங்களை வகுக்க வேண்டும். சுயநிர்ணய உரிமைக்கும், சொந்த பாதுகாப்புக்குமான போரிற்கும்(தேசிய அளவில்), வர்க்கத் தளத்தில் முஸ்லிம், மலையக மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான அறைகூவலும் இலங்கையின் புதிய ஜனநாயகப் புரட்சியை மையமாக கொண்ட கட்சியை, வேலைத்திட்டத்தை நிறுவுகின்ற பணியானதுமே வர்க்கநலனை முதன்மைபடுத்துகின்ற சக்திகளின் திசைவழியாக இருக்க முடியும். பிரிவினை தான் என்பது இனங்களுக்கிடையே அவநம்பிக்கை கொண்ட சக்திகளையும், தேசிய நலனை முதன்மையாக்கும் சக்திகளையும் அதாவது வர்க்க கருத்தமைவை பலவீனமாக்கும் சக்திகளை அணி திரட்டவே உதவும். வடக்கு,கிழக்கு தேசியவாதிகளுக்கான எமது சமரசமே பிரிவினை தான் என்பது. மேலும் இன அடிப்படையிலான அவநம்பிக்கை கொள்கின்ற சக்தி ஒன்றினால் மக்களை இனவாதங்களிலிருந்து விடுவிக்கும் திசையில் பயணிக்க முடியாது. விளைவு தேசியப்போருடன் திருப்தியுறுவதாகவே முடியும்.

"தேசிய இனவிடுதலைக்கு உறுதியான, தெளிவான வேலைத்திட்டத்தை கொண்டிருந்தால் வரலாற்றில் இணைந்த போரிற்கு வாய்ப்பாக கூடும்" என குறிப்பிடுகின்றீர்கள். தமிழ் தேசியஇனத்தின் சுயநிர்ணய உரிமைக்கும், தற்போதைய காலகட்டத்தில் பாதுகாப்புக்குமான போராட்டமானது தேசியவிடுதலைக்கு போதுமானதல்ல கருதுவீர்களெனின் அதை தெளிவுபடுத்தியும் உறுதியான தெளிவான வேலைத்திட்டம், சுயநிர்ணய உரிமையினைவிட மேலதிகமான எவற்றை கோர வேண்டுமெனவும் தெளிவுபடுத்தவும்.

சாராம்சமாக
சிங்கள, முஸ்லிம் மக்களில் ஒருவர் கூட தமிழ்மக்கள் மீதான அரச பயங்கரவாதத்தை, அவர்கள் மீதான இனரீதியான (சிங்கள குண்டர், ஜிகாத்) காட்டுமிராண்டித்தன தாக்குதல்களை கண்டிக்கவில்லை என்பது மிகத்தவறான தகவல். ஒரு பலமான எதிர்ப்புக்குரலாக மாறுதவாறு இலங்கையின் பாசிச அபாயமுட்பட்ட புற நிலைமைகள் இருக்கின்றது. தமிழ் மக்களிடம் இருந்து கண்டனக்குரல் வருவதாகவும் அவ்வகையில் இடதுசாரி அரசியலில் தமிழ்மக்கள் வளர்ச்சியடைந்திருப்பதாக கூறுவது மக்கள் திரளையும், உதிரிகளாக உள்ள அரசியல் பிரக்ஞை கொண்ட முன்னைநாட் போராளிகளையும் சமப்படுத்துவதாகும்.

முஸ்லிம் சகோதரர்களில் பலர் ஐக்கியமாக, ஒற்றுமையாக வாழ்வதற்கான விருப்பையும் அதற்கான


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அனுமதியையும் கோரி நிற்கின்றனர். வட,கிழக்கு யுத்தத்தை நிறுத்தக்கோரி மருதானை பள்ளிவாசல் முன்பு முஸ்லிம் முற்போக்கு இளைஞர் அணி ஆர்ப்பாட்டம் செய்ததாக படித்தது ஞாபகம் வருகின்றது. சிங்கள புத்திஜீவிகளிடமிருந்து ஆணித்தரமாக பிரிந்து போவதுடன் கூடிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்த கருத்துக்கள் பத்திரிகைகளில் வெளிவருவதைப் பார்க்க முடிகின்றது. இந்நிலையில் தங்களது கருத்துக்கள் தவறான திசையில் வழிகாட்டுபவை ஆகும். அதற்காக புரட்சிகர கருத்துடையோர் பெருகியிருப்பதாகவும் எல்லாமே பிரகாசமாக இருப்பதாக கூறவில்லை. பாரம்பரியத் தமிழ் மக்களிடையே புரட்சிகர அரசியலை நிலைநிறுத்த உழைக்கும் போது அல்லது அத்திசையில் தற்போது எந்தநிலைமைகளை, இடர்பாடுகளை எதிர் கொள்ளுகின்றேமோ அதையொத்த ஒரு சூழ்நிலையே மறுதரப்புகளிலும் நிலவிவருகின்றது. இவற்றை வெல்வது, புரட்சிகர கட்சியைக் கட்டுவது, கட்சி மக்களை அணிதிரட்டுவதுடன் தொடர்பான விடயமாகும்.

சமர் இதழ் தமிழ் தேசிய இனவிடுதலைக்கு பிரிவினை தான் தீர்வு என முன்வைக்கின்றது, பாரம்பரிய தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பேரினவாதம் போன்றே முஸ்லிம் மக்களும் இன்று எதிர் நோக்கி வருகின்றனர்கள். எனினும் சமர் முஸ்லிம் மக்கள் பிரிவினை மூலம் தமது விடுதலையை வென்றெடுக்க வேண்டும் என முன்வைக்காமல் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதை சமர் தமது கவனத்தில் கொண்டு இம்முரண்பாடுகளுக்கான எமது சுயவடிவினை பரிசீலித்து சரியான கருத்துக்களை வந்தடைய வேண்டுமென்பதே எனது எதிர்பார்ப்பு ஆகும்.

மாறன் (கனடா)

தமிழீழம் என்ற கோஷத்தை அடிப்படையாக வைத்து போராடுபவர்கள் வெறும் குட்டிபூர்சுவா வர்க்க பிரதிநிதிகளா ? ஒரு தேசிய இனப் போராட்டத்தை முன்னெடுத்துப் பிரிந்து போயின் அது சர்வதேசியத்துக்கு எதிரானதா ? தமிழ் மக்களின் போராட்டத்தை வெறும் பாதுகாப்பு யுத்தமாக மட்டுமாகவா நடாத்த வேண்டும் ? ..... என இன்று தமிழீழத்தின் தேசிய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி இன்றைய முரண்பாடுகளை காணத்தவறியதுடன் தமது விவாதங்களையும் தொடர்கின்றனர்.

இன்று தமிழீழம் எனும் கோஷம் வைப்பவர்கள் இலங்கைக்கான வர்க்கப் போராடத்துக்கு எதிரானவர்கள் என கற்பனையில் முடிவெடுக்க முனைந்துள்ளனர். இன்று இலங்கைக்கான கம்யூனிஸ்ட் கட்சி உள்ளதாகவும் அது தமிழ் மக்களை பிரிந்து போவதுடன் கூடிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்துள்ளதாகவும் இச் சர்வதேசியவாதிகள் கற்பனை செய்தபடி எம்மை எதிர்க்கின்றனர். நாம் எதிர்க்க முற்படுவதால் அது வர்க்க போராட்டத்தை சிதைத்து ஒரு குட்டிபூர்சுவாப் போராட்டமாக மாற்றவும் கற்பனை பண்ணியுள்ளனர். இன்று மண்ணிலுள்ள யதார்த்த நிலையிலிருந்து ஒரு முடிவுக்கு வரமுடியாது போயுள்ளனர். மண்ணில் இன்றைய நிலைமைகள் நிலையானதல்ல. அவை மாறுபடக்கூடியவை. ஒரு திட்டம் என்பது எதிர்காலத்தில் மாறுபடும் நிலைமையை வைத்து தயாரிப்பதில்லை. ஏனெனில் அது எப்படி மாறும் எனக் கூற முடியாது. இன்று எது உள்ளதோ அவைகளை முன்வைத்தே ஒரு திட்டம் உருவாகின்றது.

ஒரு கட்சி, முன்னணி மற்றும் வெகுஜன ஸ்தாபனங்கள் எனத் தொடரும் அமைப்பு வடிவங்கள் எப்போதும் ஒரே மாதிரி இருப்பதில்லை. கட்சியமைப்பில் எப்போதும் எல்லாம் முழுமையாக


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்வைக்க வேண்டும். அங்கு தெரிந்த ஒரு பிரச்சனையை நிலைமையுடன் மறைக்கவோ, நிறுத்தவோ கூடாது. மற்றைய அமைப்பு வடிவங்கள் அன்றைய பிரதான முரண்பாட்டுடன் இசையும் வண்ணம் அது கூட்டிக் குறைப்புகளைக் கையாளுகிறது. இந்த வகையில் "சமர்" இரண்டுக்கும் இடையிலான வேறுபாட்டை தெளிவாக சுட்டிக்காட்ட விரும்புகிறது. இவ்விதழில் (சமரில்) பிரசுரிப்பது ஒரு முன்னணித் திட்டமே. இத்திட்டம் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கானது. இத் திட்டம் தமிழ் தேசிய விடுதலையை அதாவது முற்போக்கு தேசியத்தை முன்னெடுக்கும் வகையில் உருவானது. இது இலங்கைப் புரட்சிக்கான ஒரு முன்னணியல்ல. இலங்கைப் புரட்சிகான பல கூறுகளைக் கொண்டிருந்தபோதும் அதைப் பொதுக்கூறாக மாற்றுவது சிங்கள புரட்சியாளர்களின் பிரதான கடமையாக உள்ளது. இன்று தமிழீழக் கம்யூனிஸ்ட் கட்சியின் உருவாக்கம் மட்டுமே முற்போக்கு தேசியத்தை உயர்த்த முடியும் . தமிழீழக் கம்யூனிஸ்ட் கட்சியின் உருவாக்கத்தை தொடர்ந்து பெருந்தேசிய இனத்தில் உருவாகும் கம்யூனிஸ்ட் கட்சி தேசிய இன முரண்பாட்டை கையாளும் நடைமுறை, கோட்பாட்டின் அடிப்படையில் மட்டும் தமிழீழக் கம்யூனிஸ்ட் கட்சி அவர்களுடன் ஒன்றிணையும். இவைகளை நாம் இனி கட்டுரை மீதான விமர்சனத்தில் பார்ப்போம்.

" பிரிவினைப் போராட்டமாகத் தான் முன்னெடுக்க வேண்டும் என்பதல்ல. தனது சொந்தத் தேசிய இனத்திலின்று பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் போதே, பிற தேசிய இனங்களுடனான ஐக்கியத்திற்கான முழக்கத்தை முன்வைத்துப் பாட்டாளிவர்க்க ஒற்றுமைக்குப் பாடுபட வேண்டிய வர்க்கக் கடமையை பாட்டாளி வர்க்கம் மறக்க இயலாது" என்ற மாறனின் வாதத்தில் எமது நிலையை மறந்தபடி கூறுகின்றார்.

மக்கள் மத்தியில் ஐக்கியத்திற்கான முழக்கத்தை எதன் அடிப்படையில் கோருவது. இன்று சிங்கள இனவெறி அரசின் கொடூர முகங்களை மக்கள் காண்கின்றனர். சிங்களப் புரட்சிகர சக்திகள் சிங்கள மக்கள் மத்தியில் வேலை செய்வதை நாமே காண முடியாதுள்ள போது எப்படி நாம் மக்களை அதைக் காணும்படி கோருவது. தமிழீழக் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் ஐக்கியத்திற்கான கோரிக்கையை முன்வைப்பது ஒரு நிபந்தனை. இவ்வாறு வைக்காத கட்சி ஒரு பாட்டாளி வர்க்கக் கட்சி அல்ல. மக்கள் இன்று முகம் கொடுக்கும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஒரு முற்போக்குத் தேசியத்தை உயர்த்திப் பிடிக்க புதிய ஜனநாயக அரசை உருவாக்க உருவாகும் முன்னணி என்பது குட்டி பூர்சுவா வர்க்கப் பிரதி நிதிகளையும், அதன் சிந்தனையுடன் உள்ளடக்கியதே. இம்முன்னணியில் தமிழ் குட்டிபூர்சுவா, தமிழ் முதலாளித்துவ பிரிவினர் தமது தேசிய நோக்கில் நிலப்பிரபுத்துவம், தரகு முதலாளித்துவம், ஏகாதிபத்திய எதிர்ப்பில் ஐக்கியப்படுவர். இங்கு கட்சி அதற்கு தலைமை தாங்கும். இப்பிரிவினர் ஒருக்காலும் ஐக்கிய இலங்கை என்ற கோட்பாட்டை தமது திட்டத்தில் ஏற்றுக் கொள்ள மறுப்பர். எப்படி இன விடுதலைப் போராட்டம் ஆரம்பத்தில் குட்டிபூர்சுவாக்களின் தேவையாக உருவானதோ அதை ஒரு புதிய ஜனநாயகப் புரட்சிக்குள் உள்ளடக்க முனையும் பாட்டாளி வர்க்கம் அவர்களின் தேசியக் கோரிக்கையை வெறும் பூர்சுவாக் கோரிக்கை என சொல்லி நிராகரித்து விட முடியாது. இனவெறி அரசின் படுகொலைகள் தொடரும் இந்நிலையை மறந்து அவர்களை ஐக்கியப்பட்ட புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அறை கூவி விட முடியாது. இன்று பாசிசப் புலிகளை பலப்படுத்த முனையும் குட்டி பூர்சுவா இளைஞர்களின் இணைவு கற்பனையானதல்ல. அவர்களின் இணைவுக்கான காரணத்தை மறந்த சர்வதேசியவாதிகள் ஒருக்காலும் அவர்களையோ, முற்போக்குத் தேசியத்தையோ வென்று விடமுடியாது. அவர்களை வென்றெடுக்க சிங்களப் புரட்சியாளர்கள் இன்று உதயமாகி மக்களை தமக்குப் பின்னால் அணிதிரட்டி

www.tamilarangam.net

விடவில்லை. தமிழீழப் போராட்டத்தின் தீவிர வளர்ச்சிக்கான 15-20 ஆண்டுகளில் சிங்களப் புரட்சிகர சக்திகள் எந்த முதலடியைக் கூட வைக்கவில்லை. இது இன்னும் பலவருடங்கள் தொடரலாம். ஆனால் தமிழீழப் போராட்டம் தனது அடிகளை முன்வைத்தபடி உள்ளது. சிங்கள புரட்சிகரப் பிரிவினர் சிங்கள மக்களை தமக்குப் பின் அணிதிரட்டி ஒரு அமைப்பாக மாறும் வரை தமிழீழப் போராட்டம் நின்றுவிடாது. நடக்கும் போராட்டம் ஒரு தமிழீழப் போராடமாகப் பரிணமிப்பின் அதை பூர்சுவா வர்க்கத்திடமோ, தரகுமுதலாளித்துவத்திடமோ சர்வதேசியவாதிகள் ஒப்படைக்க வேண்டுமா ? தமிழீழம் உருவாகின் அதை தமிழீழக் கம்யூனிஸ்ட் கட்சியே கைப்பற்ற வேண்டும். அதனூடாக மீண்டும் இனவேோர் சர்வதேசியவாதிகளாக தமிழீழ மக்கள் இருக்க முடியும்.

பாதுகாப்பு யுத்தத்தை தமிழ் பாட்டாளி வர்க்கம் கையில் எடுப்பது சரியானது என்ற வாதம் சுயநிர்ணய உரிமையை மறுப்பதாகும். தமிழ் பாட்டாளிகள் பாதுகாப்பு யுத்தம் என்ற எல்லையை தாண்டக்கூடாது. அதாவது சிங்களப் பாட்டாளி வர்க்கம் எழும் வரை யுத்தத்தை பாதுகாப்பு யுத்தமாக மட்டுப்படுத்தக் கோருவதே.

பாதுகாப்பு யுத்தம் ஏன் சுயநிர்ணய உரிமைக்கான யுத்தமாக அமைய முடியாது. ஒரு யுத்தம் என வரையறுப்பின் அவ் யுத்தம் ஒரு நோக்கைக் கொண்டது. தமிழ் மக்களின் தேசியத்துக்கான யுத்தம் வெறும் பாதுகாப்புக்கான எல்லை யுத்தமல்ல. அவ்யுத்தம் பிரிந்து போகக்கூடிய சுயநிர்ணய உரிமைக்கான யுத்தமே. இவ்யுத்தம் சிங்களப் பாட்டாளி வர்க்கம் முன்னணிக்கு வராத வரையில் பிரிவினையாக மாறிவிடும். இன்று புலிகள் உள்ள இடத்தில் தமிழ் பாட்டாளி வர்க்கம் இருப்பின் அங்கு பிரிந்து போகும் வகையில் யுத்தத்தை நடத்துவது தவிர்க்க முடியாதது.

முதல் வரியில் தமிழ் பாட்டாளி வர்க்கம் முன்னெடுக்க வேண்டும் என்றவர் அது பிரிவினையாக இருக்கக் கூடாது என்றவர் அடுத்தவரியில் அதைப் பாதுகாப்பு யுத்தமாக இருக்கக் கோருகின்றார். பாதுகாப்பு யுத்தம் என்ற வாதம் பிரிவினையை உள்ளடக்கிய சுயநிர்ணயத்தைக் கோருவதே. இப்பிரிவினை சிங்களப் பாட்டாளி வர்க்கத்தின் எழுச்சியுடன் சம்பந்தப்பட்டது. சிங்களப் பாட்டாளி வர்க்க எழுச்சி இன்றி இருப்பின் பிரிவினை தவிர்க்க முடியாது. இது சர்வதேசியத்துக்கு எதிரானது அல்ல. இவ்விடத்தில் குட்டிபூர்சுவா வர்க்கம் இருப்பின் கூட இதை எதிர்க்க முடியாது. ஏன் எனில் அப்போராட்டம் ஏகாதிபத்தியத்தை பலவீனப் படுத்துவது.

ஒடுக்கப்படும் இன மக்களை விடுவிக்க ஒடுக்கப்படும் இனக்கட்சி முயலும் போது ஒடுக்கப்பட்ட இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க மறுப்பின் அம்மக்களை விடுவிக்க ஒடுக்கப்பட்ட இனம் பிரிந்து போவதும் தவிர்க்க முடியாது. இதனூடாகவே ஒடுக்குமின மக்களின் விடுதலையைப் பெறமுடியும்.

"தமிழ் பாட்டாளி வர்க்கத்தைப் பொறுத்தவரையில் தனது சொந்தத் தேசிய இன சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை கையிலெடுக்கும் போதே பிற தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்காகக் கோஷங்களை முன்வைப்பதும் தேசிய இனங்களிடையே ஐக்கியத்திற்கான முழக்கத்தை முன்வைக்கவும் வேண்டும். தனது தேசிய இன போராட்டத்தை நிகழ்த்தும் போதே அனைத்து தேசிய இனங்களினது சுயநிர்ணய உரிமைகளை உத்தரவாதம் செய்யும் இலங்கையின் புதிய ஜனநாயகப் புரட்சியை நடாத்திடத் தனது பங்கைச் செலுத்த வேண்டும்." என வாதிட்டுள்ளார். பிற தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்காக கோஷங்களை முன்வைப்பது என்பதில் கோஷங்கள்

என்பது எந்த தமிழ் தேசிய இனம் தனது சுயநிர்ணய உரிமையைக் கோரும் அதேநேரம் மற்றைய தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும். அதேநேரம் பெரும்பான்மை ஒடுக்கும் இனத்திடம் தமிழ் மக்கள் உள்ளிட்ட அனைத்து சிறுபான்மைத் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க குரல் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு தேசிய இனமும் தன் சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்க ஒடுக்கும் இனத்திற்கு எதிராக தனியாகவோ, ஐக்கியப்பட்டோ கோரமுடியும்.

உதாரணமாக முஸ்லீம் மககளின் சுயநிர்ணய உரிமையைத் தமிழ் தேசிய இனம் அங்கீகரித்தலும், அதே நேரம் சிங்கள இனவெறி அரசிடம் தனியாகவோ, சேர்ந்தோ, கோரமுடியும். இதைவிடுத்து முஸ்லீம் மக்களிடம் சென்று தமிழ் கம்யூனிஸ்டுக்கள் நாம் உங்களுக்கு சுயநிர்ணய உரிமையை வென்று தருவோம் எனக் கூறி இன்றைய நிலையில் வேலை செய்ய முடியாது. ஏனெனில் முதலில் தமிழ் கம்யூனிஸ்டுக்களை முஸ்லீம்கள் நம்ப வேண்டும். இதுவே தமிழ் சிங்கள நிலைமை கூட.

இன்றைய நிலையில் இலங்கையில் ஒவ்வொரு தேசிய இனமும் தனியான கம்யூனிஸ்ட் கட்சியைக் கொண்டே ஆரம்பிக்க முடியும். இதுவே எதிர்காலத்தில் ஒவ்வொரு கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சியுடன் மட்டுமே இணைய முடியும். இதை விடுத்து ஒரு கட்சியுள்ளது என்று கற்பனை பண்ணின் அது வெறும் கனவு மட்டுமே. இக் கட்சிக்கு இடையிலான ஐக்கியம் என்பது ஒரு பரஸ்பரம் புரிதலுடன் கூடியதே. இவ் ஒவ்வொரு கட்சியும் தனது திட்டத்தில் ஐக்கியப்பட்ட கட்சிக்கான கோரிக்கையை நிபந்தனையாகக் கொள்ள வேண்டும். ஐக்கியம் என்பதும் மக்களைக் கொண்ட ஒரு சக்தியாக இருக்கவேண்டும். இன்று அப்படி ஒரு நிலையே கிடையாது.

மிந்தனா விடுதலைப் போராட்டம் முஸ்லீம் தேசிய இனத்தின் தனிநாட்டுக்கான கோரிக்கையாக எழுந்தது. இன்று பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் சரியான கோரிக்கையுடன் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தவுடன் தனிநாட்டுக் கோரிக்கையை சுயநிர்ணய அடிப்படையில் ஏற்றுக் கொண்டு பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஐக்கியப்பட்டுள்ளனர். இது ஈழப்போராட்டத்துக்கும் பொருந்தும். இது இன்றல்ல எதிர்காலமே அதைத் தீர்மானிக்கலாம்.

பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சி மாதிரி இலங்கையில் ஒரு கம்யூனிஸ்ட் கட்சி உருவாகும் போது மட்டுமே இலங்கைப் புரட்சியை பொதுவான கோஷத்தின் கீழ் அணிதிரட்டமுடியும். இலங்கைக்கான பொதுவான கம்யூனிஸ்ட் கட்சி மேற்குறிப்பிட்ட அடிப்படையில் தனித்தனியான கம்யூனிஸ்ட் கட்சியின் இணைவாகவே இருக்க முடியும். அதுவே சாத்தியம்.

தமிழ் புரட்சியாளர்கள் இன்று அனைத்துப் பிரிவு மக்களின் முற்போக்குப் பிரிவை விட முன்னேறிய நிலையில் இன்றுள்ளனர். தமிழ் புரட்சியாளர்களே முதலில் ஒரு சரியான திட்டத்தின் அடிப்படையில் ஒரு கட்சியை உருவாக்கும் பலம் உடனடியாகப் பெற்றுள்ளனர். தமிழ் பிரிவை மட்டும் கொண்ட தமிழ் பிரிவினர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியாகி விட மாட்டார்கள். இது தமிழ் மக்களை மட்டும் சார்ந்ததாக இருக்கும். எல்லா இன கம்யூனிஸ்ட்டுக்களும் இணையும் போதே இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உருவாகும்.

இன்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உருவாக முடியுமா? சரியான சிங்கள கம்யூனிஸ்டை சமர் இன்றும் இனம் காணவில்லை. அப்படி யாரையாவது சுட்டிக்காட்ட முடியுமா? அப்படி இல்லாத போது எப்படித் தமிழ் பிரிவினர் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்க முடியும். அப்படி முடியாத

www.tamilarangam.net

இன்றைய நிலையில் தமிழ் கம்யூனிஸ்டுக்கள் இணையக் கூடாதா? அதன் பெயர் என்ன? மற்றும் நடந்துவரும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் முற்போக்கு புதிய ஜனநாயகப் போராட்டமாக மாற்ற ஒரு கம்யூனிஸ்ட் கட்சி நிச்சயம் இருக்க வேண்டும். இல்லாத போது அது முற்போக்கை முன்னெடுக்க முடியாது. முற்போக்குப் போராட்டமாக முன்னெடுக்க தமிழீழக் கம்யூனிஸ்ட் கட்சி உருவாவது தவிர்க்க முடியாதது.

சிங்கள கம்யூனிஸ்டுகள் உருவாகும் வரை இலங்கை கம்யூனிஸ்டு கட்சி என்ற பேச்சுக்கே இடமில்லை. உருவாகும் சிங்கள கட்சியின் வளர்ச்சியின் பின்பே இலங்கைக்கான கம்யூனிஸ்டுக் கட்சியும் இலங்கைக்கான புதிய ஜனநாயகப் புரட்சியும் முன்னெடுக்க முடியும்.

" ஒரு பகுதியான எமது சொந்த இனத்திற்காக மட்டும் போராட்டம் நிகழ்த்துவது மார்க்சியச் சொல் அலங்காரத்துடன் பிறந்திருக்கும் முதலாளிய தேசிய வாதமாகவே அமையும் " என்ற இவ் விவாதம் சுத்த அபத்தமானது. இது வெறும் சொற்ஜாடரே. எப்படி இலங்கைக்கான கம்யூனிஸ்டுக் கட்சியை உருவாக்க முடியும் என நாம் மேலே பார்த்தோம்.

தமிழ் மக்கள் பாதுகாப்புப் போரை நடத்துவதை ஏற்ற அதைத் தமிழ் பாட்டாளிகள் தலைமை ஏற்க வேண்டும் என கோரும் மாறன் அடுத்த வரியில் அக் கோரிக்கையை முதலாளித்துவ தேசியவாதம் என்கிறர். மற்றைய தேசிய இனத்திலும் ஒரு பாட்டாளி வர்க்கம் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் போது மட்டும் ஐக்கியத்தை நிராகரித்தால் அது முதலாளித்துவ தேசிய வாதமாக இருக்கும். இன்று அப்படி ஒரு கட்சியேயில்லை. தமிழ் பிரிவு முன்னேறிய ஒரு பாத்திரத்தை இன்று வகிக்கின்றனர். அவர்கள் விரும்பியோ விரும்பாமலோ இன்று முற்போக்கு தேசியத்தை முன்னெடுக்க நிர்ப்பந்தித்து ஒரு கட்சியை கட்ட வேண்டியுள்ளனர்.

அக் கட்சி தமிழீழக் கம்யூனிஸ்ட் கட்சியாகவே இன்று இருக்க முடியும். அதுவே இன்று சாத்தியமானது. முன்னணியின் ஊடாக எடுக்க முனையும் இத் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் தனக்கான வரையறை களை மட்டும் கொண்டிருக்கும். ஆனால் கட்சி அப்படியல்ல. அது சர்வ தேசியமானதாகவே இருக்க வேண்டும். உதாரணமாக இன்று இலங்கைக்கான கம்யூனிஸ்டுக் கட்சி இருப்பின் தனக்காக என இல்லாமல் உலகப் பாட்டாளியாக இருப்பதனூடாகவே சர்வதேசியவாதியாக இருப்பர். இதுவே தமிழ் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு இலங்கைக்குள் பொருந்தும்.

பிரிந்து போக ஒரு இனம் ஏன் ஒரு பாட்டாளி வர்க்கத் தலைமையில் போராட்டம் நடத்த முடியாது. எனவே பிரிவினை எப்போதும் முதலாளித்துவ தேசியவாதமாக மட்டும் இருப்பதில்லை. அப்படித்தான் உள்ளது எனச் சொல்பவர்கள் பாதுகாப்பு யுத்தம் , சுயநிர்ணய உரிமைக்குப் போராடுதல் என்பதெல்லாம் பிரிந்து போகாத சுயநிர்ணய உரிமையைத் தான்.

" சர்வதேசியவாதத்தை கணக்கில் எடுக்காமல் தேசிய வாதம் பேசுவதை நியாயமெனக் காட்ட முனைந்தாலும் அது பாட்டாளி வர்க்க அணுகு முறையல்ல " எனின் சர்வதேசியவாதியாகவுள்ள எவரும் தேசியத்தை எடுக்க முடியாதா ? தேசியத்தை முன்னெடுப்பது ஒரு சர்வதேசியவாதியின் கடமை. அது பிரிந்து போவது, போகாதது மேல் குறிப்பிட்டது போல் இலங்கைக்கான கம்யூனிஸ்டுக் கட்சியின் உருவாக்கத்துடன் மட்டுமே சாத்தியம். தேசியத்தை சர்வதேசியவாதி கவனத்தில் எடுக்கத் தவறின் அது பாட்டாளி வர்க்க அணுகுமுறையல்ல. மக்கள் மத்தியில் எழும் அனைத்து முரண்பாட்டையும் முன்னெடுக்க வேண்டும். அதற்கூடாக போராட வேண்டும். தேசிய இன முரண்பாடு பிரிந்து போகும் வகையில் ஒடுக்கும் இனம் விழிப்படையாத நிலையில் சர்வதேசிய வதி பிரிந்து போகும்

www.tamilarangam.net

இனத்தின் விடுதலையை தமிழீழமக்கள் ஜனநாயகக் குடியரசாக அமைக்க வேண்டும். இது சர்வதேசவாதிகளின் கடமை.

சுயநிர்ணய உரிமை என்பது பிரிந்து போகும் பிரிந்து போகாத விடயங்களை உள்ளடக்கியதே. பிரிந்து போகாத சுயநிர்ணய உரிமை என்பது ஒடுக்கும் இனப் பாட்டாளிகளின் வளர்ச்சியும் ,பலமுமே தீர்மானிக்கும். அவர்களின் பலவீனமான நிலையில் ஒடுக்கப்படும் இனம் பிரிந்து போவது தவிர்க்கமுடியாதது. இன்றைய நிலையில் ஒடுக்கப்பட்ட இனம் பிரிந்து போவது தவிர்க்கமுடியாது. இன்றைய நிலையில் ஒடுக்கப்பட்ட இனம் பிரிந்து போவதையே முன்னெடுக்க முடியும். எதிர்காலத்தில் ஒடுக்கும் இன பாட்டாளிகளின் வளர்ச்சியைப் பொறுத்தே ஒடுக்கப்பட்ட இனம் சேர்ந்து வாழ்வதா ? இல்லையா என்பதை குறைந்த பட்சம் சிந்திக்க முடியும். அதுவரை அது கற்பனையானது.

“ சுயநிர்ணய உரிமை என்பதனையும் பிரிவினை என்பதையும் பிரித்துப் பார்க்க வேண்டும். பிரிந்து போவதற்கான உரிமையைப் பாட்டாளி வர்க்கம் கோரவும் வேண்டும், அங்கீகரிக்கவும் வேண்டும். ஆனால் ஐக்கியத்துக்கான முழக்கத்தை முன்வைப்பதற்குப் பதில் தனியரசு தமிழீழம் என வரையறுத்துக் கொள்வது தமிழ் தேசியவாதமே. இது முதலாளித்துவ தேசிய வாதமே. இது ஆதரிக்கப்பட வேண்டியது தான் எனினும் முதலாளித்துவ தேசியவாதக் கோஷமே ஒழிய பாட்டாளி வர்க்க கோஷமேயல்ல ” என்ற மாறனின் வாதத்தை நாம் ஆராய்வோம். சுயநிர்ணய உரிமை என்பதனையும் பிரிவினையையும் பிரித்துப் பார்க்க வேண்டும் என்ற வாதம் தவறானது. சுயநிர்ணயஉரிமை என்கின்ற போது பிரிவினையையும் உள்ளடக்கியதே. நாம் இங்கு விவாதிப்பது புலிகளின் பிரிவினையை அல்ல. மார்க்சிய அடிப்படையில் நின்றே விவாதிக்கின்றோம். சுயநிர்ணய உரிமை என்பது பிரிவினையும் உள்ளடக்கியதே.

“ பிரிந்து போவதற்கான உரிமையை பாட்டாளி வர்க்கம் கோரவும் வேண்டும் அங்கீகரிக்கவும் வேண்டும். ஆனால் ஐக்கியத்துக்கான முழக்கத்தை முன் வைப்பதற்குப் பதில் தனியரசு, தமிழீழம் என வரையறுத்துக் கொள்வது தமிழ் தேசிய வாதமே ” என்ற கூற்று ஒன்றுக்கொன்று முரணானது. பிரிந்து போவதற்கான உரிமையை பாட்டாளி கோரவேண்டும், என்கின்ற போது அது தமிழீழம், தனியரசாக மாறுகின்றது. இது மாறும் வகையிலிருப்பது எப்போது எனின் பெருந்தேசிய இனப் பாட்டாளிகளின் எழுச்சி மட்டுமே தீர்மானிக்கும். இன்று இலங்கையில் பெரும் தேசிய இனமுள்ள நிலையில் தமிழ் பாட்டாளிகள் பிரிவினைக்காக போராடுவது தவிர்க்க முடியாது. இதை நீங்களே ஏற்றுள்ளீர்கள் அதைப் பார்ப்போம். “ 83 இலேயே வர்க்க நலனும் ஐக்கியமும் பேசிய (NLFT இதன் தாய்வடிவம்) பாதுகாப்புப் பேரவை போன்றன அன்றைய கொதிநிலையை தமிழ் மக்கள் மீதான பேரினவாத யுத்தத்தை எதிர்கொள்ளாது. அடுத்த அடி வைக்க இயலாது என்று (சரியான முடிவு தான்) தமிழீழப் போரை முன்னெடுத்ததுடன் ---- என்ற உங்கள் வாதத்தின் தமிழீழப் போரை முன்னெடுத்து என்பது தனியரசுக்கானது இந்நிலைமை இன்று எந்தவிதத்திலும் மாறிவிடவில்லை தமிழீழம் என்று தனியரசாக மாறும் ஒரு கோரிக்கை சுயநிர்ணய உரிமைக்கு உட்பட்டதே. ஏன் தமிழீழம் என போராட வேண்டி ஏற்பட்டுகின்றது. எனின் பெரும் தேசிய இனத்தின் புரட்சிகர எழுச்சி தடைப்பட்டு உள்ளமையால் மட்டுமே. தமிழீழம், தனியரசு என்பது எப்பொழுதும் வெறும் தேசிய வாதக் கோசமாக இருப்பதில்லை. இது முதலாளித்துவ தேசிய வாதமாக எப்போதும் இருப்பது இல்லை. மற்றைய இனங்களின் பாட்டாளி வர்க்க எழுச்சியும், ஒவ்வொரு தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் ஒரு கட்டத்தில் அவர்களுடன் இணைய மறுப்பின் மட்டும் அது முதலாளித்துவ தேசிய வாதக் கோசமாக இருக்கும். இன்று அப்படி ஒரு நிலையே இல்லை இன்றுள்ள

www.tamilarangam.net

நிலையில் உருவாகும் திட்டம் தமிழீழக் கோரிக்கையைக் கொண்டதே. ஏன் எனில் மற்றைய தேசிய இனங்கள் எந்த முன் முயற்சியும் அற்றநிலையில் உள்ளனர். ஆனால் தமிழீழப்போராட்டம் நடைபெறுகின்றது. அதை முற்போக்குத் தேசியமாக முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு தமிழ் பாட்டாளிகள் கையில் உள்ளது. தமிழ் பாட்டாளிகள் தமது கையில் எடுத்து தமிழீழப் போராட்டத்தை முன்னெடுப்பதுடன், மற்றைய ஒவ்வொரு தேசியஇனத்தின் நியாயமான போராட்டத்தை ஆதரிப்பதுடன் அவர்களின் ஐக்கியத்திற்கான கோரிக்கையை எப்போதும் தமது ஆக்கிக்கொள்ள வேண்டும்.

தமிழ் பாட்டாளிகள் ஐக்கியத்தை கோரும் போது வெட்டவெளியில் கோர முடியாது. அதற்கான தளம் தேவை. சிறுபான்மை தேசிய இனம் ஐக்கியத்தைக் கோரவும் , ஆதரவைக் கோரவும் எப்போதும் தயாராக இருக்கவேண்டும். இது இன்று முன்னணித் திட்டத்தில் சிறப்பாக வரையறுக்கப்பட்டும் உள்ளது.

" இலங்கையின் இனவாத தரகுமுதலாளித்துவ பாசிச அரசைத் தூக்கி எறிய இலங்கையின் அனைத்து தேசிய இன தொழிலாள விவசாயிகளே, தேசப்பற்றுள்ளவர்களே ஒன்று திரளுங்கள் " என்ற உங்கள் கோஷம் இலங்கைக்கான ஒரு கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமே கோர முடியும். இன்று நடைபெறும் தேசிய விடுதலைப் போராட்டத்தை வெறும் பாதுகாப்பு யுத்தமாக சித்தரித்த கோஷமே. இதே கோரிக்கையையே NLFT உருவாக முன்னிருந்த அமைப்பு முன்வைத்தது. பின் தம்மை மாற்றியவர்கள் தமிழீழம் என்ற அடிப்படையில் கோஷம் வைத்தனர். உங்கள் கோஷம் இப்படித்தான் அமைய முடியும். இலங்கையின் இனவாத, தரகு முதலாளித்துவ, பாசிச அரசைத் தூக்கி எறிய தமிழீழ தொழிலாள, விவசாயிகளே, தேசப்பற்றுள்ளவர்களே ஒன்று சேருங்கள் எனவே கோர முடியும். இது போல் அனைத்து தேசிய இன மக்களும் தனித்தனியே கோரமுடியும். இவர்களின் ஒன்றிணைவே இலங்கையின் ஐக்கியப்பட்ட புரட்சியை நடத்தும். இவர்களின் ஒன்றிணைவுக்கு இக் கோஷத்தை முன்வைக்கும் பிரிவினர் இருக்க வேண்டும். இன்று தமிழ் மக்கள் இக் கோஷத்தில் முன்னேறிய நிலையில் உள்ளனர். இது மற்றைய தேசிய இன விழிப்பு இன்றி முந்திக்கொள்ளும் போது தனியரசாக மாறிவிடும்.

" தேசிய விடுதலைப் போராட்டமா ? ஐக்கியப்பட்ட புரட்சியா ? என்ற கேள்வியை எழுப்புவதன் மூலம் ஐக்கியப்பட்ட புரட்சி என்பது தேசிய விடுதலையை உள்ளடக்கியது அல்ல. தேசிய விடுதலைப் போராட்டத்தை கவனத்திற் கொள்ளாது மறுதலிக்கின்றது என்கின்றதான அவதூறை, மாயையை உருவகிப்பதன் மூலம் அதைக் களங்கப்படுத்த முயற்சிக்கின்றார்கள். தேசிய நலன்களையும் சர்வதேசிய நலன்களையும் எதிரெதிராக நிறுத்துவதன் மூலம் வர்க்கப்பார்வையை பலவீனப்படுத்துகின்ற அதைக் கொச்சைப்படுத்துகின்ற பணியைச் செய்கின்றார்கள்." ஐக்கியப் பட்டபுரட்சி, தேசிய விடுதலைப் போராட்டம் என்பன சிலவேளை ஒன்றாக இருக்கும், வேறுவேறாகவும் உள்ளது. ஐக்கியப்பட்ட புரட்சி என்பது அனைத்துப் பிரிவு மக்களாலும் முன்னெடுக்கப்படுவதே. இப்புரட்சி 1983 களிலும் சில இடது சாரிகள் கூறிக்கொண்டு இருக்கின்றார். ஆனால் அவர்களை மீறி தேசிய விடுதலைக்கான அலை மேல் ஓங்கியது. அன்று இதை கவனத்தில் எடுத்த NLFT மட்டும் அவ்விடது சாரிகளில் இருந்து வெளியேறி தமிழீழப்போராட்டத்தை தமதாக்க முனைந்தனர். இது என்றும் தவறானதல்ல. இதை மாறனும் ஏற்றுக்கொள்கிறார்.

ஐக்கியப்பட்ட புரட்சி நிச்சயமாக தேசிய சுய நிர்ணய உரிமையையும் உள்ளடக்கியதே. இங்கு இவை பிரச்சனையல்ல. பிரச்சனையாக உள்ளது இனங்களுக்கிடையிலான தப்பெண்ணங்கள்

www.tamilarangam.net

நீக்கப்பட்டு ஒருகட்சியின் முன்னோக்கிய அடியே. இன்று ஒரு கட்சி உருவாக முடியுமா? இவை தொடர்பாக மேல் விவாதித்துள்ளோம். இன்று அப்படி ஒரு கட்சி உருவாக முடியுமா. ஒவ்வொரு தேசிய இனமும் தனக்கான கட்சியைக் கட்டுவதும் அதன் வளர்ச்சியில் மட்டும் ஒரு ஐக்கியப்பட்ட கட்சி உருவாக முடியும்.

இன்று நடைபெறும் யுத்தம் ஒரு தேசிய விடுதலைக்கான ஒரு யுத்தம். இவ் யுத்தத்தை நாம் எம்கைகளில் மாற்றவேண்டின் முதலில் இவ் தேசிய இனத்தின் பிரச்சனைகளை நமதாக்க வேண்டும். இங்கு பாட்டாளிகள் மக்களின் இன அழிப்பில் இருந்து காப்பாற்ற பிரிந்து போக வேண்டும். இன அழிப்பு நிறுத்தப்படின் எங்கே யுத்தம் நடைபெற முடியும். இன்று ஒரு வடிவாக நடைமுறையாக உள்ளது. இதை நிராகரிக்க முடியாது. இதை நிராகரிப்பின் எம்மால் ஒரு அடி தனினும் எடுக்க முடியாது. ஐக்கியப்பட்ட கட்சி இல்லாத, உடனடியாக உருவாக முடியாத இன்றைய நிலையில் இவ்யுத்தத்தை நாம் எம் கைகளில் மாற்ற நாம் ஒரு கம்யூனிஸ்ட் கட்சியை கொண்டு இருக்க வேண்டும். அக்கட்சி விரும்பியோ, விரும்பாமலோ இன்று உடனடியாக தமிழ் பாட்டாளிகளையே கொண்டிருக்கும். இது தமிழீழக் கம்யூனிஸ்ட் கட்சியாகவே இருக்கும்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக நடைபெறும் இன்றைய யுத்தம் ஒரு தனிநாடாக மாறும் வகையில் இன்று தவிர்க்கமுடியாமல் நகர்ந்த வண்ணம் உள்ளது. இவ் யுத்தத்தை பாட்டாளி வர்க்கம் கைப்பற்றி சுயநிர்ணய உரிமையை பிரிவினைக் ஊடாக உறுதி செய்வது தவிர்க்க முடியாத வகையில் இன்று உள்ளது. ஏன் எனில் சிங்களப் பாட்டாளிகள் எந்த விழிப்புணர்ச்சியை வெளிக்காட்டவோ, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கிகரிக்கவோ இல்லை. இது உருவாகும் போது மட்டுமே நாம் ஐக்கியப் புரட்சியை யோசிக்க முடியும்.

இரண்டு விதமாக இன்று சுயநிர்ணய உரிமையைக் கோருவது தொடர்பாக எமக்கிடையில் விவாதம் நடக்கின்றது. ஒன்று இலங்கை என்ற ஒரு புரட்சி யூடாக இரண்டாவது தனித்தனி தேசிய இனங்களாக போராடி தமது சுயநிர்ணய உரிமையை உறுதி செய்வது இது கூட ஐக்கியப்பட்ட புரட்சியை நோக்கி நகரும் அதற்கு எல்லா இனத்திலும் சரியான கட்சி இருக்க வேண்டும் இன்று ஒரு ஐக்கிய புரட்சியை நடாத்த ஒரு கட்சி இல்லை இது எதிர் காலத்தில் உருவாகாது என்றும் இல்லை. எதிர்காலத்தை எதிர்வு கூறுவதற்கு பதில் இன்று உடனடியாக இவ் யுத்தத்தை எம்கைகளில் எடுக்க ஒரு முன்னணியும், கட்சியும், ஒரு படையும் உடன் அவசியம். இது தமிழீழப்போராட்டத்தின் ஊடாகவே முடியுமே ஒழிய ஐக்கியப் பட்ட புரட்சிக் கூடாகவல்ல.

இதைப்போல் தேசிய நலன் சர்வ தேசிய நலனுக்கு எதிரானது என்ற வாதம் இலங்கைப் புரட்சிக்குப் பொருந்தும். இலங்கைப் புரட்சி என்ற தேசிய வாதம் சர்வதேசப் புரட்சிக்கு எதிரானது என உங்கள் பார்வையில் வாதிட முடியும். இது தவறானது ஒவ்வொரு தேசியப் புரட்சியும் தனியாக நடாக்கும் போது அது சர்வ தேசியப் புரட்சிக்கு உதவும். புரட்சி யார் தலைமையில் நடைபெறுகின்றது என்ற சர்வ தேசியப் புரட்சிக்கு எதிரானதா இல்லையா என்பதை தீர்மானிக்கும்.

"நாம் எமது தேசிய இனநலன்கள் பற்றி மட்டுமே சிந்திக்கின்றதான முதலாளிய தேசிய வாத போக்கில் இருந்து விடுபட்டு" என்ற வாதம் சுத்த அபாத்தமானது இன்று இலங்கைப் புரட்சியை கதைப்பின் அதுவும் முதலாளிய தேசிய வாதப்போக்கே என வாதிட முடியும். ஏன் எனில் உலகப் புரட்சிபற்றி கதைக்காமல் உள்ளதால் . எனவே புரட்சி என்பது எல்லைகளைக் கடந்தது. புரட்சிக்கான முரண்பாடு மட்டும்சில பிரச்சனைகளை விடுவிக்கும். அது உலகப் புரட்சியின் ஒரு பகுதி கூட. தமிழீழப் புரட்சி

www.tamilarangam.net

இலங்கைப் புரட்சியின் ஒரு பகுதி மட்டும் இன்றி உலகப் புரட்சியின் பகுதி கூட. தமிழீழப் புரட்சி ஏகாதிபத்தியத்தை தரகு முதலாளித்துவத்தை நிலப்பிரபுத்துவத்தை பலவீனப் படுத்தும். தமிழீழப் போராட்டம்
முதலாளித்துவ புரட்சியாக மட்டும் இருப்பதில்லை. பாட்டாளிகள் தலைமைதாங்கும் போது அது உலகப் புரட்சியின் ஒரு பகுதியாகவும் இலங்கைப் புரட்சியின் ஒரு பகுதியாகவும், ஒரு பாட்டாளி வர்க்கப்புரட்சியாகவும் இருக்கும்.

"பாரம்பரிய வடக்கு, கிழக்கு தமிழ்த் தேசிய இன பாட்டாளிவர்க்க சக்திகள் தமது தேசிய இன சுயநிர்ணய உரிமைப்போரை அம்மக்களினது பாதுகாப்பு, நிலம், மொழி, பண்பாடு ஆகியவற்றை பாதுகாப்பதற்கான போரை முன்னெடுக்கும்---" என்ற மாறனின் வாதத்தில் பாதுகாப்பு, நிலம், மொழி, பண்பாடு என்ற தேவைக்காக மட்டுமா யுத்தம். நிச்சயமாக இல்லை. தனது அரசியல் சுயாட்சியையும் உள்ளடக்கியதே யுத்தம். இன்று நடைபெறும் யுத்தத்தை பாதுகாப்பு, நிலம், மொழி, பண்பாடுடன் நிறுத்தக்கோரி ஐக்கிய இலங்கைப் புரட்சியை நடாத்தக் கோருகின்றனர் இதன் ஊடாக சுயநிர்ணய உரிமையில் பிரிந்து போகும் உரிமையை மறுக்கின்றனர். மேல் குறித்த நான்கு விடயமும் தமிழ் மக்களின் அரசியல் சுயாட்சியை நோக்கி நகர்வதை தெளிவு படுத்துகின்றது. இதற்கு ஒரு கட்சி தேவை. அக்கட்சியில் இன்றைய நிலையில் தமிழீழக் கம்யூனிஸ்ட் கட்சியாகவே இருக்கும்

"இப்போராட்ட சக்திகள் தமது குறிப்பான பிரச்சனைகளுக்கான போராட்டத்தை நிகழ்த்தும் போதே, இவற்றை இணைத்து சமுதாய வளர்ச்சியை உத்தரவாதம் செய்கின்றதான அதாவது இலங்கையில் புதிய ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்றுகின்றதான ஒருமைப்பாடற்ற தாபனத்தை, கட்சியை நிறுவ வேண்டும்." என்ற வாதம் மாறனின் கற்பனையே.

இன்று தமிழ்மக்களின் போராட்டம் வெறும் அமைதியான வழியில் நிகழ்வதாக கற்பனை செய்தபடி மாறன் உள்ளார். இன்று தமிழ்மக்களின் போராட்டம் ஒவ்வொரு நாளும் பலரை இழக்கும் வகையில் தொடர்கிறது. ஆனால் மறுபுறத்தில் அப்படியல்ல. இங்கு JVP , இலங்கையரசுக்கும் இடையிலான யுத்தம் இருவரும் இனவாதிகளாக இருந்தபடி தொடர்வதே. தமிழ் மக்களின் இன்றைய போராட்டத்தை தமிழ் பாட்டாளிகள் கைப்பற்ற வேண்டும். அதற்கு தமிழ் பாட்டாளிகளை உள்ளடக்கிய ஒரு தமிழீழ கம்யூனிஸ்ட் கட்சி தேவை கோரி நிற்கின்றது. இது மற்றைய இன பாட்டாளிகள் விழிப்படையும் வரை ஒத்திப்போட்டுவிட முடியாத அவசியமான காலகட்டத்தில் நாம் உள்ளோம். எமது நிலையை மறந்து, எமது மக்களை மறந்து கற்பனையில் ஐக்கியமான கட்சியைக் கட்டி புரட்சியை நடத்த முடியாது.

" தேசிய விடுதலைப் போரா ? , ஐக்கியப்பட்ட புரட்சியா ?
என்கின்ற விதமாக இரண்டையும் எதிரெதிராக நிறுத்துவது தவறானது ஆகும் " என்ற விவாதத்தில் தேசியவிடுதலைப் போருக்கூடாகவும் ஐக்கியப்பட்ட புரட்சியை நிகழ்த்த முடியும். அதே போல் ஐக்கிய இலங்கைப் புரட்சிக்கூடாக தேசிய இன விடுதலையைப் பெறமுடியும். இதில் இன்று இலங்கையில் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கூடாகவே ஐக்கியப்பட்ட புரட்சியை அடைய முடியும். ஆகவே தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க அத்தேசிய இனம் தனக்கான கம்யூனிஸ்ட் கட்சியை கட்டுவது தவிர்க்கமுடியாது.

" கடந்த சகாப்தத்தில் வர்க்க அரசியலைக் கொண்டிருந்த அமைப்புக்கள் வளர்சியுற முடியாமல் இருந்ததற்கு தனியே அவற்றினது தவறுகள் மட்டுமே காரணம் அல்ல. மக்களிடையே நிலவிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதலாளித்துவ சிந்தனைப் போக்கை பிற்போக்கு அமைப்புக்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். போராட்டப் பாதையினூடு தமிழ் மக்களிடையே சரியான அரசியலை, வர்க்கப் போராட்டத் தலைமையை நிலைநிறுத்த இயலுமென முன்வைக்கின்ற நீங்கள் சிங்கள மக்களிடையே சரியானதொரு புரட்சிகரத் தலைமை தமிழீழம் பிரியும் மட்டும் உருவாகவே மாட்டாது எனக் கூறுவது எவ்வாய்வுகளின் அடிப்படையில்? " எனப் பனிமலரைக் கேட்டுள்ளார் மாறன். இதுபோன்று எம்மையும் கேட்டுள்ளார். மக்களிடையே உருவான முதலாளித்துவ சிந்தனை தான் பிற்போக்கு அரசியலை முன்நோக்கி தள்ளியது என்பது சரிதான். ஆனால் வர்க்க அரசியல் முன்னுக்கு வரமுடியாமலுக்கு இக்கருத்தோட்டத்தின் இருப்பே எனச் சொல்வது ஒருபக்கம் மட்டுமே உண்மை. வர்க்க அரசியலைக் கொண்ட அமைப்புக்கள் வளர்ச்சியுறாமைக்கும் நூறு வீதக் காரணம் அவர்களின் அரசியலே. இதில் எந்தவிதத்திலும் வேறு ஒரு காரணத்தைப் புகுத்துவது தவறு. அடுத்து " போராட்டப்பாதையில் தமிழ்மக்களிடையே சரியான அரசியலை, வர்க்க போராட்டத்தலைமை நிலைநிறுத்த இயலுமென முன்வைக்கும் " என்ற வாதத்தில் ஏன் முடிகிறது.

நாம் சம காலத்திலுள்ள பிரதான முரண்பாடான தேசிய முரண்பாட்டில் தெளிவான ஒரு பார்வையைக் கொண்டுள்ளோம். நாம் தமிழ்மக்கள் ஆக இருப்பதுடன் ஒரு கட்சியைக் கட்டக்கூடிய ஒரு நிலையில் உள்ளவர்கள்.

இன்று நடைபெறும் தேசியவிடுதலைப் போராட்டத்தின் தலைமையை மாற்றி விட பெரும் பாலான விடயங்களில் ஒருமித்த கருத்தை வந்தடைந்து கொண்டிருக்கின்றோம். தமிழ் தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் தலைமையை மாற்ற ஒரு படையுடன் கூடிய கட்சி, முன்னணி என்பன உடனடித் தேவையாக உள்ளது. இதை வந்தடையும் நிலையில் தமிழ் பாட்டாளிகள் மட்டும் தெளிவான ஒரு நிலையை நோக்கி நகருகின்றனர்.

இன்று சிங்கள மக்கள் மத்தியில் அப்படியான ஒரு நிலையில்லை. எதிர் காலத்தில் உருவாகாது என யாரும் கூறமுடியாது. எம் போராட்டம் மிகத் தீவிரம் அடைந்த 10 வருட வரலாற்றில் சிங்களப் புரட்சிகரப்பிரிவு எதுவும் உருவாகவில்லை. குறிப்பாக JVP இல் பிரிந்த நவ JVP கூட புரட்சிப் பிரிவினர் அல்ல. எதிர்காலத்தில் ஒரு புரட்சிகர சிங்கள எழுச்சி ஏற்படும் போது நாம் ஐக்கியப்பட்ட புரட்சியை நடாத்த எந்த வகையிலும் பின்வாங்க முடியாது. இன்று நாம் போராட வேண்டும். அதுவும் தேசிய இன முரண்பாடு இயல்பான வளர்ச்சி இன அடக்கு முறை பிரிவினைக்கு இட்டுச் செல்கின்றது. இது இன்று கற்பனையானது அல்ல. இப்போராட்டத்தை நடத்துவது தமிழ் பாட்டாளிகளின் கடமை. தமிழ் பாட்டாளிகள் தமது கையில் போராட்டத்தை எடுக்க தமிழீழக் கம்யூனிஸ்ட் கட்சி தேவை கோரி நிற்கின்றது. இப்போராட்டத்தை நாம் எடுக்க உருவாகும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி எனக் கூறமுடியுமா. தமிழீழம் பிரியமுன் ஒரு சிங்களக் கம்யூனிஸ்ட் கட்சி உருவாகி மக்கள் பலத்துடன் இருப்பின் நிச்சயமாக இணைய வேண்டும். இது தமிழீழக் கம்யூனிஸ்ட் கட்சியின் திட்டத்தில் ஒரு பிரதான விடயமாகவும் இருக்க வேண்டும். நாம் இப்போது விவாதிப்பது நிகழ்கால வேலைத் திட்டம் தொடர்பாகவே. நீங்கள் விவாதிப்பது எதிர்கால கற்பனை வேலைத்திட்டம் தொடர்பாகவே இன்று உருவாகும் திட்டம் நிலையானது அல்ல. அது மாறும் தன்மை கொண்டது. சூழ் நிலைமைகள், மாற்றங்கள் உடன் திட்டம் மாறிச்செல்லும்.

"சிங்கள மக்கள் பிற்போக்கு இனவாத அரசுகளின் பிரச்சாரங்களில் இருந்து, அவற்றின் கருத்தாதிக்கத்தில் இருந்து விடுபடுவது சாத்தியமாகாது என நீங்கள் முடிவெடுக்கும் போதே

www.tamilarangam.net

பாட்டாளி வர்க்கக் கூறுகள் பலவீனமாக உள்ள தமிழ் மக்களிடையே இருந்து வர்க்கத் தலைமை கொண்ட புரட்சியை நடாத்திட இயலும் என எவ்விதம் உறுதிபடக் கூறுகின்றீர்கள்? சிங்கள மக்களை விட விசேடமான சிறப்பியல்புகள் எதையும் தமிழ் மக்கள் கொண்டிருப்பதாக கருதுகின்றீர்களா?" என்ற மாறனின் வாதத்தை எடுப்போம். நிச்சயமாக வேறுபாடுண்டு. தமிழ் மக்கள் இன்று சிங்கள இனவெறி அரசுக்கெதிராக போராடுகின்றனர். அதற்கூடாக விழிப்பை பெற்று உள்ளனர். கடந்த 10-15 வருட யுத்தத்தில் தமிழ் மக்கள் சமூகத்தை ஆராய்கின்றனர். வாழ்தலுக்கான போராக தீவிரநிலையை அடைந்துள்ளது. 1983,85 களில் NLFT இந்திய எதிர்ப்புக் கோசம் முன்வைக்கப்பட்ட போது பரிகசிக்கப்பட்டனர். ஆனால் இன்று அப்படியல்ல. மக்களின் சிந்தனை ரீதியான வளர்ச்சி, விழிப்பு சிங்கள மக்களை விட விரிவுபட்டுள்ளது. இங்கு சிங்கள மக்களும் இந்திய எதிர்ப்புணர்வைக் கொண்டபோது அது இனவாதஅடிப்படையில் ஆனது. சிங்கள மக்கள் இந்திய ஆக்கிரமிப்பை மலையக மக்கள் ஊடாக இன்று இனம்காண்பது இனவாத அடிப்படையின் அடிப்படை விடையமாக உள்ளது. மலையக மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு இலங்கை மக்களை விட மோசமான நிலையில் வைத்திருப்பது இனவாதத்தின் மொத்த வெளிப்பாடே.

இங்கு தமிழ் மக்களின் விழிப்புணர்வு இன்று புலி போன்ற ஏகாதிபத்திய தரகுகள் பின் உள்ளது. இது மக்கள் விரும்பியது அல்ல. தேசிய இன அழிப்பின் அடிப்படையில் விரும்பாத ஒரு நிலையில் புலியின் பின் விழிப்புணர்வு உள்ளது. இவை மக்களைப் பொறுத்தவரையில் மட்டுமே. இதற்கு அப்பால் புரட்சியாளர்களின் வளர்ச்சி தமிழ் மக்கள் மத்தியில் தெளிவானவையாக இன்று உள்ளது. அதாவது தமிழ் மக்கள் மத்தியில் இன்று புரட்சிக்குத் தலைமை தாங்கும் தகுதி கொண்டோர் முன்னணிச் சக்தியாக உள்ளனர். அவர்கள் உதிரியாகவும், சிறுகுழுக்களாகவும் உள்ளனர். அநேக விடையங்களில் ஒருமைப்பாட்டை பெற்றுள்ளனர்.

இது சிங்கள மக்கள் மத்தியில் கிடையாது. சிங்கள மக்கள் மத்தியில் JVP வளர்ச்சியும் அதன் அழிவின் பின்னும் கூட புதிய சக்திகள் தம்மை இனங்காட்ட முடியாதுள்ளனர். இது உருவாகாது என்றில்லை. ஆனால் இன்று இல்லை என்பதே பிரச்சனை. எதிர்காலத்தில் உருவாகுவார்கள் எனக்கொண்டு கற்பனைத்திட்டம் தயாரிப்பின் அது புரட்சிகு உதவாது.

மற்றும் தமிழ்மக்கள் மத்தியில் புரட்சிக்கான பாட்டாளிகளின் பலவீனத்தை சுட்டிக்காட்ட முற்பட்டவர் அதனால் இலங்கைப் புரட்சியைக் கோருகின்றனர். இலங்கையைப் பொறுத்தவரையில் பாட்டாளிகளின் பலவீனமான தன்மை இந்தியாவுடன் ஒப்பிடமுடியுமா ? இந்தியாவுடன் ஒப்பிடின் இந்திய இலங்கை உட்பட்ட புரட்சியை கோர முடியும் தானே. பாட்டாளிகளின் பலவீனமான தன்மை ஒரு புரட்சியை தீர்மானித்து விடுவதில்லை. முரண்பாட்டின் கூர்மையும் அதை முன்னெடுத்துச் செல்ல ஒரு கட்சியும் இருப்பின் அங்கு புரட்சி சாத்தியம்.

" சிங்கள மக்களிடையே இருந்து பல புத்திஜீவிகளும், ஜனநாயக சக்திகளும் தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து குரலெழுப்பி வருகின்றார்கள். வாராந்தம் 65,000 பிரதிகள் வரையில் விற்பனையைக் கொண்டுள்ள "யுக்திய " இதழ் ஆசிரியர் சுனந்த தேசப்பிரிய தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து அளித்த பேட்டியை வசதிக்கேற்ப மறைத்து விட்டீர்கள் ........பிரதேசங்களின் அடிப்படையில் அன்றி தமிழ் சிங்கள மக்கள் இணைந்த சோஷலிசத்திற்கான போராட்டத்தில் ஈடுபட வேண்டுமெனக் கோருகின்றார். இது வரட்டுத்தனமானதுதான். எனினும் நீங்கள் சுட்டுவதைப் போல் இனவாதத் தன்மை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டதுதான் என அறுதியிட முடியாது. " என்ற உங்கள் வாதத்தில் நீங்கள் வசதியாக மறந்த ஒரு விடயத்தை சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். சுயநிர்ணய உரிமைக்கு குரல் கொடுத்த வாசுதேவ நாணயக்கார போன்றோரை ஏன் மறந்து விடுகின்றீர்கள்.

சிங்கள புத்திஜீவிகள் , முற்போக்கு பிரிவினர் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து குரல் கொடுப்பதை ஒரு புரட்சியின் தலைமையுடன் ஒப்பிட முனைவது எவ்வளவு கேவலமானது. மார்க்சிசத்தை உச்சரிக்கும் பலரைப் பார்த்தும் அவர்களை எல்லாம் நாம் ஏற்கின்றோமா ? இல்லை. அது போல் தான் பல சிங்கள புத்திஜீவிகளும் முற்போக்கு பிரிவினரும். ஐரோப்பாவில் வெளிவரும் சஞ்சிகைகள் அநேகமாக முற்போக்கு என வரையறுக்க முடியும். ஆனால் அவர்கள் புரட்சியாளர்கள் அல்ல. புரட்சியாளர்கள் என நாம் கருதுவது கம்யூனிஸ்டுக்களையே. நாம் மீண்டும் கேட்பது ஒரு சிங்கள சரியான பத்திரிகையைக் கூடக் காட்ட முடியுமா ? அப்போது அவர்களுடன் விவாதிக்க நாம் எப்போதும் தயாராகவுள்ளோம்.

சுனந்த தேசப்பிரியவின் சுயநிர்ணய உரிமைக்கான குரல் இனவாதம் கலந்ததுவே. அது அரசுக்கெதிராகக் குரல் கொடுப்பது போல் இருந்தாலும் அவர்கள் மீண்டும் அதே அரசையும் இன வாதத்தையும் நிறுவுவதற்கு அப்பால் செல்ல முடியாது. இது வாசுதேவாவின் சுயநிர்ணய அங்கீகாரத்தைப் போல் பெரிய வேறுபாடு கிடையாது.

நாம் விவாதிக்க முற்படுவது சிங்கள கம்யூனிஸ்டுகள் தொடர்பாக மட்டுமே. ஐக்கியத்துக்கான கட்சியை பற்றி சிந்திக்க அது மட்டுமே ஒரு வழி. நாம் இன்று கம்யூனிஸ்ட் கட்சியை கட்டும் நிலையில் உள்ளவர்கள்.

தமிழ் சிங்கள மக்கள் இணைந்த சோஷலிசத்துக்கான போராட்டத்தை கோருவதை வரட்டுவாதம் எனச் சொல்லும் நீங்கள் அதுவே உங்கள் கோரிக்கையாக உள்ளது. ஏன் எனின் ஐக்கியப்பட்ட புரட்சியைக் கோருகின்றீர்கள். நீங்கள் கூறும் புதிய ஜனநாயகத்துடனான சோஷலிசம் தமிழ் சிங்கள ஐக்கியத்துடன் கோரும் போது அது எப்படி வரட்டுவாதம் அற்றதாகிவிடும்.

"தமிழ் மக்களது போராட்ட நிலைமைகள் பற்றி விளக்கமளித்து வென்றெடுக்க வேண்டுமே யொழிய ஒரு முரணான கருத்தைக் காட்டி மறுதலிப்பது உங்களது அகநிலை விருப்பை நிருபிப்பதற்காகவே. " என்ற உங்கள் வாதம் உங்கள் அகநிலைக் கருத்தாகும். தமிழ் மக்களது நிலைமையை விளங்கப் படுத்தி வென்றெடுக்க வேண்டும் என்பது சரியானதே. யார் செய்வது தமிழ் பாட்டாளிகளா? இல்லை இது சிங்களப் பாட்டாளிகளின் முதலும், பிரதான கடமையாகும். இன்று இப்படி ஒரு நிலையே இல்லாத போது எம்மை குற்றம் சாட்டி அகநிலை என வாதிட முற்படுவது கற்பனையானது. தமிழ் மக்களது போராட்டம் சிங்கள மக்களுக்கு முரணானது என கூறவருவது இனவாதமே. தமிழ் மக்களின் பிரச்சனையை சிங்கள மக்கள் எதிர்ப்பார்கள் எனக் கூறுவது சந்தர்ப்ப வாதம். பிரிந்து போக தமிழ் மக்கள் விரும்பின் அதை சிங்கள மக்கள் ஏற்கவேண்டும். இதை சிங்கள மக்களேசொல்ல வேண்டும். இதச் சிங்கள மக்கள் மத்தியில் சொன்னால் முரணானது எனப் பார்ப்பின் சந்தர்ப்ப வாதத்துடன் கூடிய இனவாதமே.

"அறு பதாயிரம் இளைஞர்கள் ஆற்றிலும், வீதியிலும் டயர்களைச் சுமந்தபோது தமிழ் மக்களிடம் இருந்து ஏதாவது எதிர்ப்புக்குரல் கேட்டதுண்டா? இன்று எல்லைப் புறங்களில் சிங்கள மக்கள் மட்டுமின்றி முஸ்லீம் மக்களும் நூற்றுக் கணக்கில் கொல்லப்படும் போது தமிழ் சமுகம் மௌனம் சாதிக்கின்றதே. இன்று

www.tamilarangam.net

தென்னிலங்கையில் ஏகாதிபத்திய சார்பு அரசால், ஏகாதிபத்தியங்களின் வேட்டையால் சுதந்திர வர்த்தக வலையங்களிலும், விவசாயத்திலும் ஒட்டச் சுரண்டப்படும் அம்மக்களினது பிரச்சனைகள் பற்றி தமிழ் புரட்சியாளர்கள் யாரும் குரலெழுப்பியதுண்டா?" இது தமிழ் புரட்சியாளர்கள் பற்றி திரிபேயாகும். நீங்கள் மேலே குறிப்பிட்ட விடையங்களும், அதற்கு மேலம் சிங்கள முற்போக்குகளை விட தமிழ் புரட்சியாளர்கள் தமது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர். தமிழ் புரட்சியான்ர்கள் தான் இவைகளை ஒரு அரசியல் கோட்பாட்டின் அடிப்படையில் கண்டிப்பது என்பது சிறப்பானது. அனுராதபுரம் சிங்களப் படுகொலைகளை புலிகள் தொடங்கியது முதல் அன்று இருந்த இயக்கங்களும், குறிப்பாக NLFT கோட்பாட்டுடன் அம்பலப்படுத்தியது.

NLFT யின் இவ் அம்பலப்படுத்தல் குறிப்பாக புலிகளை பலமாக தாக்கியது. பின் அவர்கள் அது தொடர்பாக NLFTயை கேட்கும் முக்கிய கேள்வியில் ஒன்றாகவும் மாறியது.

"தென்னிலங்கையில், வடக்கில் நீக்க மற நிறைந்திருக்கும் பாசிசக் காட்டாட்சி களையெடுப்புக்களுக்கு மத்தியில் சுதந்திரமான, ஜனநாயக குரல்கள் வெளிவராது முடக்கப் பட்டுள்ளது." இவ்வாதம் தனது ஐக்கிய இலங்கைப் புரட்சிக்கான கருத்தை நிலை நிறுத்த கையாண்ட வாதமே. இந்த வாதம் வேடிக்கையானது. வடக்குக், கிழக்குக்கும் மற்றைய பகுதிக்கும் இடையிலான பாசிச வடிவம் பண்பால் பெரிதும் வேறுபட்டது. வடக்குக் கிழக்கில் புலியிசம் தவிர வேறு கதைக்கே இடமில்லை. ஆனால் மற்றைய பகுதிகள் அப்படியல்ல. மற்றைய பகுதிகளில் சிங்களப் புரட்சியாளர்கள் வேலை செய்ய வடக்குக் கிழக்கை விட பல வசதிகளை கொண்டுள்ளனர். கருத்து வெளிவருவது என்பது சட்டபூர்வ, சட்டவிரோத வழிகழில் வரமுடியும். இது வடக்குக் கிழக்குத் தவிர்ந்த பகுதிகளில் இன்று சாத்தியமான நிலையுள்ளது. இதை மறுப்பவர்கள் ஒருக்காலும் ஐக்கிய இலங்கையல்ல ஒரு அடியைக் கூட முன்னெடுக்க முடியாது. வடக்குக் கிழக்கில் சட்டவிரோதமாக மட்டுமே வெளிவர முடியும். வடக்குக் கிழக்குடன் மற்றைய பகுதிகளை ஒப்பிடுவது மடைத்தனம். கொழும்பில் சரிநிகர், அருவி, ..... என வரமுடிகிறது. ஆனால் ஒரு சிங்கள புரட்சிகர சரியான கருத்து வரமுடியவில்லை ஏன் எனில் சிங்களப் புரட்சியாளர்கள் இன்னும் உருவாகவில்லை. இதை முதல் புரிந்து கொள்ளுங்கள்.

"சாராம்சத்தில் புரட்சிகர சக்திகள் இலங்கை தழுவிய அளவில் பலவீனமாகவே உள்ளனர். தென்னிலங்கையில் உருவாகாது வடக்குக் கிழக்கில் மட்டும் புரட்சிகர கட்சி அரசமைக்கும் என பனிமலர் சொல்வதற்கு ஆதாரமேதுமில்லை." புரட்சியாளர்கள் இலங்கை தழுவிய அளவில் பலவீனமாக உள்ளனர் என்பது இன்றைய நிலையை கவனத்தில் எடுக்காததன் விளைவே. நாடு தழுவிய ரீதியில் புரட்சியாளர்கள் பலவீனமாக இல்லை. தமிழ் பாட்டாளிகள் விழிப்புப் பெற்ற முன்னணியில் உள்ளனர். அவர்கள் ஒரு திட்டத்தில் இணையும் நிலையில் உள்ளனர். இது சிங்கள, முஸ்லீம், மலையக மக்களினது நிலையில் இருந்து வேறுபட்ட வளர்ச்சி நிலையை அடைந்துள்ளனர். இப்பிரிவினர் மத்தியில் முற்போக்குப் பிரிவினர் மட்டும் உள்ளனர். புரட்சியாளர்கள் அதாவது கம்யூனிஸ்ட்டுக்கள் உருவாகவில்லை. ஆனால் தமிழ் பகுதியில் முற்போக்குகளின் எண்ணிக்கை பலமடங்காகவும் அதில் கம்யூனிஸ்ட்டுக்களும் வளர்ச்சி பெற்றுள்ளனர். இதை மறுப்பவர் இன்றைய நிலையை மதிப்பிடுவதில் தவறு இழைப்பவர்.

வடக்கு கிழக்கில் புரட்சிகரக் கட்சி ஆட்சி அமைக்கும் ஆதாரம் இல்லை என்ற வாதம் இலங்கையிலும் புரட்சிகரக் கட்சி ஆட்சி அமைக்கும் ஆதாரம் இல்லையே. பிரதேசத்துக்கு பிரதேச சமுதாய விழிப்பை மறுப்பது இயங்கியல்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அல்ல. எங்கு முரன்பாடு தீவிர மடைகின்றதோ அங்கு போராட்டம் நிகழ்கிறது.

"தமிழ் மக்களது தேசிய விடுதலைப் போராட்டத்தை கையிலெடுப்பதன் மூலம் இலங்கையி ஜனநாயகப் புரட்சி இலங்கை நோக்கி செயற்பட முடியும்." என்ற வாதம் சரியானது. தமிழ் மக்களது தேசிய விடுதலைப் போராட்டத்தை தமிழீழ கம்யூனிஸ்ட் கட்சி முன்னெடுக்கும் போது சிங்களப் பாட்டாளிகளின் விழிப்பும், எழுச்சியும் எற்படும் போது இலங்கை ஜனநாயகப் புரட்சிக்காக போராட வேண்டும். சிங்களப் புரட்சியாளர்களின் விழிப்பு, எழுச்சியும் பின் தங்கி அல்லது எற்படாது இருக்கும் பட்சத்தில் தமிழ் பாட்டாளிகள் தமிழீழ மக்கள் ஜனணயகக் குடியரசை நிறுவ வேண்டும். தமிழீழ மக்கள் ஜனநாயகக் குடியரசு அமைக்க இன்று நாம் எமது யுத்ததந்திரம், மற்றும் அது தொடர்பான அனைத்து விடையமும் ஒரு தனியான கட்டுரையாக மிகவிரைவில் சமரில் முன்வைப்போம்.

"தமிழீழம் தான் என்பது பாரம்பரிய தமிழ் மக்களது கோரிக்கை மட்டுமே. அது நியாயமானது எனிலும் பாட்டாளி வர்க்க கோஷமில்லை" என்ற உங்கள் வாதம் குறைப்பார்வையே. தமிழீழம் என்பது பாரம்பரிய தமிழ் மக்கள் கோரிக்கை அல்ல. 1970 களில் இனவெறி அரசின் தீவிர அடக்குமுறையுடன் உருவான கோரிக்கையே. இக்கோரிக்கை பாரம் பரியமாக உருவாகவில்லை. இக்கோரிக்கை நியாயமானது என ஏற்கும் நீங்கள் அதை ஏற்க வேண்டும். ஏனெனில் தமிழ் மக்களின் கோரிக்கையில் உள்ள நியாயத்தை புரிந்து கொள்ளும் சிங்கள மக்கள் அரசை அமைக்க போராடாதவரை தமிழீழம் அமைக்கப் போராடும் தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கையை ஏற்க வேண்டும். அப்படி தமிழீழம் அமைக்கும் போது தமிழீழப் பாட்டாளிகள் அதை பெறத் தவறக்கூடாது.

"நீங்கள் உட்பட பிரிவினையை வலியுறுத்துகின்ற வர்க்க சக்திகள் , தேசிய சக்திகள் ஐக்கிய இலங்கை என்ற கருத்தைக் கண்டவுடன் முன்வைப்பது" என்ற வாதம் சுத்த அபத்தமானது. ஐக்கிய இலங்கையைக் கண்டவுடன் எதிர்க்கின்றவர்கள் என்ற வாதம் ஆதாரமற்றது. ஐக்கிய இலங்கைப் புரட்சியை விரும்பும் நாம் அது உருவாக முடியாத இன்றைய நிலையை ஒட்டி நாம் வேலை முற்படுகின்றோம். இன்றைய நிலையையும் , உள்ள முரண்பாட்டையும் காணத் தவறும் நீங்கள் கற்பனையில் ஐக்கிய இலங்கைக்கான புரட்சிக்கு அறை கூவுகின்றீர்கள். ஒரு கட்சி உள்ளதா, உருவாகும் (உடனடியாக) என கற்பனை பண்ணி வரும் வாதமே. இது இன்று உள்ள நிலையை ஆராயாமையே.

பிரிவினை என்பது இரண்டு வகையானது. பிரிவினை என புலி போன்ற பிரிவினர் கோருவது ஒருவகை. இரண்டாவது வகை ஐக்கியப்பட்ட புரட்சியை விரும்பியும் அது சாத்தியம் இல்லாத இன்றைய நிலையில் பிரிந்து போக நேரும் எனப் பிரிந்து போகும் போது தமிழ்ப் பாட்டாளிகள் கைப்பற்ற வேண்டும் என்பதே இரண்டாவது நிலை.

இன்று மூன்றும் உலக நாடுகளின் யுத்த தந்திரம் இதை ஊக்குவிக்கின்றது. மூன்றும் உலக நாடுகளில் கிராமங்களில் இருந்து நகரைக் கைப்பற்றுதல் என்ற யுத்த தந்திரம் பொதுவாகப் பொருந்தும். அதுவும் இலங்கையில் இருந்து தேசிய முரண்பாட்டுடன் இணைத்து ஒரு தளப்பிரதேசமாக தமிழ் பிரதேசம் முதல் மாறிவிடும் நிலையில் உள்ளது. இத்தளப் பிரதேசம் மொத்தப் புரட்சிக்கு தளமாக அமைய வேண்டுமா என்பதை சிங்களப் புரட்சியாளர்களின் எழுச்சியே தீர்மானிக்கின்றது. அப்படி ஒரு எழுச்சி வேகம் பெற்று எதிர் காலத்தில் எழும் பட்சத்தில் தமிழீழம் இலங்கைப் புரட்சிக்கான முதல் தளப்பிரதேசமாகும். அப்படி உருவாகத்தவறின் தமிழ் பிரதேசம் தமிழீழம் என்ற குடியரசாக மாறுவது தவிர்க்க முடியாது. இது ஒரு மக்கள் குடியரசாக மாற தமிழீழப் பாட்டாளிகள் அதைக் கைப்பற்ற வேண்டும். அதற்கு ஒரு கம்யூனிஸ்ட்

www.tamilarangam.net

கட்சி கொண்டிருக்க வேண்டும். அதுவே தமிழீழக் கம்யூனிஸ்ட் கட்சி.

"ஒரு கேள்விக்கு பதிலளித்த ப.நெடுமாறன் இந்திய கம்யூனிஸ்ட்டுக்கள் எல்லாம் தேசிய இன விடுதலையை எதிர்த்து தொழிற்படுவதாகவும், அரச பயங்கரவாதத்திற்கு ஆதரவு அளிப்பதாகவும் நமது மக்களறிந்த மார்க்சியக் கட்சி போலிக் கம்யூனிஸ்ட்டுக்களுடன் தனது பணியை முடித்தார்கள். அதற்கும் இவ்விவாதத்திற்கும் வேறுபாடு அதிகம் இல்லை. இங்கு இவ்விவாதம் என்பது 'இதுகாலவரையும் மிகுந்த துன்பத்துக்குட்பட்ட தமிழ் பேசும் மக்களின் சமூகப் பொருளாதார அரசியல் விடுதலைக்கு வழிகோலுவதே இச்சூழ்நிலைக்கு சாத்தியமானது'" மாறனின் ஒப்பிடும் இவ்விடயம் தனது கருத்தை நியாயப்படுத்த நெடுமாறன் துணைக்கு வந்துவிடுகிறார். தமிழ் பேசும் மக்களின் பிரச்சனையை நெடுமாறனின் பிழைப்புவாத அரசியலுடன் ஒப்பிட்டு இன்று தேசிய விடுதலைப் போரில் ஊன்றி நிற்போரை கொச்சைப்படுத்தியுள்ளார். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் இன்று ஆயுதப் போராட்டமாக மாற போலி கம்யூனிஸ்ட்களின் தவறான போலியான தன்மையால் எழுந்தது. இன்று தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக வளர்ந்துள்ளது. இன்று போலியா உண்மையா என்பது காலம் கடந்த ஒரு நிலையில் எழும் விவாதமே. தமிழ் தேசிய இனம் எந்த உண்மைக் கம்யூனிஸ்ட்டையும் தேடிக் கொண்டு காலம் கடத்த தயாராக இல்லை. ஏன் எனின் அவர்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். மாறன் ஏதோ ஒரு கம்யூனிஸ்ட் கட்சியை வைத்துக்கொண்டு விவாதிப்பதாகத் தோன்றுகிறது. மாறனின் கற்பனையில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சி போலியற்றது என மாறன் சொல்ல தமிழ் தேசிய இனம் தனது போராட்டத்தை கைவிட்டு ஐக்கிய இலங்கைக்கு போராட வரும்படி கூறுகின்றார். இங்கு போராட்டத்தைக் கைவிட்டு என்பது சுயநிர்ணய உரிமையுடன் கூடிய பிரிவினையே. மாறனின் கற்பனையில் உள்ள கம்யூனிஸ்டுக் கட்சியை நாம் பார்க்க தவறுவதாக கூறி அதைப் பார்க்கும்படி எம்மை அழைக்க நெடுமாறன் துணைக்கு வருகின்றார். முதலில் புரட்சிகர மார்க்சிய நிலைப்பாட்டை சிங்கள மார்க்சிஸ்டுகள் வைத்தபின் எம்மை ஐக்கியத்துக்கு அறைகூவ வேண்டும். அப்படி வைக்காமல் எம்மை ஐக்கியத்துக்கு அறைகூவுவது என்பது தமிழ்மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தைக் கைவிட்டு சிங்கள இனவாத அரசிடம் சரணடையக் கோருவதே.

இலங்கையின் ஐக்கியப் புரட்சிக்கு அறைகூவல் இடும் யாரும் முதலில் சிங்கள கம்யூனிஸ்டுக்களை இனம் காட்டுங்கள். இல்லையெனில் அவர்களுடன் இணைந்து நீங்கள் உருவாக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் திட்டத்தை முன் வையுங்கள். அதைவிடுத்து எம்மை (தமிழ் பாட்டாளிகளை ) சிங்கள மக்களுக்கு திட்டம் வைக்க கோருவது இன்றைய பிரதான இன முரண்பாட்டையே மறுதலிப்பதாகும். இன்று பிரதான முரண்பாடான இன முரண்பாட்டை தமிழ் பாட்டாளிகள் தமக்கான ஒரு கட்சியூடாக இன்று முன்னெடுப்பது தவிர்க்கமுடியாது.

" எவ்வளவு தான் வர்க்கம் பேசிக்கொண்டும் தேசிய நலன்களிலூடும், வர்க்கங்களின் ஐக்கியத்துக்கு எதிரான கருத்துக்களுடனும் திருப்தியுறுபவர்கள் தேசியக் கருத்தமைவின் எல்லைகளுக்குள் சிக்கியிருப்போரே தொடர்ந்து NLFT குறிப்பிடுகிறார் "

தேசிய நலனை உயர்த்திப் பிடிப்பது வர்க்க நலனுக்கு எதிரானது அல்ல. ஏன் தேசிய நலன் உயர்த்தப்படுகிறது ? இன முரண்பாட்டின் தீவிரத்தன்மை இதுவே பிரதான முரண்பாடு. பிரதான முரண்பாட்டை கவனத்தில் எடுக்காது வர்க்க முரண்பாட்டைத் தீர்க்க முடியாது. தேசிய முரண்பாட்டின் ஊடாகவே வர்க்க முரண்பாடு தீர்க்கப்படமுடியும். இங்கு தேசிய முரண்பாடு பிரிவினை நோக்கி நகரும் போதே ஐக்கியத்துக்கு

www.tamilarangam.net

எதிரானது என மாறன் குறிப்பிடுகிறர். ஏன் பிரிவினை நோக்கி நகர்கிறது . இது தொடர்பாக மேல் பல தடவை விவாதித்துள்ளோம். அதாவது சிங்கள கம்யூனிஸ்டுக்களின் எழுச்சி இன்று இல்லை. இது தொடரும் பட்சத்தில் பிரிவினையைத் தடுக்க முடியாது. எதிர்காலத்தில் சிங்கள கம்யூனிஸ்ட் கட்சியுருவாகும் என நாம் இன்று முடிவு எடுப்பது என்பது எதற்கும் உதவாது. எதிர்காலம் எல்லையற்றது. தேசிய இன முரண்பாடு தொடரும்வரை புரட்சிகர சிங்கள கம்யூனிஸ்ட்டுக் கட்சியுருவாகுவது என்பது மிகத் தீவிர முன் முயற்சியூடாகவே சாத்தியம். இது ஒரு கருத்தமைவு. அப்படி ஒரு கட்சி உருவாகும் என எதிர்வு கூற முற்படுபவர்கள் முதலில் அவர்கள் ஒரு கட்சியாகவே இயங்க முடியும். பின்பே இருகட்சியும் இணைய முடியும். இது எல்லா தேசிய இனத்துக்கும் பொருந்தும்.

" NLFT (இதன் தாய் வடிவம் ) பாதுகாப்பு பேரவை போன்றவை அன்றைய கொதிநிலையை தமிழ் மக்கள் மீதான பேரினவாத யுத்தத்தை எதிர்கொள்ளாது அடுத்த அடி வைக்க இயலாது என்று (சரியான முடிவு தான்) தமிழீழப் போரை முன்னெடுத்ததுடன் திருப்தியுற்றதும் தமக்கென வர்க்க நலனடிப்படையிலான தளத்தை நிறுவுவதை புறக்கணித்ததும் ---- " என்ற உங்கள் வாதத்தில் NLFT, பாதுகாப்பு பேரவை ஒப்பிட முடியாத வேறுபாட்டை கொண்டிருந்தன. பாதுகாப்பு பேரவை ஐக்கிய இலங்கை என்று கூறியது. இன்று நீங்கள் கூறுவது போன்றது. இதை விடுத்து பாதுகாப்பு பேரவை பொறுப்பாளர் நெப்போலியன் ( இவரை பின் கண்டியில் EROS சுட்டுக்கொன்றது ) வர்க்கம் பற்றி எந்த அரசியல் அறிவையும் கொண்டிருக்கவில்லை. பாதுகாப்பு பேரவை ஒரு தனிநபர் பயங்கரவாத இயக்கமாகவே செயற்பட்டது. இனி NLFT யைப் பார்ப்போம். இது தொடர்பாக ஒரு விவாதம் தொடர்ந்து வெளிவருகின்றது. NLFT ஆரம்பத்தில் மத்தியதர இளைஞர்களிடம் வேலை செய்த னர். 1984 நடுப்பகுதியின் பின் கிராமப்புறங்களில் வேலை செய்தனர். 1985 ஆரம்பத்தில் இவ்வேலை முறையில் ஏற்பட்ட பிரச்சனை உடைவாகவும், பின்னர் நகர், கிராமம் என இரண்டிலும் வேலை செய்ய முடிவு எடுத்த அமைப்பு தொடர்ந்து அழிக்கப்பட்டுவிட்டது. NLFT தனது தவறுகளை திருத்தி வேலை செய்யும் காலம் என்பது குறுகியது ஆக இருந்தது. இக்கால இடைவெளியில் சில கிராமங்களை வென்று எடுத்தது. நிலப்பறிப்புக்களை நடத்தியது. யாழ் மண்ணில் நடைபெற்ற அனேகமான ஜனநாயகப் போராட்டங்களில் NLFT பின்னி பிணைந்து நின்றது. NLFT உருவாக்கத்துக்கும் அதன் அழிவிற்கும் இடையிலான இரண்டு வருடத்தில் ஒருமுறை உடைந்தும், மூன்று வேறுவேறான வேலைமுறையை மாற்றியதாலும் மூன்றவது வேலைமுறை 86 கடைசியில் கைவிட்டு அமைப்பை கலைப்பின் கருத்துக்கு இட்டுச்சென்று எதிலும் ஒரு அடிப்படையை வைக்க முடியாமல் போய்விட்டது.

NLFT குட்டிபூர்சுவா தன்மை ஓரளவு கொண்டு இருந்தபோதும் வர்க்க அடிப்படையில் ஊன்றி நின்றது. NLFT ஒரு முன்னணி. ஆகவே இது ஒரு வர்க்க கட்சியல்ல. ஆனால் NLFT க்குள் ஒரு கட்சியிருந்தது. அது எப்போதும் வர்க்க அடிப்படையில் ஊன்றி நிற்க முயன்றது. இது தொடர்பாக NLFT கட்டுரையில் விவாதிப்போம். NLFT தமிழீழம் என எடுத்தது சரியானது. அது இன்று ஒரு சக்தியாக வளர்ந்து இருப்பின் இன்று தமிழீழம் பிரிவது தவிர்க்கமுடியாது இருந்திருக்கும். ஏன் எனில் சிங்கள பாட்டாளி கட்சி இன்று இல்லை.

" தமிழ் புரட்சிகர சக்திகள் சிங்கள மக்கள் மத்தியில் எப்படி ஈடுபாட்டோடு வேலை செய்ய இயலுமென மிகவும் இலகுபடுத்திய பார்வையில் கருத்தை தெரிவிக்கின்றனர். " என்று எமது கருத்தை குறிப்பிடுகின்றர். பின் இதை ஏற்றபடி பிரிவினையை முன்னெடுத்துக்கொண்டே அதாவது பாதுகாப்பு போரை சுயநிர்ணய உரிமைக்கான

www.tamilarangam.net

போரை, நிலமை கோரும் பட்சத்தில் பிரிவினை உள்ளடக்கிய போரை இன்னும் சிறப்பாக மற்றைய பிரிவு மக்களுடன், ஐக்கியப்படவும், புரட்சிகர சக்திகளுடன் இணையவும் என கூறும் உங்கள் வாதம் சரியானதே. நாம் இலகுபடுத்திச் சொல்லும்போது உங்களால் இதை புரிந்து கொள்ள முடிந்துள்ளது. உங்கள் மேல் வாதம் உங்களுடைய அனைத்து வாதத்துக்கும் எதிரானது. இதைத்தான் நாமும் குறிப்பிடுகின்றோம். நீங்கள் நிலமை கோரும் பட்சத்தில் என்ற விடயம் இன்று பொருந்தும். எதிர்காலம் இதை மாற்றலாம். அது எதிர்காலத்திற்கு உரியது.

நீங்கள் இலக்கம் 2 இல் சொன்ன விடயத்தில் நாம் தமிழ் மக்கள், சிங்கள மக்கள் போராடாமை சுட்டிக் காட்டவில்லை. சிங்கள மக்களோ, தமிழ் மக்களோ போராட வேண்டின் ஒரு புரட்சிகர கட்சி தேவை. நாம் ஒரு புரட்சிகரகட்சியையும், அணிதிரட்டப்பட்ட மக்களையும் குறிப்பிட்டோம். சிங்கள முஸ்லீம் மக்கள் படுகொலை செய்யப்பட்ட போது தமிழ் புரட்சியாளர்கள் அவர்களுக்காக குரல் கொடுத்தனர். இங்கு தமிழ் மக்கள் குரல் கொடுக்கவில்லை. ஏன் எனின் தமிழ் புரட்சியாளர்களால் அணிதிரட்டப்படவில்லை. தமிழ் மக்கள் கொல்லப்படுவதை சிங்களப் புரட்சியாளர்கள் (அப்படி ஒருவரும் இல்லை) குரல் கொடுக்கவில்லை என்பதையே குறிப்பிட்டோம்.

"புலிகளின் பின்னால் அணிதிரண்டுள்ள மக்கள் பிற்போக்கான இனவாதத்தை ஏற்றுள்ள மக்களே. மக்களுடைய சிந்தனைக்கு பின்னால் வாலாக சீரழிவதன் மூலம் மாற்றம் எதுவும் செய்துவிட முடியாது." உங்கள் வாதம் உங்கள் கருத்தை நியாயப்படுத்த கையாளப்பட்டுள்ளது. புலிகளின் பின்னால் மக்கள் அணி திரட்டப்பட்டு உள்ளனர் என்ற வாதம் தவறானது. மக்கள் ஒரு அரசியல் வழிப்படுத்திய புலிகளால் அணிதிரட்டப் படவில்லை. புலிகளின் அரசியல் தரகு முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ அடிப்படையே. மக்கள் புலிகளின் இவ்வரசியல் அடிப்படையில் அணிதிரட்டப்படவில்லை. மாறாக மக்கள் குட்டி பூர்சுவா தேசிய உணர்வை கொண்டுள்ளனர். பெரும் பாலான மக்கள் இனவாதத்துக்கு பதில் சிங்கள மக்களை வாழும் உரிமை போன்று எதிர்பார்ப்பவர்களே. இங்கு இவர்கள் தனிச்சலுகையை எதிர்பார்க்கவில்லை. மக்களின் சிந்தனையின் பின்னால் வாலாக சீரழிவது என்பது எவ்வளவு வேடிக்கை. சமூகம் தானாக மாறிவிடும் என கனவுகளில் இருந்து எழும்புவதே. எந்த மக்கள் கூட்டம் புரட்சிக்கு முன் பிழையான கருத்தை கொண்டிருப்பர். பிற்போக்கு கருத்தை மாற்றுவது பாட்டாளிகளின் கடமை. பாட்டாளிகள் சீரழிவார்கள் எனின் எந்தப் பிரச்சனைக்கும் பொருந்தும். இது சிறப்பாக மாறன் கருதுவது போல் தேசிய இனப் பிரச்சனைக்கு மட்டுமல்ல அனைத்துப் பிரச்சனைக்கும் பொருந்தும்.

"இறக்கும் இராணுவத்தினரை வீர புருசர்களாக கருதுகின்றனர் என்றும் சிங்கள இளைஞர்கள் பெருந்தொகையில் இராணுவத்தில் சேர்வதையும் தாங்கள் வைத்த கருத்துக்கள் பெரிதும் மிகையானவையும் உண்மை நிலையைத் திரிப்பதுமாகும். அண்மையில் ராவய சஞ்சிகை எடுத்த ஆய்வுக் கணிப்பு பெருமளவு மக்கள் யுத்தத்தை வெறுப்பதை எடுத்துக்காட்டியது. 1000 இராணுவத்தை திரட்டக்கோரிய இராணுவ ஆட்சேர்ப்பு நிலையங்களுக்கு (மாத்தறையில் என ஞாபகம்) 4 பேரே சமூகமளித்திருந்த உண்மைநிலமை" என்ற வாதத்தில் எமது வாதம் உண்மை இல்லை என்றும் திரிபு எனவும் மாறன் குறிப்பிட்டுள்ளனர்.

29.8.93 வீரகேசரியில் 10 ஆயிரம் இராணுவ சேர்ப்புக்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டு 5.8.93 இல் 7,500 இராணுவ வீரர்கள் சேர்க்கப்பட்டதை வீரகேசரியில் பார்க்க முடிந்தது. 7.8.93 புலிகளின் செய்தியில் 10 ஆயிரம் இராணுவ வீரர்கள் சேர்க்கப்பட்டதாக அறிவித்தனர்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிங்களப்பகுதியில் சிலவற்றில் குறைந்த எண்ணிக்கையானோர் சமூகமளித்திருந்தனர். ஏன் எனின் JVP செல்வாக்குப் பகுதியும், பல சிங்கள இளைஞர்கள் படுகொலை நடந்த பிரதேசம் என்பதால். இதில் மாத்தறை, அம்பாந்தோட்டை ...... என சில பிரதேசங்கள் இப்படிப் பார்க்க முடியும்.

உண்மை நிலை இதுவே. சிங்கள இராணுவத்தின் இறப்பு என்பது தியாகத்துக்குரியதாக புலிகளைப் போல் போலியாக அரசால் கூறப்படுகின்றது. இனவாத சிந்தனையின் பின் அணிதிரண்டுள்ள மக்கள் வீரபுருசர்களாக பார்க்கின்றனர். அமெரிக்கா இராணுவத்தில் உள்ள இராணுவ வீரராலும், அமெரிக்க மக்களும் இராணுவத்தின் செயற்பாட்டை புரட்சிகர மானதாகவும், வீரத்துக்கு உரியதாகவும் பார்க்கின்றனர். வியட்நாம் யுத்தத்தில் அமெரிக்க வீரர்களின் இழப்பு தொடர்ந்து மக்கள் யுத்தத்துக்கு எதிராக இருக்கின்றனர். இதன் வெளிப்பாடக இராணுவத்தில் சேர மறுத்தல், ஓடுதல் ....... என அனைத்தும் நிகழ்ந்தன. ஆனால் மீண்டும் அமெரிக்காவின் புதிய ஆக்கிரமிப்பை அங்கீகரித்து வீரர்களை தியாகிகள் ஆக்குகின்றனர். யுத்தத்தின் விளைவுடன் ஓடுதல், சேரமறுத்தல் ..... என அனைத்தும் தொடரும்.

ராவய கணக்கு எடுப்பு யுத்தம் வேண்டுமா? வேண்டாமா? என்பதே கேள்வியாக கேட்கப்பட்டது. இதை தமிழ் மக்களிடமும், உலக மக்களிடம் கோரின் 99% யுத்தம் வேண்டாம் என்பர். யுத்தத்திற்கு எதிராகவே மக்கள் இருப்பர். தமிழ் மக்களிடம் தேசியப் பிரச்சனையை கைவிடக்கோரின் 99% மானோர் எதிர்ப்பர். அதுபோல் சிங்கள மக்களிடம் சுயநிர்ணய உரிமையை ஏன் சுயாட்சி தமிழ் மக்களுக்கு கொடுப்பது எனின் பெரும் பகுதியினர் எதிர்ப்பர். இதுவே அடிப்படையில் இனவாதமே.

"எந்தக் கருத்தின் பின்னாலும் மக்கள் அணிதிரள வேண்டும் எனின் மக்களுக்கு தலமை அளிக்க ஸ்தாபன வடிவம் அவசியம்" உண்மைதான். அது இன்றில்லை. மதிப்பீடு என்பது எந்த ஸ்தாபனத்தின் பின் உள்ளனர் என்பதை வைத்தே இன்று சிங்கள மக்கள் UNP, SLFP என மாறிமாறி எது கூடிய இன வாதத்தைக் கைக்கொள்கின்றதோ அதன்பின் அணிதிரள்கின்றனர். சிங்கள மக்கள் அணிதிரண்டு உள்ளதை இது காட்டுகின்றது. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களின் போராட்டம் இனவாதம் அல்ல. மாறாக சிங்கள மக்களுடன் சரிசமன் ஆக வாழும் உரிமையைக் கேட்கின்றனர். இக்கோரிக்கையை புலிகள் போன்ற இனவாதிகள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி மற்றைய இன மக்களை அழிக்கின்றனர். இங்கு புலிகள் பின் மக்கள் அணிதிரட்டப்படவில்லை.

"'சிங்கள மக்கள் மத்தியில் எந்த ஒரு வர்க்க சிந்தனை கொண்டோரோ ஜனநாயக சக்திகளோ இல்லை'" எனக்குறிப்பிடும் நீங்கள் (நீங்கள் என்பது சமரை) அதற்கு முன்பாக சமகாலத்தில் முற்போக்கு சிங்கள அரசியல் பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கியுள்ளது நல்ல சகுனமே எனக் குறிப்பிடுவதன் மூலம் முரன்படுகின்றீர்கள்" இது முரண்பாடு இல்லை. நாம் பிரச்சனையை ஆராயும் விதத்திலும் உங்கள் ஆய்வுக்கு இடையில் ஆன முரண்பாடாக உள்ளது. நாம் எப்போதும் வர்க்க அடிப்படையை அடிப்படையாகவைத்தே புரட்சிகர சிங்கள சக்திகளை ஆராய்கின்றோம் இதில் இருந்தே சிங்களப் புரட்சிகரப் பிரிவினர் இல்லை என்றோம். முற்போக்கு சிங்களப் பத்திரிகை வருகின்றது என்ற வாதத்தில் நாம் அவர்களை வர்க்க சக்தியாக பார்க்கவில்லை.

இப்படி வெளிவரும் முற்போக்குப் பத்திரிகைகள் எதிர் காலத்தில் புரட்சிகர சக்தியினரை இனம் காட்ட உதவும். இன்று ஐரோப்பாவில் வெளிவரும் 20 மேற்பட்ட சஞ்சிகைகளை பார்ப்போம். எல்லாம் புரட்சிகர சஞ்சிகையல்ல. இதை நீங்கள் ஏற்பீர்கள். அதுபோல் தான் சிங்களப் பத்திரிகை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களபாவில் சில சிங்கள நண்பர்கள் கூடினர் என்பது எதற்காக, என்ன கதைத்தார்கள் என நீண்ட விவாதம் நிகழமுடியும். பிரான்சில் JVP யினர் உள்ளனர். அவர்களோ சுயநிர்ணய உரிமையை திரிக்கின்றனர். எம்மிடம் எத்தனை சஞ்சிகை எத்தனை சந்திப்புகள் அதுபோல் ஒன்றாக ஏன் சிங்களப் பத்திரிகை, சந்திப்புகள் இருக்க முடியாது. அவர்கள் சரியாக இருந்தால் முதலில் சிங்கள மக்களுக்கு ஒரு கட்சியைக் கட்டமுடியும். அவர்கள் உருவாக்கும் கட்சி இலங்கைக்கானதாக இருக்க முடியாது.

"இது அப்பட்டமாக 'சிங்களவன் மோடன்' என்கின்ற வாதத்தில் நாகரிகமான வர்க்கம் பூசிய வடிவமே யொழிய வேறல்ல என்பதே எனது கருத்தாகும். " எவ்வளவு முட்டாள்தனமான ஆய்வு. ஒரு தேசிய இனத்தின் விடுதலையை வலியுறுத்தின் இன்றைய நிலையில் பிரிவினை தவிர்க்க முடியாதுள்ளது என வாதிட்ட எம் கருத்தும், இந்நிலமை ஏற்பட்ட சிங்களப் புரட்சிகர சக்திகள் வளர்ச்சி இன்மையையும், அதனால் ஒரு கட்சி இல்லை என சுட்டிக் காட்டியதை சிங்களவன் மோடன் என்ற வரையறையில் இருந்து சொன்னதாக ஆய்வு செய்துள்ளீர்கள். இது எந்த ஆய்வையும் விடையாகத்தரப்போவதில்லை. எந்தப் புரட்சிகர எழுச்சியும் அற்ற இன்றைய நிலையில், சிங்களக் கம்யூனிஸ்ட்டுக்கள் உருவாகும் வரை சிங்கள சமூகம் இனவாதத்திற்குள் இருப்பது தவிர்க்க முடியாது. தமிழ் தேசிய இனத்தில் இன்று தேசிய விடுதலைப் போராட்டம் பல கம்யூனிஸ்ட்டுக்களை (இவர்கள் அமைப்பாகவில்லை) உருவாக்கியுள்ளது. அவர்களின் இணைவு எதிர்காலத்தில் முற்போக்கு தேசியத்தை முன்னெடுக்கும். சிங்கள கம்யூனிஸ்ட்டுக்கள் உருவாகின் ஒரு ஐக்கிய இலங்கைக்கான புரட்சியாக மாறும். சிங்களக் கம்யூனிஸ்ட்டுக்கள் ஒரு சக்தியாக உருவாகாத நிலையில் தமிழ் ஈழம் ஒரு பாட்டாளிவர்க்க தலைமையில் ஒரு புதிய ஜனநாயகப் புரட்சியாக முன்னெடுத்து ஒரு நாடாக பரிணமிக்கும். ஆகவே 'சிங்களவன் மோடன்' என்ற கருத்தின் மீதான உங்கள் வாதம் ஆய்வுகளையும் யதார்த்த நிலமைகளையும் நிராகரிப்பதே.

"இவ் அடிப்படையில் இயங்கியலை நிராகரிப்பது சுயநிர்ணய உரிமையை அங்கீகரியுங்கள் என்ற வாதத்தை ஆராய்ந்துள்ளீர்கள் " என மேற் கூறிய 'சிங்களவன் மோடன்' என்ற உங்கள் கருத்தில் இருந்து இதைக் கூறுகின்றீர்கள். முதல் ஆய்வே தவறாக இருக்கும் போது அதாவது "இவ் அடிப்படையில்" என்பதுக்கு ஊடாக பின்னைய முடிவு தவறானதாக மாறிவிடுகின்றது.

"......... புரட்சிகர வர்க்க சக்திகள் புலிகளின் பாசிச அபாயத்தை முறியடித்து, மக்களை பிற்போக்கு கருத்தமைவுகளில் இருந்து விடுவித்து அணிதிரட்டி சுயநிர்ணய உரிமைப் போரில் வெல்கின்ற வளர்ச்சி காலகட்டம் வரை சிங்கள மக்கள் UNP இனை அல்லது SLFP இனை அல்லது அதை ஒத்த நண்பர்களை தெரிவு செய்கின்றவர்களாகவே இருப்பார்கள் என்ற வாதமாகும். இயங்கியலை ஏற்கின்ற அதற்காக உழைக்க உறுதிபூண்டுள்ள சமர் தமிழ் தேசியம் என்றவுடன் அல்லது சிங்கள மக்களின் மீது இயங்கியலை பிரயோகிப்பது எவ்விதம் எனக்காட்டி இயங்கியல் என்கின்றதை இலங்கையில் கொச்சைப்படுத்த வேண்டாம் என கேட்டுக் கொள்கின்றேன் " என்ற வாதம் சிங்களவனை மோடன் எனச் சொன்னதாக (உங்கள் ஆய்வு தவறுகளில்) கூறி அதில் இருந்து கற்பனையில் சமர் பற்றிய ஒரு கருத்தமைவை ஏற்படுத்தியதே உங்கள் வாதம். நாம் விவாதிப்பது இன்றைய நிலமையை ஒட்டியே. நீங்களே எதிர்கால நிலமைகளை கற்பனை பண்ணி நிகழ்காலத் திட்டம் தயாரிக்க கோருகின்றீர்கள். இதுவே எங்களுக்கும் உங்களுக்குமான தீர்மானமான பிரதான வேறுபாடு. உங்கள் இக் கட்டுரை முழுமையாக எதிர்காலத்தில், கற்பனைக் கட்சியில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்து கோரும் விவாதமே. அதில் இருந்தே விவாதிக்க முற்பட்டுள்ளீர்கள். அதில் இருந்தே நாம் இயங்கியலை கொச்சைப் படுத்தியதாக கூறியுள்ளீர்கள்.

நாம் இன்று சிங்களக் கம்யூனிஸ்ட்டுக்கள் இல்லை என்கின்றோம். ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் உள்ளனர். எதிர் காலத்தில் சிங்களக் கம்யூனிஸ்ட்டுக்கள் உருவாக மாட்டார்கள் என எச்சந்தர்ப்பத்திலும் நாம் கூறவில்லை. எதிர் காலத்தில் உருவாகும் வீச்சுத் தொடர்பாக நாம் இன்று பாரபட்சமாக ஆய்வு செய்ய முடியும். இது இன்றைய நிலைமையில் இருந்தே சாத்தியம். அம்முடிவு என்பது சரியாக இருக்க வேண்டும் என்று இல்லை. ஏனெனில் சமூகம் இன்று இருப்பதுபோல் என்றும் இருப்பது இல்லை. சர்வதேச அழுத்தங்கள், மற்றும் பல காரணிகள் நிலமைகளை தலைகீழாக மாற்றிவிடும். இது எதிர்வு கூற முடியாது. ஆனால் பரிமட்டமான ஆய்வை செய்ய முடியும். அப்படி பரிமட்டமாக வரும் முடிவை வைத்து அதற்கு அமைய திட்டம் தயாரிக்கக் கோருவது கற்பனையானதும் கனவுக்குரியதுமே. இன்றைய நிலமை தான் ஒரு திட்டமாக பரிணமிக்க முடியும்.

எதிர் காலத்தில் சிங்களக் கம்யூனிஸ்ட்டுக்கள் உருவாகும் போதே ஐக்கிய இலங்கைக்கு போராடுவதா இல்லையா என்பதை அன்றைய நிலமைகளுடன் மட்டும் தீர்மானிக்க முடியும். இன்று நாம் போராடுவது இன்றைய பிரதான முரண்பாட்டிற்கு அமையவே. ஒரு தமிழ்க்கட்சி உருவாகும் போது அதில் ஐக்கிய இலங்கைக்கான புரட்சிகர நிலமை ஏற்படின் போராட வேண்டும் என்பது கட்சித்திட்டம் கொண்டிருக்க வேண்டும். அதற்காக இன்றே ஐக்கிய இலங்கைப் புரட்சியென வாள்முட்ட முழங்குவதால் ஒரு புரட்சி நடந்து விடாது. ஏன் எனில் யதார்த்த நிலமைகளில் இருந்தே புரட்சி நடைபெற முடியும். உங்கள் வாதம் இன்றைய நிலமைகளை மறுக்கும் யதார்த்த இயங்கியல் மறுப்பாக உள்ளது. எதிர்காலத்தில் சிங்கள கம்யூனிஸ்டுக்கள் உருவாக மாட்டார்கள் என நாம் எச்சந்தர்ப்பத்திலும் கூறவில்லை. இங்கு எதிர்காலம் என்பது முடிவற்றதுடன் வரையறுக்க முடியாது.

"ஐக்கியத்துக்கான திட்டங்கள், அதற்கான முயற்சிகள் எதுவுமே செய்வதில் கவனம் செலுத்தாது அகநிலையின் அடிப்படையில் சிங்கள மக்கள் மத்தியிலான புரட்சிகர சக்திகளின் வளர்ச்சியைப் பற்றி ஆருடம் கூறுவது அகநிலைக் கண்ணோட்டமே ஆகும். " நாம் ஆருடம் கூறுகின்றோம் என்ற வாதம் உங்கள் அகநிலைக் கருத்தமைவில் இருந்து எழுவதே. நாம் இன்றைய யதார்த்த நிலைமையில் நின்றே (இது அக நிலையல்ல) கருத்துக் கூறுகின்றோம். மறுதலையாக நீங்களே எதிர்காலத்தின் உருவாகும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி பற்றி ஆருடம் கூறி அதற்கு இன்றே திட்டம் தயாரிக்க வேண்டும் என்கின்றீர்கள். ஐக்கியத்துக் கான திட்டம் என்பது தமிழீழக் கம்யூனிஸ்ட் கட்சி தெளிவாகக் கொண்டிருக்க வேண்டும். அதற்கான முயற்சியை யாரும் நிராகரிக்க முடியாது. நாம் இன்று சிங்கள கம்யூனிஸ்ட் கட்சியோ, சக்திகளோ இல்லை என்கின்றோம். இது எப்படி அகநிலையாகவும் ஆருடமாகவும் அமைந்து விடும். நீங்களே அகநிலை விருப்புடன் ஆருடம் கூறி சிங்களப் புரட்சியாளர்கள் உள்ளிட்ட கட்சியை கோருவதுடன் ஐக்கிய இலங்கைப் புரட்சியை நடாத்தக் கோருகின்றீர்கள். இங்கு எமது திட்டம் பிரதான முரண்பாடான தேசிய விடுதலைப் போராட்டத்தை உள்ளடக்கியதே.

"வடக்கு கிழக்குக் கூட வர்க்கத் தலைமையிலான தேசிய விடுதலை என்பதற்கான வெற்றிக்கு உடனடி வாய்ப்பிருப்பதாக யாரும் நிறுவ முடியாதெனவே கருதுகின்றேன்" என்ற உங்கள் வாதத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிராகரிக்கின்றோம். இது உங்கள் அகநிலையில் நின்று எதிர்காலத்தை ஆருடம் பார்த்து வைக்கும் ஐக்கிய இலங்கைப் புரட்சியை நியாயப்படுத்தும் வாதமே. வடக்கு கிழக்கில் இன்று நடக்கும் யுத்தத்தையும், அங்கு உருவாகியுள்ள தளப் பிரதேசத்தையும் நிராகரித்த யதார்த்த இயங்கியல் மறுப்பே. இன்று பிற்போக்கு பாசிசத் தரகுப் புலிகள் இப்போராட்டத்தை அழிவு யுத்தத்துடன் கூடிய பாதுகாப்புப் போரை நிகழ்த்துகின்றனர். இது இதற்கு மேல் முன்னேறாது. ஏன் எனில் புலிகளின் அரசியலே காரணம். இந்தத் திட்டத்தில் ஒரு பாட்டாளிவர்க்க கட்சி இருந்திருப்பின் இப் போராட்டம் பாதுகாப்பு யுத்தமாக அல்ல (தற்காப்பு யுத்தமாக அல்ல ) பிரிந்து போகும் ஒரு தேசிய விடுதலையாக நகர்ந்திருக்கும். இன்று பாட்டாளிகளின் தலைமை இல்லை என்பதே பிரச்சனை. இதைத் தீர்க்கும் பட்சத்தில் தேசிய விடுதலைப் போராட்டம் வெற்றி பெறும். இது உடனடி வாய்ப்பைக் கொண்டிருக்குமா இல்லையா என்பதை ஒரு ஸ்தாபனத்தின் உருவாக்கத்துடன் சம்மந்தப்பட்டது.

"பிரிவினை தான் என்பது இனங்களுக்கிடையே அவ நம்பிக்கை கொண்ட சக்திகளையும் அதாவது வர்க்க கருத்தமைவை பலவீனமாக்கும் சக்திகளை அணிதிரட்டவே உதவும் " இவ் வாதம் இலங்கை அரசின் இனவாதக் . கருத்தமைவுக்கு மேல் சென்றுவிடவில்லை. ஒரு தேசிய இனப் பிரச்சனையை கோரும் போது வர்க்க நலன் கொண்டோர் கட்சியின் ஐக்கிய இலங்கைப் புரட்சியைக் கருத்தில் கொண்டு போராடும் அதே நேரம் அதற்கு ஆளமுயற்சியில் ஈடுபட வேண்டும். மறு தரப்பாக சிங்கள கம்யூனிஸ்ட்டுக்கள் பிரிவினையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும். பிரிந்து செல்ல தமிழ் மக்கள் விரும்பின் பிரிந்து செல்ல உரிமையுண்டு என சிங்கள மக்கள் மத்தியில் வேலை செய்து ஸ்தாபனமாகவும் இருக்க வேண்டும். இதன் போது மட்டுமே தமிழ் கம்யூனிஸ்டுக்கள் பிரிவினைக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும். இனங்களுக் கிடையில் அவநம்பிக்கை கொண்ட சக்திகள் இனவாதிகளே. அவர்கள் பிரிவினையை கைவிடின் இனவாதத்தை ஏற்பதே. தேசிய நலனை முதன்மையாக்கும் சக்திகளையும் அதாவது வர்க்கக் கருத்தமைவை பலவீனமாக்கும் என்ற வாதம் இன வாதமே. பிரிவினையை முதல் அங்கீகரிக்க வேண்டும். அதன் ஊடாக ஐக்கியப்படவும் முடியும்.

"வடக்கு கிழக்கு தேசிய வாதிகளுக்கான எமது சமரசமே பிரிவினை தான் என்பது மேலும் இன அடிப்படையிலான அவ நம்பிக்கை கொள்கின்ற சக்தி ஒன்றினால் மக்களை இன வாதங்களில் இருந்து விடுவிக்கும் திசையில் பயணிக்க முடியாது விளைவு தேசியப் போருடன் திருப்தியுறுவதாகவே முடியும்." உங்கள் இவ்வாதம் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை கொச்சைப்படுத்தி இனவாத மூலம் பூசியுள்ளீர்கள். சிங்கள இன வாதத்துக்கும் அடக்கு முறைக்கும் உள்ளான தமிழ் மக்கள் போராடும் போதும் தமிழ் இன உணர்வு எழுவது இயல்பானது. இதை புலிகள் போன்ற பிற்போக்கு சக்திகள் தமது நலனுக்கு தவறாக கையாண்டு தேசிய விடுதலைப் போராட்டத்தை தவறாக இட்டுச் செல்ல முனைகின்றனர்.

இங்கு தேசிய விடுதலைப் போராட்டத்துடன் திருப்தி உறுவதாகவே அமையும் என்பது யார் தலைமையில் புரட்சி நடந்தது என்பதே தீர்மானிக்கும். பாட்டாளிகள் எப்போதும் சர்வதேசியவாதிகள். அவர்கள் குறித்த எல்லைக்குள் திருப்தி உறுபவர்கள் அல்ல. அவர்களுக்கு எல்லைகிடையாது. ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் எல்லையை உருவாக்கலாம். இதை எந்த மார்க்சிட்டும் நிராகரிக்க முடியாது. ஏன் எனில் அப் போராட்டம் முற்போக்கானது. பாட்டாளிகள் ஆட்சியில் இருப்பின் அவர்கள் எப்போதும் சர்வதேசிய வாதிகளாகவே இருப்பர்.

"தற்போதைய காலகட்டத்தில் பாதுகாப்புக்குமான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராட்டமானது தேசிய விடுதலைக்கு போதுமானதல்ல. என கருதுவீர்கள் எனின் அதைத் தெளிவுபடுத்தியும் உறுதியான தெளிவான வேலைத்திட்டம், சுயநிர்ணய உரிமையை விட மேலதிகமான எவற்றை கோரவேண்டுமெனவும் தெளிவுபடுத்தவும் " என்ற உங்கள் கேள்வி கட்டுரை முழுதாக மேல் விளக்கி உள்ளோம் . இதில் பாதுகாப்புக்குமான போராட்டமாக தேசியவிடுதலைக்கு போதுமானதல்ல என்ற வாதத்தில் பாதுகாப்பு யுத்தம் ஒரு தேசிய விடுதலைப் போராட்டமாக நடந்துவிடாது. பாதுகாப்பு யுத்தம் தேசிய குறிக்கோளைக் கொண்டது அல்ல. இது தற்பாதுகாப்புக்கு ஆனது. தேசிய விடுதலைப் போராட்டம் தனியரசாக மாறும் குறிக்கோள் கொண்டது. இன்று பாதுகாப்பு யுத்தத்தை மாற்றி நாட்டை விடுவித்தல் என்ற நிலைக்கு யுத்தத்தை மாற்றி அமைக்கவேண்டும். சுயநிர்ணய உரிமையை விட என்ற உங்கள் வாதம் யார் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்துள்ளனர். சிங்கள கம்யூனிஸ்டுக்கள் அங்கீகரிக்கும் வரை சுயநிர்ணய உரிமையில் உள்ள பிரிவினையை முன்னெடுப்பது தமிழ் கம்யூனிஸ்டுக்களின் கடமை. இதை மறுப்பது யதார்த்த நிலை மறுப்பாகும்.

தேசிய இனப் பிரச்சனை பற்றி தேடலில் இந்திரன்
xxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxx
இவரின் கட்டுரையில் உள்ள பல முரண்பட்ட விடயங்களுக்கு மேல் உள்ள கட்டுரை பதில் அளிக்கிறது. அவைகளுக்கு அப்பால்

" இலங்கையில் முதலாளித்துவ வளர்ச்சியும், அத்தோடு இணைந்த தேசிய வாதத்தின் தோற்றமும் அவற்றில் அக்கம் பக்கமாக இனவாதத்தையும் வளர்த்துச் சென்றதையுமே இது வரைக்குமான இலங்கை வரலாறு எமக்கு காட்டி நிற்கின்றது" என்ற வாதம் உங்கள் முந்திய வாதத்துக்கு முற்றாக மாறானது. "ஏகாதிபத்தியமானது இந்நாடுகளின் சுதந்திரமான முதலாளித்துவ வளர்ச்சியை தடைசெய்து கொண்டிருக்கிறது. அதற்கு முட்டுக்கட்டை போட்டுக்கொண்டிருக்கிறது " இலங்கையில் இனவாதம் என்பது முதலாளித்துவம் கூடிய தேசியவாதிகளால் உருவாக்கப்பட்டது அல்ல. ஏகாதிபத்தியத்தின் தேவையுடன் தரகு முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ பிரிவினரே தேசிய இனப் பிரச்சனையை முன்னுக்கு கொண்டு வந்தனர். இதில் SLFP, UNP என அனைவரும் தரகு முதலாளித்துவ பிரதிநிதிகளே. இவர்களால் முன்னெடுத்து சென்ற தேசிய இன முரண்பாட்டை இன்று குட்டி பூர்சுவா பிரிவினர் இக் கோரிக்கையை தமது ஆக்கியுள்ளனர். இவர்கள் இக் கோரிக்கையின் அடிப்படையில் தரகு முதலாளித்துவ பிரிவுடன் இணைந்துள்ள அதே நேரம் இவர்களுக்கு இடையில் கூர்மையான முரண்பாடு இருந்தபோதும் இன முரண்பாட்டின் அடிப்படையில் ஐக்கியப்பட்டுள்ளனர். இதுவே சிங்களமக்கள் மத்தியில் புரட்சிகர ஒரு கட்சியோ, பூர்சுவா தேசிய வாத இயக்கங்களோ உருவாக முடியாததற்கு பிரதான காரணம். " தமிழ் முதலாளித்துவ தலைமையின் " என்ற வசனத்தில் கூட்டணி ஒரு தமிழ் முதலாளித்துவ பிரிவினர் அல்ல. அவர்கள் தரகு முதலாளித்துவ பிரிவினரே.

" இன்று எம்முன்னுள்ள பணியானது சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தமிழ் மக்களின் போராட்டத்தை முன்னெடுத்து செல்வது, சிங்கள பேரினவாத ஆட்சியை எதிர்த்து ஈவிரக்கமற்ற போராட்டத்தை முன்னெடுத்து செல்லும் அதேவேளை, தமிழ் குறுந்தேசியவாதத்தை எதிர்த்து, தனித்துவமான போக்கை எதிர்த்தும் .........
அனைத்து இனங்களுக்கும் மொழிகளுக்கும் சமத்துவம் " என ஐக்கிய இலங்கைக்கான கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்தபடி கூறியுள்ளார். அதுதான் " நாம் " என அடிக்கடி கட்டுரையில் பயன்படுத்தி உள்ளார். எமக்கு தெரிய ஒரு கட்சியை நாம் அறிய இல்லை. சிங்கள கம்யூனிஸ்ட்டுக்கள் என நாம் இன்று யாரையும் இனம் காணவில்லை. கற்பனையில் ஒரு கட்சியாக நின்று நாம் கூறுகின்றோம் எனக் கூறும் இவ் வாதம்

www.tamilarangam.net

கற்பனையானது. நாம் இன்று உள்ள நிலையில் நின்றே பிரச்சனையை ஆராய முடியும். உடனடியாக இன்று கட்சி உருவாக முடியாத இன்றைய நிலையில் நின்று அதற்கு தத்துவ பலம் கோரி இன்றைய போராட்டத்தை இன வாதத்துக்கு தாரை வார்த்து கொடுக்க கோருகின்றார். ஒரு ஐக்கியப்பட்ட கட்சி உருவாக வேண்டின் சிங்களக் கம்யூனிஸ்ட்டுக்கள் இருந்தால் மட்டுமே சாத்தியம். அதன் ஊடாக தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் போராட உரித்து உடையவர்கள் ஆக இருப்பர். அதன் ஊடாகவே அனைத்து மொழியும் சமத்துவத்தை அடைய முடியும்.

இன்று ஒரு கட்சி இல்லை. அப்படி இருக்க தமிழ் மக்கள் போராட்டம் எப்படி குறுந் தேசிய வாதமாகும். இப்படிக் கூறுவதன் ஊடாக சிங்கள இனவாதத்துக்கு ஆலவட்டம் பிடிப்பதற்கு அப்பால் எதையும் சாதிக்காது. பெரும் தேசிய இனம் சிறுபான்மைத் தேசிய இனத்தின் பிரிவினையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தும் தமிழ் தேசிய இனம் பிரிந்து செல்ல கோரின் குறுந்தேசிய வாதமாகும். இன்று பெரும்பான்மை இனம் சிறுபான்மையின் பிரிவினையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை அங்கீகரித்து உள்ளதாக கற்பனை பண்ணி சிறுபான்மை இனம் சார்பான கோரிக்கையுடன் வேடிக்கையான ஒரு தத்துவக் கட்டுரை. இன்று உள்ள நிலையில் தமிழ் மக்களின் பிரிவினையை எதிர்ப்பது என்பது இனவாதமே. இது இனவாதத்துக்கு துணை போவதற்கு அப்பால் ஒரு அடிகூட நகர முடியாது. நாம் பிரிவினையைக் கைவிட சிங்கள மக்கள் பக்கத்தில் எதைப்பார்த்து கைவிடுவது. வேண்டும் எனில் கனவுகளே காணமுடியும்.

"-------- அரசையே சிங்கள உழைக்கும் மக்களும், ஜனநாயக புரட்சிகர தேசபக்த சக்திகளும் ஏனைய சிறுபான்மை இனத்தவரும் எதிர்த்து போராடிக் கொண்டிருக்கின்றார்கள்" போராட்டம் என்பது ஒரு பாட்டாளி வர்க்கத் தலைமையில் நடைபெறும் போது மட்டுமே அது புரட்சியாக மாறும். தன்னியல்பான போராட்டம் புரட்சியாகி விடாது. அந்த வகையில் சிங்கள பிரதேசத்தில் பாட்டாளிகள் தலைமையில் போராட்டம் நடைபெற இல்லை. ஜனநாயகத், தேசபக்த சிங்கள மக்கள் போராடுகின்றனர் என்பது உண்மைக்கு புறம்பானது. புரட்சிகர பாட்டாளிகள் இல்லை எனலாம். தேசபக்த ஜனநாயக சக்திகள் ஸ்தாபனம் மற்ற தன்னியல்பான வகையில் உள்ளதும் அவர்கள் பெரும்பாலும் எதிர்க்கட்சிக்குள் சென்று விடுகின்றனர்.

"தமிழ் தேசிய இனம் விடுதலை பெறுவதே சிங்கள இனத்தினதும் விடுதலையைச் சாதிக்கும் என்கின்றார். இவர்களின் கருத்துப்படி ஒரு முழு இலங்கை விடுதலைக்கும் தமிழ் தேசிய இனத்தின் விடுதலை ஒரு முன் நிபந்தனையாக உள்ளது. இது அடிப்படையிலேயே தவறான வாதம் மட்டுமல்ல ஒரு கற்பனை புனைவுமாகும்." இப்படிக் கூறியவர் ஏன் தவறானது என எந்த விளகத்தையும் கொடுக்க முடியாதவர் ஐக்கிய இலங்கையை உயர்த்த இதை கற்பனை பண்ணி முடிவாக வைத்துள்ளார். தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை நிராகரிக்கின்றார். இன்று நடைபெறும் தேசிய விடுதலைப் போராட்டத்தை கொச்சைப் படுத்துகின்றார். இதன் ஊடாக சிங்கள இனவாதத்துக்கு பச்சைக் கொடி காட்டி நிற்கின்றார்.

தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் இலங்கைப் புரட்சிக்கு உதவாது எனில் எப்படி? தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் ஏகாதிபத்தியத்தையும், தரகு முதலாளித்துவத்தையும் பலவீனப்படுத்தும். தமிழ் மக்கள் இனவெறி அரசின் முழு முகங்களையும், ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பையும் தமிழ் மக்கள் தெளிவாக இன்று பார்க்கின்றனர். அதற்கு எதிராக போராடுகின்றனர்.

தமிழ் மக்களின் தேசிய போராட்டத்தின் வெற்றி இன முரண்பாட்டை நீக்கும். அப்போது சிங்கள இனம்

www.tamilarangam.net

தளக்குமேல் உள்ள சுரண்டலை தெளிவாக புரிந்து போராடுவர். இது ஒரு புறம். இன்னும் ஒரு வழியில் பார்ப்பின் போராட்டம் தொடரும் போது சிங்களப் புரட்சிகரப் பிரிவுக்கு ஊக்கப்படுத்தும், உதவி வழங்கும், தளப்பிர தேசமாக ..... என பலவழியில் உதவும்.ஏன் நவ JVP 84 களில் தமிழ்மக்களின் உதவியை நாடி தமிழ் இயக்கங்களிடம் வந்ததை நாம் மறந்து விட முடியாது. தமிழ் போராளிகள் இந்திய மக்களிடம் சென்று மறந்து விடமுடியாது. இவை எல்லாம் பரஸ்பரம் உதவியின் அடிப்படையில் புரட்சிக்கு உதவுதல் என்றதன் அடிப்படையிலேயே.

"தமிழ் தேசிய இனம் பெறுவதே சிங்கள மக்களின் ஆதரவு இன்றி சாத்தியமில்லை. அவர்களுடனான ஒன்றுபட்ட செயற்பாடன்றி சாத்தியமில்லை இதுதான் உண்மை" இது போன்று மாறனும் தமிழ் பாட்டாளிகள் கட்சி ஆட்சி அமைக்கும் என்பதற்கு ஆதாரத்தைக் கோருகின்றார். இது எப்படி எந்த ஆய்வு ஊடாக? இங்கு தமிழ் தேசிய இனம் போராடுவது என்பது இவருக்கு தவறாகப் படுகின்றது. ஐக்கியப்பட்ட புரட்சிக்கு ஒரு அமைப்பு உருவாகும் வரை தமிழ் மக்கள் அமைதிகாக்க வேண்டும். அதற்கு ஊடாக இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி என்ற ஒன்று உருவாகும் வரை மக்கள் இனவாத அழிப்புக்கு உட்பட்டு அழிய வேண்டும். ஒரு பிரதான முரண்பாட்டின் இருப்பைப் பார்க்க முடியாத இவர் ஒரு கற்பனை இலங்கைப் புரட்சிக்கு அறைகூவல் இடுகின்றார். இருக்கும் பிரதான முரண்பாட்டின் அடிப்படையிலேயே எந்தத் தீர்வையும் பெறமுடியும்.

தமிழ் மக்கள் சரி, இலங்கை மக்கள் சரி விடுதலை பெற குறிப்பாக இந்திய மக்களின் புரட்சி, ஒத்துழைப்பு அவசியம். அல்லது உலகில் பெரிய நாடுகளின் புரட்சி அவசியம். இந்தியா புரட்சி அல்லது ஒரு பெரிய நாட்டில் புரட்சி நடைபெறும் வரை போராடக்கூடாது என யாரும் வாதிட முடியாது. இன்று எந்தச் சிறிய நாட்டிலும் புரட்சி நடத்தலும் உயிர் வாழ்வதும் கடினம் என்பது யதார்த்தம். இது இலங்கை , தமிழீழம் எனத் தொடரலாம். எழும் போராட்டமும், அதன் வெற்றிக்கும் உழைப்பதே பாட்டாளிகளின் கடமை. அதற்கு ஊடாக தொடர்ந்தும் பாட்டாளி வர்க்க ஆட்சியை காப்பாற்ற போராட வேண்டும். இது முழு இலங்கைப் புரட்சி எனினும், தமிழீழப் புரட்சி எனினும் பொருந்தும். ஒரு முரண்பாட்டின் வெற்றியை யாரும் கொச்சைப்படுத்த முடியாது.

" சுயநிர்ணய உரிமை சமன் பிரிவினை என்கின்றனர் " எனில் நீங்கள் சுயநிர்ணய உரிமை சமனில்லை பிரிவினை என வாதிடுகின்றீர்கள். சுயநிர்ணய உரிமை பிரிவினை, பிரிவினை அல்லாத இரு நிலையைக் கொண்டது. இது எந்த சந்தர்ப்பத்தில் எது நடக்கும் என்பதை அங்கு உள்ள கட்சியின் பலம், பலவீனத்துடன் தீர்மானிக்கப்படுகிறது. பிரிவினை எப்போதும் பூர்சுவா தேசிய வாதமாக இருப்பதில்லை. பெரும் தேசிய இனம் பிரிவினையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்த நிலையில் பிரியின் மட்டும் பூர்சுவா தேசிய வாதமாக இருக்கும். இன்று இலங்கையில் பெரும் தேசிய இனம் அங்கீகரிக்காத நிலையில் பிரிவினை பூர்சுவா தேசிய வாதமாக மட்டும் இருக்க முடியாது. அது பாட்டாளிகளின் கோரிக்கை கூட.

"......... அந்நிய ஏகாதிபத்திய, மேலாதிக்க சக்திகளுக்கு எதிராகவும் அவர்களால் ஊட்டி வளர்க்கப்படும் பேரினவாத பாசிச UNP அரசுக்கு எதிராக சிங்கள உழைக்கும் மக்களுடனும், ஜனநாயக சக்திகளுடனும் ஏனைய சிறுபான்மை இனங்களுடனும் ஐக்கியப்பட்டு போராடுமாறு " நிச்சயமாகப் போராட வேண்டும். தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான கட்சியாக இருந்தபடி மற்றைய இன மக்களுடன் ஐக்கியப்பட்டு போராடுவதுடன், அவர்களின் போராட்டத்தை ஆதரிக்கவும் வேண்டும்.

59 ம் பக்கம் பார்க்கவும்

www.tamilarangam.net

# உயிர்ப்பின் திசை மாற்றம்

எமது போராட்டத்தின் தேக்க நிலையை களையப் புறப்பட்டு திசை மாறிய உயிர்ப்பு தேக்கநிலையை காப்பாற்ற குரல் கொடுத்துள்ளனர். சமர் மீதும் பெயர் குறிப்பிடாத, கருத்து அற்ற விமர்சனத்தை முன்வைத்துள்ளனர். அதே இதழில் மார்க்சிய அடிப்படையை நிராகரித்த கருத்துக்களை வெளியிட்டு அது தொடர்பாக தமது கருத்தை முன்வைக்காது ஐரோப்பாவில் வரும் பத்தோடு பதினொன்றாக தாமும் மாற முயன்றுள்ளனர். மார்கிய அடிப்படையை நிராகரித்த கருத்துக்களை நாம் அடுத்த சமர் 10 விமர்சனத்துக்கு எடுத்துக் கொள்கின்றோம்.

அடிப்படை மார்க்கியத்தை உயர்த்துவதை வரட்டுவாதம் எனவும், நாம் வைத்த திட்டம் தள்ளியல்பானது எனவும், சீரழிந்த பிரமுகர் புத்திஜீவிகளுக்காக வக்காலத்து வாங்கியும், திரிபுவாதத்துக்கு வக்காளத்து வாங்கியும், தமது விமர்சனத்தை செய்தவர்கள் இவைகளை கருத்தியல் ரீதியில் புரியவைக்க முடியாதவர்கள் தமது முகங்களை இனங்காட்டியுள்ளனர்.

நாம் தவறு இழைக்கும் பட்சத்தில் அதை தத்துவார்த்த விளக்கங்களுடன் புரிய வைக்க வேண்டும் எம் மீதான சொற்களுடன் மட்டும் அமைந்த விமர்சனத்துக்கு பதில் முக்கியமானதும், தீர்க்கமானதுமான தத்துவாத்த விவாதத்திற்கு உரிய இவ்விடையத்தை, வெறும் சொற்களுக்கு அப்பால் நகர்த்த முடியாது போயுள்ளனர். இதன் பின் கோட்பாட்டு விவாதம் முக்கியத்துவம் எனக்கோரின் அது நகைப்புக்குரியதே. இது மனிதத்திடம் இருந்து வாந்தியெடுத்து தம்மை அவர்கள் உடன் இணைத்தற்கு அப்பால் ஒரு அடியைக் கூட முன்வைக்கவில்லை.

தேசிய சக்திகள் தொடர்பான விவாதங்களின் விளைவுகளை இன்று திரும்பிப் பார்க்கும் எவருமே திருப்தியுற முடியாதென தமது அங்கலாய்ப்பை உயிர்ப்பு வெளிப்படுத்தி உள்ளனர். விவாதங்களின் விளைவுகள் உங்களுக்கும் மார்க்கிய விரோதிகளுக்கும் திருப்தியுறுவதாக எப்போதும் அமையவேண்டும் என்பது கருத்தியல் மறுப்பே. புலிகள் தரகு முதலாளித்துவப் பிரிவா, தேசிய முதலாளித்துவப் பிரிவா உதிரி முதலாளிகளா, வர்க்கம் மற்ற குழுவா ---- எனத் தொடர்ந்த விவாதம் ஒருமித்த முடிவை வந்தடைய முடியாது. அப்படி எதிர்பார்ப்பது வர்க்க இருப்பை மறுப்பதே. இக்கருத்தை விவாதத்துக்கு அப்பால் அதன் அடிப்படையில் கருத்தை இன்று முன்வைக்கின்றனர். இவர்களுடனான உறவு என்பது ஒரு கட்சியாக அமையாது அவர்களுடனான உறவின் கீழ் இருந்து கட்டும் ஐக்கிய முன்னணி, மேல் இருந்து கட்டும் ஐக்கிய முன்னணியில் மட்டும் ஐக்கியப்படமுடியும்.

இவ் விவாதம் அதிகம் முன்னேற முடியாது போனது என்பது தரகு முதலாளித்துவம் இல்லை என விவாதிக்க முற்பட்டவர்கள் தமது கருத்துக்களை வாதிட தர்க்கப் பலம் இன்றி மௌனமாகியுள்ளனர். ஆனால் அவர்கள் தத்தம் கருத்தில் செயல்படுகின்றனர்.

ஐக்கியத்தை கோரியவர்கள் தமக்குள் வேறுபாடுகளை அதிகரித்து செல்வதாகவும், தேக்கத்தை உடைக்கக்கோரியவர்கள் தேக்கத்தை அடையும் அவலம் நிலவுவதாக அவலப்பட்டபடி கூறியுள்ளனர். ஐக்கியம் என்பது அடிப்படை மார்க்சியத்தின் மீதுமட்டுமே, இதை வேண்டுமெனில் உயிர்ப்பு வரட்டுவாதம் எனக்கூறட்டும். இதை வரட்டு வாதம் எனக்கூறின் கடந்தகால இயக்கங்களின் விளைவுகளையே மீண்டும் மார்க்சியத்தை கூறியபடி பெறுவர். இதில் சமர் உறுதிபடக் கூறிநிற்கின்றது. தேக்கத்தை உடைக்க முனைந்தவர்கள் தேக்கத்துக்கு உள்ளானார் என்பதற்கு சமரின் நடைமுறையே உங்களுக்கு பதில் அளிக்கும். நாம் தேக்கத்தை உடைப்பதில் முன்னேறியுள்ளோம். அதுபோல் ஐக்கியப்படுத்துவதிலும் முன்னேறியுள்ளோம். இவை உண்மையில் தேசத்தின் மீது அக்கறையுள்ள அனைத்து தரப்பின் முன் முயற்சியுடன் மேலும் வளர்த்து எடுக்கப்பட வேண்டும் அல்லவா.

இன்று கோட்பாட்டு விவாதம் வெறுமனே தர்க்கப்பதிலிலும் சாதாரண பொதுப் புத்திமட்டத்திலும், விவாதங்களின் பழையகருத்தும், சாதாரண



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தகவல்களுமே மாறி மாறி ஒருவித சொற்களின் விளையாட்டே நடை பெறுகின்றது. முடியாத போது உரத்த குரலில்பேசுவதன் மூலம் இது ஈடுசெய்யப்படுகிறது. அதுவும் போதாத போது கிண்டல், கேலி, முத்திரைகுத்தல் சேறுபூசுதல் என்ற போய் நேரடித் தாக்குதலாக இது மாறி விடுகின்றது என உயிர்ப்பு எந்த அரசியல் விளக்கமும் இன்றி பிற்போக்கு அரசியலையும், கருத்தையும், நியாயப் படுத்த தம்மால் முடிந்தளவு வெறும் சொற்களுக்கூடாக உழைக்க முயன்றுள்ளனர்.

வெறும் சொற்களாக விளக்கமற்ற விமர்சனத்தை சமர் இலகுவாக அம்பலப்படுத்தி விடமுடியும். தர்க்க பலம் என்பது என்ன? தர்க்கம் என்பது ஒரு கருத்தின் மீதான விவாதமே. தர்க்கம் என்பது கோட்பாட்டுடன் கூடிய கருத்துக்களே. எக்கருத்தையும் விவாதத்துக்கு ஊடாகவே வெற்றி கொள்ள வேண்டும். நாம் தர்க்கப் பலம் மூலம் எமது கருத்தை நிலைநாட்டுவதை ஏற்ற உயிர்ப்பு தொடர்ந்து கிண்டல், கேலி, முத்திரை குத்தல், சேறுபூசுதல், தாக்குதல் என சொல்ல வருவது அர்த்தமற்ற முரண்பாட்டுடன் கூடிய வெறும் சொற்களே. தர்க்கப்பலம் மூலம் கருத்தை நிலைநாட்டுவதை நிராகரிப்பது என்பது கருத்தியல் மறுப்பாகும் பொதுப்புத்தி மட்டத்தில் கருத்துக் கூறுவது என புத்திஜீவியாக நின்று கேலி செய்துள்ளனர். ஒரு மனிதன் தனது அறிவில் இருந்தே கருத்துக் கூறமுடியும். அதுவே அவனது கருத்துச் சுதந்திரம். அதை வெறும் பொதுப் புத்திமட்டம் எனக்கூறி கேலி செய்து விமர்சிக்கமறுப்பது என்பது தம் போன்ற புத்திஜீவிகள் கருத்துக்கூற மற்றவர்களை கைகட்டி கேட்கக்கோரும் கருத்தியல் மறுப்பே. உங்கள் கருத்துக்களை சமரின் பொதுப் புத்திமட்டம்(நீங்கள் கருதும்) விளங்கப்படுத்தி தர்க்கப்பலம் மூலம் மேவியுள்ளது. இதையே தர்க்கப்பலம் மூலம் கருத்தை சொல்வதாக அவலப்பட்டு உள்ளர்கள். நாம் கருத்தை கருத்துக்கள் மூலம் தர்க்கப்பலத்தை சார்ந்தே நிற்போம். இதற்கு மாறாக கருத்தை எதிர்கொள்ள தர்க்கப்பலத்தை நிராகரித்து கடந்தகால தங்கள் இயக்க அனுபவத்தை வைத்து ஆயுதம் மூலம் பதில் சொல்ல சமரை கோருவதை நிராகரிக்கின்றோம்.

விவாதத்தில் பழைய கருத்தும், சாதாரண தகவல்களுமே மாறி மாறி ஒரு வித சொற்களின் விளையாட்டே நடைபெறுகின்றது என உயிர்ப்பு கூறியுள்ளனர். எமது அடிப்படை மார்க்சியம் பழைய கருத்து எனின், அதையே எல்லா விடயங்களிலும் பயன்படுத்துவதை நீங்கள் நிராகரிக்க கோரின் உங்கள் புதிய கருத்தை, தத்துவத்தை முன்வைக்க சமர் கோரிநிற்கின்றது. அதைவிடுத்து மார்க்சியத்தை பழைய கருத்து என மனிதத்துடன் சேர்ந்தும்,மார்க்சிய விரோதிகள் உடன் சேர்ந்தும் ஒப்பாரிவைப்பதில் எந்த அர்த்தமும் கிடையாது நாம் சாதாரண தகவல்களை வைக்கின்றோம் எனின் அதைவிட முன்னேறி முக்கிய தகவல்களை முதலில் முன்வையுங்கள். அதன் பின்பே எம்கருத்தை சாதாரண கருத்து எனச் சொல்ல முடியும். எமக்கு தெரிந்த கருத்தையே நாம் சொல்ல முடியும் இதை வெறும் சாதாரண கருத்து என கேலி செய்வது கருத்தியல் மறுப்பே. உங்கள் முக்கிய கருத்தை முன்வைத்து எமது சாதாரண தர்க்கப்பலம் உள்ள கருத்தை தவிடுபொடியாக்குங்கள். அதைவிடுத்து சொற்களுடன் கூடிய விவாதம் நடத்துவதில் எவ்விதப் பயனும் கிடையாது.

ஒரு வித சொற்களை நாம் திரும்பத் திரும்ப பயன்படுத்துகின்றோம் என்பது அடிப்படை மார்க்சியத்தையே. இதைப் பயன்படுத்துவதை முடியாதபோது இதை உயர்த்திப் பேசுகின்றோமாம். எமது சாதாரண கருத்து பொதுப் புத்தி என்பன மற்றவர்களின் கருத்தை தர்க்கரீதியில் முறியடித்து விடுவதால் அதை உயர்த்தி பேசுவதன் மூலம் சாதித்ததாகவும், இதை கிண்டல், கேலி, முத்திரை குத்தல் சேறுபூசுதல் என்பனவூடாகவும் சாதித்ததாகவும், தர்க்கப்பலமின்றி, கோட்பாட்டு விவாதமின்றி அவலப்பட்டு கூறியுள்ளனர்.

"பல்வேறுபட்ட தரப்பினருமே முகம் கொடுக்கும் பல தரப்பட்ட கோட்பாட்டுப் பிரச்சனைகளுக்கும் தீர்வுகண்டு அனைத்து தரப்பினரையும் மேவிச் செல்லக்கூடிய சித்தாந்த மேலாண்மையை உருவாக்குவதன் மூலமே முன்னேறிய பிரிவினரின் இணைவு எனும் பிரச்சனை தீர்க்கப்பட முடியும்." என்ற உயிர்ப்பின் வாதம் சமரசவாதமே. கடந்த காலங்களில் புரட்சி வெற்றி பெற்ற நாடுகளில் கூட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புரட்சிக்கு முன் இது சாத்தியமானதாக இருந்ததில்லை. அப்படி செய்ய எண்ணிய நாடுகளின் கட்சிகள் சமரசவாத--- அழிவையே நாடி போராட்டத்தை அழித்தனர். சமுக முரண்பாடுகளை மறுக்கும் இவ்விவாதம், முன்னேறிய பிரிவினர் எல்லோரையும் ஒரு வர்க்க அடிப்படையாக இனம் காணப்புறப்பட்டு உள்ளனர். உண்மையில் அப்படி அல்ல. மாறாக பல்வேறுபட்ட வர்க்கம் சார்ந்த முன்னேறிய பிரிவினர் உள்ளனர்.

அனைத்து தரப்பினரையும் மேவிச் செல்லும் சித்தாந்தம் என்பது சந்தர்ப்பவாதச் சித்தாந்தமே. ஏன் எனின் அவர் அவர்களின் கருத்துக்களை தீர்வு கண்ட சித்தாந்தம் என்பதால் இவர்கள் ஒரு கட்சியாக பரிணமிக்க முடியாது. இது இரண்டு வகையான ஐக்கிய முன்னணிக்குள் மட்டும் ஐக்கியப் படக்கூடியவர்களாக இருப்பர்.

இன்று கோட்பாட்டுப் பிரச்சனை என்பது பலவர்க்கக் கருத்தைக் கொண்டது. மார்க்சியத்தை எற்பவர்கள் திரிபு என்ற கோட்பாடு உள்ளதை ஏற்பதையும் அதற்கு எதிராக போராடவும் வேண்டும். இதை ஏற்க மறுப்பவர்கள் மீண்டும் ஒரு புலியை உருவாக்குவார்கள். இதை மறுக்க உயிர்ப்புக்கு முடியுமா?

உயிர்ப்பு எமது நடவடிக்கைகளை தன்னியல்பானது என்கின்றனர். அது நாம் வைத்த திட்டத்தையே மையமாக வைத்து எழுந்த அவலக் குரலே. இது மக்களுக்கு பிரயோசனமானதாக இருந்தாலும் பிரயோசனமற்றது. ஏன் எனில் கோட்பாட்டுப் பிரச்சனையே முக்கியமானது எனக் கூறியுள்ளனர். கோட்பாட்டு விவாதம் முக்கியமானது எனக் கூறியவர்கள் எம் மீதான விமர்சனத்தை கோட்பாட்டுரீதியில் நிகழ்த்த முடியாது போயுள்ளனர். கோட்பாடு எவ்வளவு முக்கியமானதோ அதே போல் ஒரு திட்டமும் முக்கியமானது. நீங்கள் 70 வருடம் கோட்பாட்டு வளர்ச்சியில் பின் நிற்கின்றீர்கள் என்பதால் நாம் திட்டத்தை வைக்க கூடாது என்பது அர்த்தமற்றது. புரட்சிகர அடித்தளத்தையிட ஒரு திட்டம் அவசியமானது. திட்டம் ஒன்றின் மீதும் கோட்பாட்டு விவாதம் நடைபெற முடியும். திட்டம் ஐரோப்பாவுக்கு ஆனது அல்லவென்ற போதும் ஐரோப்பாவில் உள்ள முற்போக்கு பிரிவினரை அணிதிரட்ட இத்திட்டம் வழியமைக்கின்றது. ஐரோப்பியாவில் முன்னேறிய பிரிவினர் என கூறிக்கொள்வோரில், இன்று ஆதிக்கத்தில் உள்ள பம்மாத்து பிழைப்புவாத அரசியலை நடத்தும் இன்றைய நிலையில், உண்மையில் புரட்சியை நேசிக்கும் குரல்கள் அடக்கப்பட்டு உள்ள இன்றைய நிலையில் இத்திட்டம் அவர்களை ஸ்தாபனப்படுத்தி பிழைப்புகளை அம்பலப்படுத்தி மக்கள் மத்தியில் சரியான அரசியலை எடுத்துச்செல்ல இத்திட்டம் மிக அவசியமானது. இத்திட்டத்தின் அடிப்படையில் உடன்படக்கூடிய சக்திகளை இத்திட்டம் ஒன்றிணைப்பின் அதை தன்னியல்பானது எனக்கூறி ஐக்கியத்துக்கு எதிராகவும், தேக்கத்தை பேணவும் உயிர்ப்பு குரல் கொடுக்க முனைந்துள்ளனர். இதற்கு மாறாக சித்தாந்த மேலாண்மை பெற்ற எல்லோரையும் அணிதிரட்ட முனையும் இலக்கியச் சந்திப்பாகவுள்ள புகழ்பாடும் வடிவத்தையும், பிழைப்புவாத பிரமுகர்களையும் காப்பாற்ற முனைந்துள்ளனர். உயிர்ப்பு குறிப்பிட்ட தன்னியல்பு தொடர்பாக பொதுவாக பார்ப்போம். ஒருஅடிப்படை திட்டம், கோட்பாடு இன்றி வெளிவரும் கருத்துக்கள், நடவடிக்கைகள், அனைத்தும் தன்னியல்பானதே. இந்த வகையில் கடந்த கால எம் போராட்டத்தின் நடவடிக்கைகள் தன்னியல்பானதே. இதில் NLFT, PLFT மட்டும் சரியானதோ, பிழையானதோ ஒரு திட்டத்தின் அடிப்படையில் செயற்பட்டவர்கள். இன்று திட்டம் இல்லாத நிலையில் நடைபெறும் ஒவ்வொரு போராட்டமும் ஆதரிக்கப்பட வேண்டியவை. இவைகளில் இருந்தே முன்னணி சக்திகள் உருவாகுவர். மக்களின் தன்னியல்பான போராட்டங்களே ஒரு கட்சியின் தேவையை பறைசாற்றி நிற்கும். கட்சி உருவாகும் வரை தன்னியல்பான போராட்டங்களை நிறுத்தக் கோரின் சுரண்டுபவர்களுக்கும், அடக்கு முறையாளருக்கும் துணைபோவதே. தன்னியல்புப் போராட்டத்தின் ஊடாகவே சமாந்தரமாகவே கட்சி உருவாக முடியும். இன்று வெளிவரும் அனைத்து சஞ்சிகையும் தன்னியல்பானதே. இது உயிர்ப்புக்கும் பொருந்தும் ஏன் எனில் எந்த அரசியல் மீதும், கோட்பாட்டின் மீதும், ஒரு திட்டத்தின் மீதும் ஒரு வரையறையை கொண்டிராத தன்னியல்பான எல்லா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விதக் கருத்திளையும் கூறுபவர்களே. சமர் மட்டும் ஒரு குறித்த திட்டத்தின் அடிப்படையில், கோட்பாட்டு அடிப்படையில் தன்னியல்பை முறித்துக் கொண்ட ஒரே சஞ்சிகை. இது ஐரோப்பவில் உள்ளதே வேதனையானது. இது மண்ணில் காலைவைக்கும் போது நடைமுறையில் இயங்கும் ஒரு கட்சியாக மாறும்.

புத்திஜீவிகள் மீதான காட்டுத்தனமான தாக்குதல்கள் சிலரால் மேற்கொள்ளப்படுகின்றது. என்ற உயிர்ப்பு மார்க்சியத்தின் மீதும், அதை உயர்த்துபவர்கள் மீது இப்புத்திஜீவிகள் நடத்தும் தாக்குதலை கண்முடியபடி எம்மீது சேறடிப்பு நடத்துவதன் ஊடாக அவர்களின் தோள்களில் கைகளை போட்டபடி உள்ளனர். பிழைப்புவாத புத்திஜீவிகளில் தவறுகள் இருந்த போதும் அவர்களைப் பயன்படுத்திய ஸ்தாபனங்கள் மீது குற்றம் சாட்டியுள்ளனர். இதன் ஊடாக சாதரணமாக இயக்கத்தில் இணைந்த ஒவ்வொரு போராளியையும் புத்திஜீவிகளையும் ஒப்பிட்டுள்ளனர். இதன் ஊடாக யாரோ சில புத்திஜீவிகளை எதிர்காலத்தில் காப்பாற்ற, தலைமைக்கு கொண்டுவர முயலும் வாதமே. இப்புத்திஜீவிகளை இயக்கங்கள் பயன்படுத்த முனைந்து தவறு இழைத்தனரா அல்லது மாறாக இப்பிழைப்புவாத புத்திஜீவிகள் இவர்களைப் பயன்படுத்தினரா என்பதே உயிர்ப்புக்கும் எமக்கும் இடையிலுள்ள கருத்தின் அடிப்படை பிரச்சனையாகும். பிழைப்புவாதப் பிரமுகர்கள் கடந்தகால இயக்கங்களைப் பயன்படுத்தி அவ்வியக்கங்களின் செயற்பாட்டுக்கு தத்துவமுலாம் பூசி, தாம் பிழைத்துக் கொண்டவர்களே. ஒருவன் திருந்தமாட்டான் என்று சமர் வாதிடவில்லை. ஒருவன் திருந்தும் போது கடந்தகால தனது நடவடிக்கைகள் மீது விமர்சனத்தை செய்ய வேண்டும். இல்லாத போது மீண்டும் முற்போக்கை சிர்குலைக்க முனையும் ஒருசெயற்பாடே. அதுவே இன்று நிகழ்கின்றது.

புத்திஜீவிகள் முதல் யாரை அணிதிரட்டுவது எனினும் ஒரு திட்டத்தின் அடிப்படையில் மட்டுமே சாத்தியம். அணிதிரட்டலுக்கு வரமறுக்கும் புத்திஜீவிகளை பயன்படுத்த வேண்டின் அவர்கள் மார்க்சியத்தின் மீது தாக்குதலை நடத்தாமல் இருக்க வேண்டும். இதை மறுப்பின் பாலசிங்கம், நித்தி, வாசுதேவன், சிவராம், சுரேஸ்(EP), ஜெயபாலன், சிவசேகரம், சூரியதீபன், ....எனத்தொடரும் பிழைப்புவாத சிரழிவுப் பிரமுகர்களே அமைப்பை பயன்படுத்தி போராட்டத்தை சிரழிப்பர்.

இப்பிழைப்புவாத சிரழிவு பிரமுகர்களே இன்று ஐரோப்பாவில் உயிரோட்டம் உள்ள உண்மைப் புரட்சியாளர்களின் குரல்களை அடக்க தமது மாணவர்கள் ஆக்க முனைவதை இன்று பலருக்கு புரிய வந்துள்ளது. இது உயிர்ப்புக்கு புரியாமல் போனது அல்ல. மாறாக அவர்களின் அரசியல் இதைக் கோருகின்றது.

தமிழீழப் போராட்டத்தை பொறுத்தவரை கோட்பாட்டு ரீதியில் பல பத்தாண்டுகள் பின்தங்கி நிற்பதாகவும், தேசியவாதம் தொடர்பாக 70 வருடங்கள் பின்தங்கி நிற்பதாக தமது அவலத்தை உண்மைக்கு மாறாக கூறியுள்ளனர். இன்று கோட்பாட்டுப் பிரச்சனை மேலும் மேலும் செழுமைப்படுத்தப்படும் தேவையுடன் மட்டும் தமிழ் புரட்சியாளர்களின் கோட்பாட்டு வளர்ச்சியுள்ளது. இதை மறுக்க முனைவது ஏன் எனில் அடிப்படை மார்க்சியத்தை குழிதோண்டி புதைக்க முனையும் நோக்கிலேயே. தேசியவாதம் 70 வருடங்கள் பின்தங்கி நிற்கின்றோம் என்றவாதம் லெனினின் அடிப்படை மார்க்சியம் மீது சேறடிப்பை நிகழ்த்த எழும்வாதமே. அதுதான் இவ் உயிர்ப்பில் உள்ள கட்டுரைகளில் தேசிய வாதம், பொருளதாரவாதம் இல்லையாம், மார்க்சியம் தேசிய வாதத்தை கவனிக்கத் தவறிவிட்டதாம்----- என்ற இக்கருத்துக்களை காப்பாற்ற 70 வருட வளர்ச்சி இல்லை என அவலப்பட்டுள்ளனர்.

எமது விமர்சனம் தவறான வழியில் போகின்றது எனின் அதைக் கோட்பாட்டிற்கு உட்பட விவாதிக்கக் கோருகின்றோம். அதைவிடுத்து வெறும் சொற்கள் ஊடாக விமர்சிப்பின் எம்மால் தவறை இனம் கண்டுவிட முடியாது.

அடிப்படை மார்க்சியத்தை வினாக்கள் இன்றி நிராகரிப்பின், வறட்டு வாதம் என வாதிடின் சமர் அதற்காக போராடும். மார்க்சியத்தை எந்தக் கோணத்தில் எந்த வர்க்கம் சார்ந்து எப்படிப் பயன்படுத்தினும் அதை அதன் ஊடாக சமர் அம்பலப்படுத்தும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்சி, முன்னணி, வெகுஜன ஸ்தாபன அமைப்பு வடிவங்கள் தொடர்பாகவும், அவைகளுக்கு இடையிலான உறவு தொடர்பாகவும் சமர் ஒரு கருத்தைக் கொண்டுள்ளது. இவ் அமைப்பு வடிவங்கள், கருத்துகள், விமர்சனங்களின் வீச்சுகள் என அனைத்தும் மாறுபட்டது என்பதை சமர் ஏற்றுக் கொண்டுள்ளது. வர்க்கமற்ற குழு, பொருளாதாரவாதமற்ற தேசியவாதம், தேசியத்தை மார்க்சியம் விளக்கவில்லை (அதாவது நிராகரிகின்றது) எனத் தொடரும் மார்க்சிய விரோதக்கருத்துக்களை மார்க்சியத்தின் வளர்ச்சியான கருத்து என உயிர்ப்பு வாதிட முடியுமா என சமர் கோருகின்றது. இல்லை எனில் இது எந்த வர்க்கக் கோட்பாடு என சமர் கோருகின்றது. நாம் இங்கு கருத்தையே கோருகின்றோம். இவ்முற்போக்குள் உள்ள விமர்சனங்களை ஸ்தாபனமாக இணையமுடியாத கருத்துப் போக்கில் எப்படி விமர்சிப்பது, விமர்சிக்கக் கூடாது என்பது எந்த அரசியல்?.

54 ம் பக்க தொடர்ச்சி

தமிழ் மக்களின் போராட்டம் வெறும்.........

இங்கு ஒரு கட்சியாக மாற சிங்கள மக்கள் தம்மை இனம் காட்டி ஸ்தாபனமாக இருக்க வேண்டும். இதன் வளர்ச்சியில் ஒரு கட்சியாக மாற முடியும். இதை நிராகரித்து ஒரு கட்சிக் கோட்பாட்டை இன்றே உயர்த்தக் கோரின் EPRLF, EROS வைத்த மலையகம் உட்பட்ட ஈழமாக எந்த அர்த்தமும் அற்றதாகவே இருக்கும். இவர்களின் பிழையான அரசியலுக்கு அப்பால் தமிழ் மண்ணில் இவர்களுடன் இணைந்த சக்திகள் போல் மலையகத்தில் எந்தச் சக்தியையும் அணிதிரட்ட முடியவில்லை. மலையகத்தில் இவர்கள் வேலை செய்ய முடியாது போனதுடன் அவர்கள் இவர்களை ஏற்றுக் கொள்ளவும் தயாராக இருக்கவில்லை.

ஒரு சிறுபான்மை தேசிய இனம் பிரிவினையைக் கைவிட்டு சுயநிர்ணய உரிமையில் உள்ள பிரிவினை அல்லாத ஐக்கியப்பட்ட புரட்சியை முன்னெடுக்க பெரும்பான்மை தேசிய இனம் பிரிவினையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து இருக்கவேண்டும். அப்போது மட்டுமே பிரிவினையைக் கைவிடக் கோருவதுடன் ஐக்கியப்பட்ட புரட்சியை நடத்தவும் முடியும். இது இன்று அல்ல எதிர்காலத்துக்கு உரிய பிரச்சனையாக மட்டுமே இருக்க முடியும்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆயிரம் கவிஞர்களின்
# கவிதைத் தொகுதியைப்
# படிக்கும் வேளையில்

●

அன்றைய கவிஞர்
இயற்கை அழகைப் பாடினார்.
பனிப்படலங்கள், பட்டுப் பூக்கள்
பால்நிலா, பாடிவரும் தென்றல்
பொழியும் மழைத்துளிகள்,
பச்சை வண்ண மலைத் தொடர்கள்,
பாயும் ஆறுகள்—அவர்களின்
பாடல்கள்
இவைகளைத் தொட்டன.

ஆனால்......
இரும்பும் எஃகுமே
இன்றைய நிலையில்—நமது
பாட்டின் இதயக் கருப் பொருட்கள்!

கவிஞனின் பணி—
கவிதை மட்டுமா......?
ஒரு போராட்டத்தைத் தலைமை ஏற்று
நடத்தவும் வேண்டும்.

—ஹோ-சி-மின்

வெளியீடு – தமிழ் அகதிகள் இலக்கிய வட்டம்

(பதிவு செய்யப்பட்டது – 3/16956)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்